உ

ஓம் - தத் - ஸத்.

வேதாந்தசாரமென்னும்

பிரமானந்தக் கீர்த்தனை.

இஃது

மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகளின்

பக்தர்களாலியற்றியதை

மேற்படி சுவாமிகளின் மாணாக்கரும், மடாதிபதியுமாகிய

ஸ்ரீ அத்வைதானந்த சுவாமிகளின்

உத்தரவின்படி

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

K. காசிவிசுவநாதபிள்ளையால்

மதுரை, மனோன்மணி விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1928.

இதன் விலை ரூ [illegible]

ஜிஸ்டர் காபிரைட்.

ஓம்-தத்-ஸத்.

வேதாந்தசார
பிரமானந்தக் கீர்த்தனை.

விநாயகர் துதி.

வெண்பா.

ஐந்து கரமும் அழகியபா சாங்குசமும்
தொந்திவயி றோர்கொம்புந் தோன்றிநிற்கும்—எந்தை
அடிப்போதெந் நாளும்பிர மானந்தக் கீதம்
படிப்போர்க் கருளும் பரிந்து.

குருஸ்துதி.

எழுசீர்க்கழியாசிரிய விருத்தம்.

சித்தியி னோடு முத்தியை யருளுஞ்
சித்திமா முகன்திரு வடியைப்
பத்தியி லுருகும் பரங்கிரி யிறையைப்
பாண்டியன் குமரியாய்ப் பரவுஞ்
சத்தியைக் கயற்கண் ணம்மையைச் சகத்தின்
தந்தையாஞ் சுந்தர னடியைச்
சித்துருவான பிரமவா னந்த
தேசிகன் றனைத்தினம் பணிவாம்.

அறிவுரு வாகத் திருவிழி விழித்த
வழகினைப் போற்றிசெய் திடுவோம்
மறையருள் பொருளை மலர்திருள் கடியு
மதிமுக நிதியையேத் தெடுப்பாம்
குறைமிக நிறையும் கொடிய வெந்தமையாட்
கொண்டசெஞ் சேவடிப் பணிவாம்
நிறையுறு பிரம வின்பமர் முனியே
நின்னையே வணங்கிவாழ்ந் திடுவோம்.

இலக்கண் விருத்தி முதலிய நூல்க
ளொன்றுமிலா, யூகங்க ளியற்றி
அலக்கவே யுறுத்த பிரமவானந்த
வாரிய வடியினை போற்றி

மலக்குணோர்க் கிரங்கியே யகமதிடுமிருந்து
மானுட மாகியே திரிந்த
சலக்கனை யடைந்துப் பிரமாவின் பதனைத்
தருந்திரு வடியினை போற்றி.

தருமமெய் யுணர்ந்த தவத்தருஞ் சிவத்திற்
றங்கிய மனமுனி வரரும்
விரமம தடைய விரவிவாழ் மதுரை
வியன்பதி விளங்கிய குருவே
குருமக ராயன் குளிர்மல ரடிகள்
குலவிவாழ் குணகன மிருந்தோய்
பிரமநல் வடிவப் பிரமவா னந்தப்
பெருந்தகை நின்பதந் தொழுவேம்.

நினது சன்னிதியி லடைந்தவ ரெவரு
நின்மொழி யமுதினை மாந்தித்
தனதுரு வடைத னியமமே யாகத்
தமியவேன் றயங்குத லலனே
மனதுருகிட மெய்ஞ் ஞானமே யருளு
மாண்பினில் வசிஷ்டனே என்னுந்
தினதனும் புகழுந் தேசிகோத் தமநின்
றிருவடி தொழுதுவாழ்த் திடுவேம்.

எந்தைநின் னெழிலுந் திருமுகப் பொலிவு
மினியநன் மொழியிசைத் திடனும்
சிந்தையின் கனிவுஞ் சிந்தை செய்தோருஞ்
சிந்தனைத் துருகுவன் கண்டாய்
மைந்தரா புமது மலரடி தலையில்
மன்னிட வென்ன நோற்றனமோ
பந்தம தகற்றும் பிரமவா னந்தப்
பரம்பொருள் பதமலர் போற்றி.

ஓம்-தத்-ஸத்.

சுலோகங்கள்.

போதானந்தகனம் நிரஸ்தஸகலம் காருண்ய பூர்ணேக்ஷணம்
மூடானும் உபதேஸகம்ச ஸததம் பாபாத்மனும் பாபஹம்
வைராக்யம்ச விராகினும் ஷுககரம் ஸம்பாதகம் ஸர்வதா
ஸ்ரீமத்தேவிக ராமலிங்கபதினம் மூடாத்ம கோஹம்பஜே.

வேதாந்தார்த்த விபாஸ காயகுராயே ஸாந்தாய ஸன்யாஸினே நாகாசவாதி நகேந்திரஸங்க பவயேத் யோகேந்திர வந்தியாயச மோஹாந் திவாந்த திவாகராய பகவத் பாதாம்பிதாம் பிப்ரதே தஸ்மை ஸ்ரீபாஷ்யம் குருதே நமோஸ்து ஸததம் பூர்ணயபோதாத்மனே.

வெண்பா.

துஷ்டருட சங்கந் தொலையாப் பிறவிதந்து
பட்டதுய ரங்கள் பகர்வதற்கு—இஷ்டமுள்ள
மெய்ஞ்ஞானம் சித்திக்க வேண்டும் அருள்புரியும்
சுக்ஞான தேசிகரே தோன்றி.

உச்சரிந்தால் போல உபநிடதம் உள்ளுணர்ந்தேன்
அச்சந் தவிர்த்தாளு மையனே—மெச்சுபுகழ்
சித்து ஜடமிரண்டும் சேர்த்தே யுணர்ந்தாலும்
அத்துவிதங் காட்டுமென் பாய்.

இச்சைகளை நீக்கி யியல்சித்தில் சித்தம்வைத்தேன்
பச்சைகொண்டாற் போலப் பலத்துடனே—நிற்சலமாய்
உன்மைமனம் நிற்க வுறுதி தனைச்சொல்லி
வன்மையுடன் வாழ்ந்திருக்க வை.

உன்மையில் நிற்கமனம் ஊக்கமுள்ள சித்ததனை
விண்மதிபோல் மேற்கொண்டு வீற்றிருக்க—கண்கண்ட
பார்வைகளை யெல்லாம் பரமசிவ னென்றுபெயர்
ஆர்வமாய் வைத்தழைத் தார்.

எங்கும் நிறைந்ததுவா யேகவஸ்து வாய்நின்ற
திங்கள்பிர மானந்த தேசிகன்மேல்—அங்கமதாய்
பாடியதோர் அத்வைத பாக்களை யுச்சரித்தோர்
நாடியதைக் கொள்வார் நயந்து.

சத்துவகு ணத்திற் சகமனைத்தாய் நிற்பவனே
யத்தரக மேவும் பசுங்கிளியே—நித்தமதாய்
நிற்குணப நத்தினிலும் நீங்கா திருப்பவனே
சற்குருவே வந்தெனைக்கா சற்று.

விருத்தம்.

வன்ன மாலயமும் போற்ற மதுரையா மென்னுங்கூடல்
தன்னிலே யென்னை யாளத் தருமரு ளுருவாயுற்ற
மன்னனு மராப்பைய மகத்துவ கமலபாதம்
பன்னிய மதுவும்போலப் பாக் களாற்றுதிக்கலுற்றேன்
மாலயன் வணங்கா நின்ற மதுரையம் பதியினின்று
மேலநாமங்களுகி மிகப்புத்தியுற்ற வென்னை
நால்வருக் குபதேசித்த நற்குரு வடிவுபெற்ற
சிவரா மஸ்வத்தேஸர் சிற்சுகமடையச் செய்தான்.

எண்சீர் விருத்தம்.

சற்குருவாய் வந்த அஸ்வத் தேசர் பாதம்
சதாகாலம் பணிந்தருளைக் கொண்டதாலே
பற்பலவாம் வேதத்தின் சாரந் தன்னைப்
பரிவான நல்மதிக்கு நிகரா யுற்ற
விற்பனனு யறிவருவா யெல்லார் தானுய்
விளங்குபத மருள்புரிந்த விமலன் றன்னை
நற்கவிசேர் தமிழும் வடமொழி யினேடு
நான்மறையும் சேர்த்துநான் றுதிசெய் வேனே.

ஜனனமதை யொழித்து விடுஞ்சீவன் முத்தி
க்ஷேத்திரத்தி லவதரித்த பிரமா னந்த
கனநடனம் புரிகின்ற அரன்னீ யென்று
களித்திருக்குமடியேனை யேவல்கொள்ளும்
மனநழுவா வென்றனையு முத்திமார்க்க
மகிழ்ச்சியுடன் போதித்து அறிவைத்தாரும்
தினநிதியாய் மோனவின்ப சுகத்தில் வாழும்
தினமருவ வுமதடியைப் போற்றி னேனே.

நற்றவத்தால் நான்குமுழ வுடற் கொண்டாலும்
நன்னெறியில் நாட்டமிலா நாயேனுகி
உற்றவுண்டி போதாமல் உருசி தேடி
ஊர்சுற்றித் திரிந்ததல்லா லொன்றுங் காணேன்
கர்த்தபமு மென்றனக்கு நிகரே யாகும்
கற்பனைக்கு இருப்பிடமுங் கணிக்கலாகும்
சத்தமுள்ள மெய்ப்பொருளே பிரமா னந்த
சுகவடிவே யென்றனைநீ யாட்கொள் வாயே.

ஈனரையு மிடேற்றும் ஞான பூமி
　　யென்றமொழி பொய்யலவே யிந் தலத்தில்
ஊனமுள்ள வென்றனையும் அப்பூமிக்கு
　　உகந்தெடுத் தாளாக்கி வைத்தாயானால்
கானநீர் நிகரான உலகவாழ் வைக்
　　கணப்பொழுது பொய்யென்று கண்டு கொள்வேன்
ஆனதினால் அடியேன்மேற் கருணைசெய்வாய்
　　ஐயனே சின்மயனே பிரம வந்தா.

சொன்னபொரு ளின்னதென அறியா மூடன்
　　சோம்பலெனும் வாரிதியிற் சோர்ந்து நிற்பேன்
புன்னகைசெய் பிணிதனிலே வாடும் நாடன்
　　பொய்யுலகை மெய்யனவே பிதற்றிச் சொல்வேன்
இன்னபடி பேரின்ப மிருக்கு தென்று
　　இயல்பாகக் காட்டிடினும் அறியாவென்னை
மன்னநிகர் சுகவடிவாம் பிரமானந்தர்
　　மனமிரங்கி யாட்கொண்டு மதிதந்தானே.

சாக்ஷியினா லறிகின்ற ஜகங்கள் யாவுங்
　　கற்பனையாய் வந்ததெனக் கருத்தில் நாட்டி
மாக்ஷிமையாம் பிரமமதை நானேயென்று
　　மட்டில்லா ஆனந்த மடுவிற் கூட்டி
தாக்ஷியில்லா நிஜவுருவாய் நிற்கச் செய்து
　　தற்போதமாறுத நிலைமை பூட்டி
சாக்ஷியாய் நிலைக்கவைத்த பிரமா னந்த
　　சற்குருவை யனுதினமும் பணிக்கின் றேனே.

தன்னைத்தா னறிகின்ற தவத்தைப்போல
　　தரணிதனி லேதுசுக மிருக்கு தென்று
பொன்னைத்தான் புடம்போட்டுத் தங்க மாக்கும்
　　பொதுவான வழியதுபோல் பக்குவஞ் செய்
தென்னைத்தான் அகண்டத்தி னிலைநிறுத்தி
　　யின்பமுள்ள ரசந்தன்னை யெனிதினூட்டிப்
பின்னைத்தான் பிறப்பொழித்த பிரமானந்த
　　பெருமானை யெந்நாளும் பணிகின்றேனே.

மூடவிய வெள்ள வுகுயிந் தள்ளிடாமல்
முத்திபதங் காட்டுதற்கு முகிலாய்நின்றாய்
விடுதலை யென்றனக்கு விரைவிற் காட்டி.
வெட்டவெளியர்மதிலே யிற்றிருக்க
தேடரிய நான்மறையின் பொருளாயுற்ற
திவகரனே யுனக்களிக்கக் கைமாறில்லேன்.
நாடரிய வொன்றாந பிரமானந்த
நண்பனே யுமதடியைப் போற்றினேனே.

நில்லாத என்மனது நிலையாய்நிற்க
நிமிஷத்திற் கிருபைகூர்ந் தருட்கண்சாத்தி
கல்லாத தோஷமதைக் கடிதிற்போக்கிக்
கற்பனையாய் வந்துதித்த காக்ஷிநேக்கி
சொல்லாத சுயவடிவா மறிவைத்தந்து
சுகித்திருக்கும் பிரமவித்து பதத்தில்வைத்து
பொல்லாத பிறப்பொழிந்த பிரமானந்த
பூரணனை யெந்நாளும் பணிகின்றேனே.

இலக்கணநூல் வகையொன்று மறிந்திடாமல்
இன்னமொழி கூடுமென்ற விதங்காணாமல்
துலக்கியதோர் வசனத்தின் பொருளையுற்றுத்
தினையளவுங் கண்டறிய திறமில்லாமல்
பிலக்கவே யிலக்கியத்தால் பாடினேன்யான்
பின்னபதமிருந்திடினும் பொறுத்துக்கொள்வாய்
கலக்கமற வெனையாளும் பிரமானந்த
கருணைகூர்ந்தடியேனை ரக்ஷிப்பாயே.

கோச்சகம்.

நற்குருவாய் வந்துதித்த நாதன்பிரமானந்தன்
விற்பனரூப வதரித்த வேதவடிவுற்றோன்
சற்பனைசெய் மாயையை ஜெயிப்பிவித்தலாலே
நிற்குண சனாதனனாய் நின்றுகொள்ளலானேன்.

வெண்பா.

வான முதையளிப்பான் வள்ளல்பிர மானந்தன்
தானமுது தேடித் தவிர்ப்பார்க்கு—மோனமாம்
இன்பரசம் யாருக்கும் லேசிற் கிடைக்குமோ
நன்மதியி லாதார் நயக்க.

அத்நபரி பூர்ண சுயஜோதிவாம் சத்குருவே
பத்நபரி பால பழம்பொருளே—நித்ய
பதவாழ்வில் யாம்கொண்ட பாங்குனுப வத்தை
இதமா யுரைக்கச்செயின்று.

சுலோகம்.

நாராயணம் பத்மபுவம் வஸிஸ்டம்
ஸக்திம்ச தத்புத்ர பராஸரம்ச வியாஸம்!
ஸுகம் கௌடபதம் மகாந்தம் கோவிந்த
யோகீந்த்ரஸ்ரீ ஸங்கராசார்ய மதாஸ்ய ஸிஷ்யம்
அஸ்தா மலகம்ச
தம்திரோடகம் வார்த்திக காரம்
அஸ்மத்குரு ஸந்தத மானதோஸ்மின்

பிரக்லாத நாரத பராஸர புண்டரீகவியாஸம் பரீஷ
ஸுகஸௌனக பீஷ்ம தால்பியான்
ருக்மாங்கதர் ஜுன வஸிஷ்டபஸிர் விபீஷணாதி
புண்யானிமான் பரமபாகவதான் ஸ்மராமி,

பஞ்சபீடிகா.

இராகம்-நாட்டை-தாளம்-சதுஸ்ரஜாதிஜம்பை.

கண்ணி.

ஜெயசின்மயாகாஸ — ஜெயஜீவ லோகேஸ
ஜெதிவ்ய சொற்பிரகாச — ஜெயசுரமஹேஸ — ஜெயஜெய

ஜெயமோஹதிமிரநாஸ — ஜெயமுனிஹிருதயேஸ
ஜெயபரமஸுககாச — ஜெயபாக்ய தேஜா — ஜெயஜெய

உபதேஸ குருபார — உஜ்ஜ்தபோ தாகார
தபமுனி மனோஹார — தாபஸம்ஹாரா — ஜெயஜெய

அபரிமித சுகஸார — அத்விதியவதார
விபரீத பிராந்திஹார — விகதஸம்ஹார — ஜெயஜெய

அணிமாதிஸுகபேத — அசலாத்ம நந்தபோத
குணிகுணவிஹினபாத — குருஸ்வாமி நாதா — ஜெயஜெய
குணரஹித ஸுகபோத — குருபிரம்மாநந்தநாத
அகணித பிரபாவயுத — அத்யந்த ரஹித — ஜெயஜெய

இராகம்-ஆரபி-தாளம்-திஸ்ர திரிபுடை.

பல்லவி.

ஸாக்ஷுஸாக்ஷு பிரக்ஞான விக்ரஹ
ஸாக்ஷுபந்த விமோசனு

அநுபல்லவி.

ஸாக்ஷுவேதாந்தஸங்கிரஹ ஸாக்ஷுகுருபிரமானந்தா
ஹரேஸ்வாமி குருபிரம்மானந்தா (ஸா)

சரணம்

ஸகலலோகாதாரபூதபிந் ஸௌக்ய மோக்ஷப்ரதாயகா
விகதமோஹ விகாரபந்தன விமலகுருபிரம்மானந்த (ஸா)

தெய்வமுனிஜன பூஜிதாங்கிருஹ திவ்யமங்களவிக்ரஹ
தேவமுனிஜன தேஹதேஹி ஸொரூபகுருபிரம்மானந்த (ஸா)

ஸர்வபாப விநாஸகாரண சர்வதுக்கநிவாரண
ஸர்வஸங்க விவர்ஜிதாகில ஸர்வகுருபிரம்மானந்த (ஸா)

பரமபதவிம் மாஸனருட பஞ்சகோஸவிலக்ஷண
பரமஸுககன பாக்யசின்மய பரமகுருபிரம்மானந்த (ஸா)

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி

ஆதிமத்யாந்த ரஹித அப்பிரமேயா
அமலசுத்ஷ பஹுசர்வேஸா

அநுபல்லவி

போதர்ஜோதிர் மயானந்த சூர்யப்ரகாஸா
ஸுகசாகரந்தே நமோநமோ
பிரம்மா நந்ததே நமோநமோ (ஆ)

சரணம்

ஸனகாதி ஹிருதய கமலமதுஸாரா
ஸத்சித்ஸுக ஸாராம்ஸமயா
வினய விவேக விஞ்ஞான கலேபர
விமலஸரீரதே நமோநமோ (ஆ)

சாதுர்ய போதன ஸௌக்யப்ரதாயகா
சம்பிரதாயமுக்தி சாம்பிராஜ்யா
ஹேதுஸ்வரூப இகபரமார்த்தன
ஏகாந்தநிர்மலதே நமோநமோ (ஆ)

பரமபிரயோசன பரமஹம்ஸாகில
பாவன நாஸன பரமஸு௱கர
ஸிரகாலவேத்ய ஸிதானந்தவிக்ரஹ
ஸிதவா ஹிருதயத்தே நமோநமோ (ஆ)

நித்யநிரஞ்சன நிர்மலவிக்ரஹ
நிரதிஸயாம்புஜ நிர்வாண
ஸத்யஸ்வரூப ஸதானந்த விக்ரஹ
ஸர்வபிரகாஸத்தே நமோநமோ (ஆ)

எச்சரிகா

இராகம்-சாவேரி-தாளம்-ரூபகம்.

கண்ணி

கருணையாலே பிரம்மானந்த ரஸமாகியமதுவைத்
தரவேயெழுந்தருளுந் தயாபரனே எச்சரிகா
பிரமானந்தா எச்சரிகா அஸ்வத்தேஸா- எச்சரிகா

பேரும் முருவமுமற்ற பிரமமேதானுக
கூராயவதரித்த குருநாதா எச்சரிகா

சாவும்பிறப்பற்ற சச்சிதானந்தமாம் ஸு௱கத்தை
மேவும்படியருளும் மூலகுருவே எச்சரிகா

ஏகம் பிரம்மமென்று இருவினையையடித்தோட்டி
மோகமற்றமோக்ஷசுகம் மொழிந்தா எச்சரிகா

ஆனந்தமாங் கடல்தனிலே யமிழ்ந்தே னெப்பொழுதும்
நானியற்ற ஒருமையான நாதா எச்சரிகா

அகங்காரத்தை யடக்கியென்னை யடிமைகொண்டபரனே
அடங்காமன மடங்கச்செய்த அனந்தா எச்சரிகா

அந்தமாதியற்றவஸ்து அஸ்வத்தேச ருருவாய்
வந்துஎந்தன் துவந்தந்தீர்த்த துரையே எச்சரிகா

மங்களம்.

ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

பல்லவி

பரம பாவனதே மங்களம்
பரிபூரண பிரகாசத்தே மங்களம்

அநுபல்லவி

அகளங்கசொரூப அசலாத்மனந்நிபா
விகசிதஞானபுஷ்ப மங்களம் பரிபூரண (பர)

சரணம்

ஸகலலோகாநிப ஸர்வமங்களரூப
ஸகலஸமாதி தல்ப மங்களம் பரிபூரண (பர)
ஜெயஸங்கவர்ஜித ஜெயசமரஸ பூத
ஜெயபங்கஜாகிருத மங்களம் பரிபூரண (பர)
ஜெயசங்கராச்சுத ஜெயஸர்வதேவனுத
ஜெயகுருபிரம்மானந்தா மங்களம் பரிபூரண (பர)

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

கணேஸ மாம்பாஹி பிரமானந்தா
குகேஸ மாம்பாஹி அரஹர
நடேஸ மாம்பாஹி பிரமானந்தா
ரமேஸ மாம்பாஹி அரஹர
சபேஸ மாம்பாஹி பிரமானந்தா
நயேஸ மாம்பாஹி அரஹர
க்ருபேஸ மாம்பாஹி பிரமானந்தா.
ஸகேஸ மாம்பாஹி அரஹர
ஸதீஸ மாம்பாஹி பிரமானந்தா
விதீஸ மாம்பாஹி அரஹர
சுகேஸ மாம்பாஹி பிரமானந்தா
ஹிருதீஸ மாம்பாஹி அரஹர
குணேஸ மாம்பாஹி பிரமானந்தா
மமேஸ மாம்பாஹி அரஹர

---

(7) இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மானஸபஜரே குரு சரணம்
துஸ்தர பவஸாகர தரணம்

மானஸ பஜரே குரு சரணம்
துஸ்தர மாயாவிஷ ஹரணம்

மானச துஸ்தர வநிதாவசஹரணம்
மானஸ துஸ்தர வநிதாரதிஹரணம்
மானஸ துஸ்தர ராகாடவிஹரணம்
மானஸ துஸ்தர த்வேஷாடவிஹரணம்
மானஸ துஸ்தர காமாடவிஹரணம்
மானஸ துஸ்தர க்ரோதடவிஹரணம்
மானஸ துஸ்தர லோபாடவிஹரணம்
மானஸ துஸ்தர மோகாடவிஹரணம்
மானஸ துஸ்தர மதசாகரதரணம்
மானஸ துஸ்தர மாச்சர்யபயஹரணம்
மானஸ துஸ்தர ஈரிஷாடவிஹரணம்
மானஸ துஸ்தர அசூயாடவிஹரணம்
மானஸ துஸ்தர டம்பாடவிஹரணம்
மானஸ துஸ்தர தற்பாடவிஹரணம்
மானஸ துஸ்தர அகங்கிருதிபயஹரணம்
மானஸ துஸ்தர பாஸாடவிஹரணம்
மானஸ துஸ்தர மன்மதபயஹரணம்
மானஸ துஸ்தர ஸஞ்சிதபயஹரணம்
மானஸ துஸ்தர கர்மத்ரயஹரணம்
மானஸ துஸ்தர ஜீவத்ரயஹரணம்
மானஸ துஸ்தர கோசத்ரயஹரணம்
மானஸ துஸ்தர தாபத்ரயஹரணம்
மானஸ துஸ்தர லோகத்ரயஹரணம்
மானஸ துஸ்தர பந்தத்ரயஹரணம்
மானஸ துஸ்தர திரிபுடிபயஹரணம்
மானஸ சேதோ புஜகிவிஷஹரணம்
மானஸ சித்த வியாக்ரேபயஹரணம்.
மானஸ ராஜஸ தாமஸபயஹரணம்
மானஸ அஸ்வத் தேஸாகவசரணம்
பிரமானந்த குரு சரணம்.

இராகம்- சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி

குருபஜனைசெய்வாய் ஓமனமே
குறைவில்லை யனுதினமே

அநுபல்லவி

கருணை மிருந்த கடல் போலேயந்த
கிருபைகூர்ந்து காக்கும் பிரமானந்த (குரு)

சரணம்

துன்பந்தனை நீங்கித் துணிவுறசாக்ஷியென்று
இன்பந்தனைக்கொடுத்து ஏகரஸமாக்கி
தென்பாய்பிரமம்நீயென்று தெவிட்டா தானந்தம்தந்து
அன்பாயாதரவுடன் அஸ்வத்தனருள்பெற (குரு)

சுந்தரமாம் சுருதி சிரவணங் கேட்டுநிதம்
சந்தேகவிபரீதம் சீக்கிரம்போக்கும்போதும்
எந்தநேரத்திலும் ஏகமே பிரம்மமென்று
சிந்தைமகிழும்ஸ்ரீ ஆண்டவரன்புற (குரு)

ஆதரவாகவே ஆத்மா நானென்றறிந்து
ஏதொருகளங்கமு மில்லாமலே யிருந்து
ஆதியந்தமற்று அண்டமெல்லாம் நிறைந்து
ஸாதுபாலானந்த சன்னதிமுன்னின்று (குரு)

இராமமுகிபிரணதபாலா - என்றமெட்டு.

இராகம்-யமுனு கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி

பிரம்மஸ் மரண பக்திசெய்வாய்
மனமே மனமே மனமே தினமும் (பி)

அநுபல்லவி

ஸ்ருதிஸ்மிருதி இதிகாசாதி கட்கும்
முற்றும்மெட்டா ஏகநிலையை
சுழுவில் சுழுவில் சுழுவிலடைய (பி)

சரணம்

தனுகரணதிபிறந்து
சித்தாய் மனது பூரணமாக
தன்மய தன்மய தன்மய ஸொரூப (பி)

அத்தனஸ்வத்த வருளால் வாழ்ந்த
ஸற்குருகுரு பிரம்மானந்தர்
அருளும் அருளும் அருளு மானந்த (பி)

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி

ஆத்மஞானத்தை யறியாமற்பாழிலே
யலைகிறாரையோ பாவமே

அநுபல்லவி

சிலேஷ்ம மாம்ஸ சாமா கிருதியாகிய
தேகத்தில் வேறாகித் தேஜோமய மாய்நிறைந்த (ஆ)

சரணம்

பலபலகர்மங்கள் செய்தவ ராகியே
தீர்த்தங்களாடி
பற்றிய தீயினில் பஞ்சுபோல்பாவங்க ளேகியே
பரிசுத்தராய்

நடந்தார் ஜடமுடைந்தார் என்ன
வடைந்தார் ஜன்மங்கடந்தார்

இல்லையே அதுதொல்லையே முத்தி
வல்லையே சுகந்தல்லையே இப்போ
அருவாய் உருவாய் திருவாய் குருவாய்
அறிவகண்ட பெருவெளியாய் நிறைந்த (ஆ)

வெளியுருவங்களில் எந்நேரமும் பாயும்
நேத்ரங்கள்போல
வேதபுராணங்கள் சாஸ்திரமா ராயும்
தன்னையாரென்று

அறியார் சற்றுங்குறியார் ஜென்மம்
மறியார் இவர் சிறியார்

ஆகியே அவி வேகியே யிவர்
தேகியே பிரமை யாகியே யிப்போ

திடமாய் மடமாய் கடமாய் ஜடமாய்
உடலைக்கண்டு சுடரொளியாய் நின்ற (ஆ)

குருபிரம்மானந்த தேசிக னருளாலே
உண்மையறிந்து

கோஷவிலக்ஷண ஞானமு மருளாலே
கொண்டாடிக்கொண்டால்

பிழைப்பார் உள்ளந் தழைப்பார் கண்ணை
விழிப்பார் ஜன்ம மொழிப்பார்

குருகுதே யது வருகுதே இன்பம்
பெருகுதே சுகந் தருகுதே இப்போ

தினமாய் மனமாய் தனமாய் கனமாய்
மரணமின்றி ஜனனமின்றி நிர்மல (௯)

---

(11) இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி

உடலாலிதுநாள்வரைக்கும் உனக்கென்ன உபகாரம்
ஒன்று சொல்லாய் மனமே

அநுபல்லவி

கடலலை போல்வந்த காயங்கள் கணக்குண்டோ
கற்பந்தோறுமென்ன காரியங் கண்டாயிந்த (உ)

சரணம்

அஸ்திகடிக்கும் நாய்தன் வாயிற்பிறந்த ரத்தம்
அஸ்தியிலென்னும் பிரமையானாற்போல்
சத்தியஞானனந்த சௌக்யத்தை வெறுக்கி
ஜடலத்தின் மேல்வைத்துப் பார்க்கிறயோ
புத்திசாலியென்று புகழ்ந்துகொண்டேனுன்னை

புழுமலவியாதிகள் வைக்கக்கூடு மாச்சுது
புத்தியிலேயுனக்குட லாசைபோட்டுக் காச்சுது
நழுவுமஞ்ஞானமு நலமறந்து தேய்ச்சுது
நாறுமுடலுத்தவிநர் செய்துபொய்த்துப் போச்சுது (உ)

மன் குதிரையைநம்பி மடுவிலிறங்குவார்போல்
  மதிகெட்டுப் போனயுன் னநிஷ்டந்தானோ
வின்முநலாமைந்து பூதவிகாரமென்று
  வேறுப தேசங்கள் வேணுமோ
கன்குடத் துள்ளடைத்த காற்றுக்கவநியுண்டோ

காலன் வரும்போதுடல் காரணத்தில் விழுந்ததும்
கர்மமானபின்னுவ்னைக் காயம்விட்டுக் கழிந்ததும்
நாலுபேரும் பார்த்திது ஞாயமென்று மொழிந்ததும்
நல்வரமாமுட னனக் கென்னதந்துகிழிந்தது (உ)

வெள்ளரிப்பழம்வெகு காலமிருக்குமென்று
  வெடிக்காமல் பூண்கட்டி வைப்பார்போல்
கள்ளத்தனமாய்வந்த காயத்தைப் போஷித்துக்
  காலனுமுண்டோவென்று களிக்காதே
தள்ளக்கூடாததால் தானவனுகையால்

தன்னையறிந்தறியாமல் ஜன்மமெடுத் திறந்ததும்
தானேகுருபிரம்மானந்தர் சொன்னவுண்மை மறந்ததும்
கன்றைவிட்டுக் காலபிடித்துக் கற்பசுவைக் கறந்ததும்
காயமுனக்கிப்போதுப கரித்தென்ன துறந்ததும்

இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஆதி.

பல்லவி

மனமே மயக்கந் தெளியாயோ ஆபாசமான (ம)

அநுபல்லவி.

தனதாய்ச் சொல்கிறே னிந்தத்
தாரணியோர்களு மறியத்தானே (ம)

சரணம்

முன்னாளிற் செய்தவினை யல்லோ—முழுதுமிந்த
புண்ணான தேகமான தல்லோ—உட்புகுந்துபார்த்தால்
மண்ணுதி யைந்துந்தானிதல்லோ—மரணகாலம்
சன்னியாசிபயணந் தானிதல்லோ—ஆகையினலே

மன்னுளை உண்மையல்லோ
இலயகாந்த ஸிளிநீயல்லோ (ம)

ஸ்பரிசநன் மாத்திரையில் பிறந்து—பிரபஞ்சவாழ்க்கை
வரிசை வழக்கங்கள் தெரிந்து—வான்போனமுன்னைத்
தெரிசிக்கமாட்டாமல் மறந்து—நிலமிறந்து
கரிசனங் காயந்தி விருந்து—தினந்தினமும்
அரிசிபிசைகூ டெடுத்து
அருங்கட்டையில் சிதறினதறிந்து (ம)

கண்டவிடங்களெல்லாம் சுற்றி—காயங்கொண்டொருசுக
முண்டோ வனக்கேவிந்தப்புத்தி—ஓயாத்துயரச்
சண்டாள ஜடலத்தைப் பற்றி—சாவும்பிறப்பும்
உண்டாயிருக்கு மந்த நேர்ந்தி—நீயறிந்து
கொண்டால் விதேகமுக்தி
காரணகுரு பிரமானந்தர்சித்தி (ம)

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

(ஒரு) பாவியாகிலும் பரமார்த்தங்களைப்
பாரானே முக்தி சேரானே

அநுபல்லவி.

தேவர் மானிடர் கிரியக்காதியுண்டாமிந்தத்
தேசத்திலே வந்து ஜெனித்தவர்க்குள்ளேயொரு (பா)

சரணம்

பத்திவைராக்கிய பாதையில் வந்துமென்ன
பாராக்காரருண்டோ
முத்திமார்க்கத்திலே நடக்கிறபேர்களுக்கு
முள்ளுகள் போட்டதுண்டோ

சித்துஜடங்களைச் சிந்திக்கும் பேர்களுக்குச்
சிரசினிற்கொம்புண்டோ
தத்துவஞானத்தால் தன்னையறிந்தபின்
தானவனாகுந்தடையுண்டோ

பத்தியுளம்பரி பாகத்தினுல் ஜீவன்
முத்திவேணுமொரு தாகத்தினுல் பல
யுத்திகளும் வெகு வேகத்தினுல் வந்து
நித்தியா நித்யவி வேகத்தினுல் ஒரு (பா)

அற்பமாகுமுடல் அழிந்துபோகுமென்று
அறிந்தா லாகாதோ
சொற்பன சாக்கிர சுழுத்திகள் மூன்றையும்
சோதித்தா லாகாதோ
கற்பனையாமிந்தக் காரண காரியத்தைக்
கண்டா லாகாதோ
அற்புதமாம் தன்னை யாரென்றுபார்த்தால்
அழியாப்பதமங்கே யாகாதோ

சற்பனைசெய்கிற யோகத்திலே வந்
துற்புத்தியாகிய தேகத்திலே யொரு
விற்பனமாகுவி வேகத்திலே யிது
கற்பனையாமிந்த லோகத்திலே ஒரு (பா)

வேதம்புகழும்பிர மானந்த நாதனை
வேண்டாத குறைதானே
பாதகராமிந்தப் பாரினிற் பிறப்பது
பிரதிபந்த முறைதானே
மாதவராமந்த மகத்துக்கள் சாபமோ
மாயையின் குணந்தானே
ஏதுவகையோயிது நானறியேனிந்த
ஏழைகள் பாக்கிய மிதுதானே

போதமெங்கும்பரி பூரணமாய் விந்து
நாதகலைக்கொரு காரணமாய்
சேதனமாய்ஜெகத் காரணமாய் இதைச்
சோதனை செய்திடும் சூரனுமாய் ஒரு (பா)

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

சற்குரு கிருபையென்ன செய்வாரோ
பிரமானந்த தேசிக (ச)

அநுபல்லவி.

நற்கருத்தில்லாத நாயிவனெனக்கண்டு
நிற்பரன்சினங்கொண்டு செய்யும்வகையறியேன் (ச)

சரணம்.

ராகமுதற்பதிமூன்று மிருக்குதென மலைப் பாரோ-ம-ம
ரவரவ துன்பங்கள் இனிவராவகை செய் வாரோ
சோகங்க ளனைத்தையும் போக்கிடச் செய் வாரோ
சொற்படி நடத்திச் சுகமடைவிப் பாரோ (ச)

சாதன சதுஷ்டய ஸம்பன்ன னன்றெனதுலைப் பாரோ-து-து
சமயநெறியிலுள்ள ஸங்கடமொழித்திடு வாரோ
வேதமுடிவிலுள்ள வாக்கியம்போதிப் பாரோ
விவிதகற்பனையை விட்டிடச்செய்வாரோ (ச)

தரியொத்த ஜடனென தகவலைச்சொல்ல நினைப்பாரோ நி-நி
விரிகின்ற தோற்றத்தில் வெறுமைப்படுத்திடு வாரோ
சரியுற்ற ஞானத்தைச் சமைந்திடச்செய் வாரோ
அரிபொருளாகவே அமைந்திட விள் வாரோ (ச)

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

பல்லவி

கனவில் காக்ஷிதந்த குருபிரம்மானந்தரென்
னனவில் நினைகொள்ள கண்டேனே

அநுபல்லவி

வினயவிக்ஞான சச்சிதானந்தமிர்த்தசசி
வதனபத்மாதன நேத்ரவீக்ஷண்யமுற்று (க)

சரணம்

அக்ராசனந் தனிலே எனதையன் வீற்றிருக்க
அருகில் ஸத்சிஷ்ய நடேசாதி காத்திருக்க
தக்கநன் மாணுக்கர் பலபேருஞ் சூழ்ந்திருக்க
தத்பதாதிவாக்ய சுருதி சிரவணம் நடக்க (க)

முதலிற் பூர்வபீடிகை குரோடிகரித் துரைத்து
மேல்வாக்கியங்களுக்கு சுருதியுத்திகள் விரித்து
இதமாக உபதேச அமிர்தரச மொரு மித்து
இன்பஞ்செனிக்க நாவால் முகமலர்ந்தே யுரைத்து (க)

சாமி வதனத்தையே நேமமா யனைவரும்
சற்றுமிமைகள் மூடாமல் பார்த்தபேரும்
பூமிபோ லசைவற்றுப் பொருளினிலேகொண்டோரும்
பூர்வபக்ஷ சித்தாந்தங் கொள்ளுரையீருடன் (க)

இராகம்-தர்பார்-தாளம்-சாப்பு.

பல்லவி.

குருவைப்பணிந்து மனந் தேறு—பிரமானந்த
குருவைப்பணிந்து கடைத் தேறு

அநுபல்லவி.

தருவில் கள்ளனென்று தயங்கியோடுவார்போல்
மறுவில்லாப் பொருளேநீ மயங்கித் திரியவேண்டாம் (கு)

சரணம்.

தேகாத்ம புத்தியினாலே—ஜென்மம்
போகாமல் வரப்பட்டதாலே
மோகாதி துக்கச முத்திரத்தின் மூழ்கியே
சோகாதி துன்பங்கள். சூழ்ந்து தவிக்கிறாய் (கு)

நாறுமுடலைநம் பாதே—நமன்
நாளையே வருவான்றப்பாதே
தாறுமாறும்சொல்லித் தயங்கித்திரிய வேண்டாம்
போறும் போறுமிந்தப் பொல்லாக் கருத்தைவிட்டு (கு)

ஓயாத கற்பித நினைப்பை—உன்னிடம்
மாயாமலவிதார் வருப்பை
காயாத மரத்தினிற் கல்லாலடிப் பாரோ
ஞாயந் தெரிந்துகொள்ள நீதிவாக்கியஞ் சொல்லும் (கு)

உன்னைநீ மறந்தது கெடுதி—அதைப்பற்றி
ஒழியாத் துயரங்கள் படுதி
பின்னை யொருவரைப் பேதிக்க வொண்ணாது
தன்னை யறிந்தா லல்லால் தடமடு வடுக்காது (கு)

அழுக்கிருட் டென்ற குணங்கள்—உன்னால்
முழுக்கத் தேடும் ரணங்கள்
ஒழுங்கம் நல்லவைகளை உரைப் போரை யடுக்காமல்
மழுங்கொண்டு மடியிருப் மானஹீனம் விட்டுக் (கு)

சத்துவவடி வனக் குவது—அதை மறந்து
ஒத்துக் கொண்டாய் வெகு பழுது
உத்த பொருளுனக் குரைப்பதார் மடநெஞ்சே
தத்வம ஸிவாக்யத்தைத் தயவோடு போதிக்கும் (கு)

அரிதான வாக்கியத்தைக் கேளு—பிரமானந்த
குருவுக் கடிமை செய்து வாழு
பெரிதான பேரின்ப சுகத்தைப் பெற்றிருக்கலாம்
தெரிவாயுனக் குரைத்தேன் தேகம் வராதினி (கு)

ராகம்-பந்துவராளி-தா-ம்-சாப்பு.

பல்லவி.

குருநாதனைத் தேடு மனமே—பிரமானந்த
குருநாதனைத் தேடு மனமே.

அநுபல்லவி.

மறுவிலா நரவுட லந்தரித்த பின்பு
பருவந் தப்பாமலே பத்தியுடன் சென்று (கு)

சரணம்.

என்சா ஹுடம் புந்தன் வசமா—எனதென்றும்
இடம் பொருளே வஹுஞ் சநமா
வியமுத லாமைந்த பூதவிகார மென்று
நின்னாத் துடனறிந்து தினப் போது மறவாமல் (குரு)

பாப புண்ணிய மென்னும் பாசம்—உந்தனைப்
பரதவிக்கச் செய்த மோசம்
பூவையர் பூஷணம் . பூமியினுசை யைப்
போக்கடித்து விட்டுப் பொல்லாப் பிறப் பொழிக்க (குரு)

வான்மலர் நிகரான வாழ்வை—நிசமென்று
வாஞ்சை யுற்றிருந்துந் தாழ்வை
தானன்றி வேறென்றுந் தள்ள வொண்ணுததால்
தடமடமை யொழித்துத் தத்பதங் கண்டறிய (குரு)

த்வைத பாவனை கொண்ட தாலே—நிலையான
துக்கம் வந்தடுத்தது னுலே
தத்வத்தைத் தெரிந்த த்வைதந்தை மேற் கொள்ள
சத்து சித்தானந்த சமரச வனுபவ (குரு)

ராகாதி குணங்களின் வர்மம்—நீங்காத
ரவரவங்கள் நல்குங் கர்மம்
ரோகாதி துன்பங்கள் நீக்கும் சஞ்சீவிபோல்
மோகாதி யறியாத் மூடப்பிணி நீக்கிட (குரு)

உடலைநா னென்று சொன்ன மோகம்—உட்கொண்டு
மடமைத் தனத்தால் வந்த சோகம்
படர் செய்யும் பழக்கத்தைப் பறக்கத் துரத்தி விட்டுத்
திடமுடன் விரைந்தோடி தேவ தேவனை (குரு)

நாம ரூபங்க ளென்னும் பேயை—கண்ணுல்பார்த்து
நம்பியிருந்தது மாயை
ஏமனிதோ வந்து இடித்துக் கொல்லப் போமுன்
க்ஷேமத் துடன் சென்று நித்திய வாழ்வு பெறக் (குரு)

வாறு செய்மனத்தி னற் சங்கம்—பல் காறும்
வந்தடுத்ததில் வந்த பங்கம்
ஏதுக் கிவர்களுத் துங்கம் வேண்டா மையோ
சாதுக்களைக் கண்டு சல்லாபம் செய்திடக் (குரு)

பிரமானந்த தேசிகர் வாக்யம்—பாங்காய்
பரகதி பெற்றுவாழ் யோக்கியம்
பரம சுகந்தைத் தரும் பவப்பிணி நீக்கிடும்
பக்த தயாபர பரிபூர்ண வடிவுற்ற (குரு)

கால ஜாலஞ் செய்ய வேண்டாம்—கணப்போது
கற்பித கற்பனை யாண்டார்
ஆலாஸ்ய க்ஷேத்திரத் தவதரித்திருக்கின்ற
சில சொஸ்த ராம லிங்க பிரமானந்த (குரு)

இ-ம்-காப்பி-தா-ம்-சாப்பு.

பல்லவி.

குருவே யுனை நம்பினேன் கிருபைசெய் பிரமானந்த (கு)

அநுபல்லவி.

பரிபூரணானந்த பரம தயாள சற் (கு)

சரணம்.

நித்தியானந்த வாசா நிர்க்குண ஜெக நீசா
சுத்தஞான தேஜா சுயமான பிரகாசா (கு)
கிட்டரிந்து மனவாக்குக் கெட்டாமலே யெவர்க்கும்
வெட்டவெளியாய் நிற்கும் விதிநிஷேதமற்றிருக்கும் (கு)
ஆதி யந்தமில்லாம லறிவா யெங்கும் நிறைந்த
சோதிமயமான சுவாமி பிரமானந்த (கு)

இ-ம்-தன்யாசி-தா-ம். ஆதி.

பல்லவி.

இன்னும் வரக் காணேன் சாமி வரக் காணேன்

அநுபல்லவி.

மன்னர் பிரமானந்தர் மகிமை யறிந்தோரிடம்
என்ன அகப்பட்டுக்கொண்டு என்னை மறந்திட்டாரோ (இ)

சரணம்.

சொல்லு மொழி யெனும் பாலை
மெள்ளவைத்து ஊட்டி யீன்ற
வள்ளலன்னை தன்னை விட்ட
பொல்லாப்பால னாகி நின்றேன். (இ)

நாதன ரசப் பனிப்போ
வேதனைபட் டுழலு மென்மேல்
காதல் கொண்டு பிரமானந்த
நாதனை மீட்டிக் கூட்டி (இன்)

ஏழையைக் காக்க வொண்ணுதா-என்ற மெட்டு:
இ-ம்-கரகரப்பிரியா-தா-ம்-சாப்பு.
பல்லவி.

சாமி வரவைக்கா னேனே நான்
சலியாமல் சேவிக்க சற்றும் நானேனே

அநுபல்லவி.

நேமியா யவரங்கே நிலைநிற்ப தேனோ
பூமியி லிப்படிப் புலம்பித்திரி வேனோ (சா)

சரணம்.

நான் செய்த வினைப்பயன் எவ்வித மாமோ
ஏனென்று கேட்போர்க ளெனக்கெவர் தாமோ (சா)

எந்த அதிகாரி பெற்றானோ பாக்யம்
மூந்தத் தவச்சிறப்பால் மூண்டானோ சிலாக்யம் (சா)

யுத்திவ சனங்கேட்டு யூகந் தெளி வாக
பத்த பராதின பிரமானந்த தேசிக (சா)

இ-ம்-செஞ்சுருட்டி-தா-ம்-ஆதி.

பல்லவி.

எப்போ வருவாரோ எந்தன் குருநாதன்

அநுபல்லவி.

எப்போ வருவாரோ எந்தன் கலி தீர்க்க
தப்பு மெத்த இருந்தாலும் சித்தமன்னித்துக்காக்க (எ)

சரணம்.

சத்தைப் பரமார்த்தந்தாலே மெத்த விவகாரம்போக்க
சத்தை விவகாரத்தாலே கர்த்த பிரதிபாசம்நீக்க (எ)

முந்திருகும் பிரமானந்தர் சித்ததாபம் போக்கிவைக்க
இத்தனை தாமதமேனோ பித்தன் முன்னே வந்துகாக்க (எ)

என்று கிருபை செய்வாரோ-என்ற மெட்டு.

இ-ம்-உசேனி-தா-ம்-திரிபுடை.

பல்லவி.

எப்போ எந்தனைக் காப்பாய் என் குரு நாதா

அநுபல்லவி.

தப்புசெய்திட்ட போதும் தனயற்குத் தாயல்லால்
தயை தயை தயை செய்வதா ரென்னை (எ)

சரணம்.

பிறவி நான்பமதனைச் செம்மையா யெண்ணிப்
பார்க்கி லின்றுமோர் ஜென்மம்
பற்றுமோ என்று முன்னைந் தேட்டமாகத் துதித்தேன்
பாராய் பாராய் பாரா யென்னிடர்நீராய் (எ)

அண்டபிண்டாதிகளு மித்தை யென்றெண்ணி
அறிவானந்த ரசந்தை
உண்டு உயர் பதத்தில் உல்லாச மாய் ஸங்கந்தால்
அன்பாய் அன்பாய் அன்பாய்ச் சுகித்திருக்க (எ)

சுத்தப் பிரமானந்தனே என்னிடர் தீர்க்கச்
சுழுவினில் கிருபை செய் மெய்யா
மெத்த வெம்பினேன் மாயா மோகமதனிற் பட்டு
முந்தாய் முந்தாய் முந்தாய் பித்தன்முன் வந்து (எ)

இ-ம்-மத்யமாவதி-தா-ம்-ஆதி.

பல்லவி.

நாதீன நினை மனமே—பிரமானந்த
போதனை நினைமனமே

அநுபல்லவி.

நாதாந்தத் துள்ளொளிக் குள்ளே விளங்கிய
ஸாதன நான்கின் சனுதனனுகிய (நா)

சரணம்.

பூதங்களல்ல பொறிபுல னியல்ல
காதமித் திடுந் தேக கரணுதியு மல்ல
சோதனை செய்துபார் சூனியமு மல்ல
சேதனமானசி தாகா சந்தா னென்ற (நா)

காமாதி துர்க்குண கள்ளர்பயம் போக்கி
க்ஷேமம தானசித் ரூப கண்ணு னேக்கி
நாம ரூபமற்ற நாட்டினுனைச் சேர்க்க
யோம வழியாக உள்ளே யுனையிழுக்கும் (நா)

எண்டிசையுங் கீழ்மே லேகமாய் நின்ற
அண்டங்களெல்லா மனுவனு வாகவே
கண்ட தையே கண்டு கொண்டு சுகியென்ற
மண்டலம் புகழும் ஸ்ரீபிரமானந்தகுரு (நா)

இ-ம்-சுருட்டி-தாம்-ஆதி.

பல்லவி.

பாராம லிருப் பேனே—ஒருகால்
பார்ப்பேனே வரியேன்

அநுபல்லவி.

பார்த்தது பதின்மூன்று நாளுக்குள்ளே யென்
பாவமெல்லாம் போக்கிப் பரவசந் தந்தவரைப் (பா)

சரணம்.

அவனியி லுன்போ லசர்கிடைப்பார்குரு
அவதிகள் போக்கி யானந்த மருள்செய்ய
ஆதியிற் செய்தநிஷ் காமிய மிப்போ
நீச குருவாகித் தவரூபம் பெற்றவரைப் (பா)

ஜஹற்ல க்ஷணமுதல் மூன்றையுஞ் சொல்லித்
தற்பத துவம்பத சோதனைகாட்டி
யான தாவாக அஸிபதந் தந்து
அரையாப் பதவியை யருள்செய்த குருவைப் (பா)

இடைவிடா சிரவணம் செய் யென்றுசொல்லி
இருமூன்று லிங்கத்தின் சோதனை சொல்லி
வாக்கிய லக்ஷிய வகைகளைக் காட்டி
இதமல்ல அகம்பி என்றகுருவை நான் (பா)

இப்படிக் கொத்த சமாதியைக் காட்டி
இருவினை போக்கி நிர்வி கற்பமாக்கி
அருகி காலமுள்ள சஞ்சித மகற்றி
வாசனை குறுக்கியப ரோக்ஷந்தந்தகுருவைப் (பா)

தத்துவ வழிகளைத் திரையறக் காட்டித்
தன்மய மாக்கி முத்தியிற் கூட்டி
சத்ய ஞானனந்த சமரச மாகிய
சர்வ பிரமமென் றுடியகுருவைப் (பா)

இராகம்-கரகரப்பிரியா-தாளம்-ஆதி.

பல்லவி.

மாயவாழ்க்கையிதை நம்பாதே இந்தக்
காயம் நிலையாதே சொன்னேன்

அநுபல்லவி

நீயா ரென்றெண்ணிப் பாராம லந்த
நிஜந் தெரிந்தவனைப் போல் சாராமலே
தாயார் வயிற்றினி லின்னமும் பிறக்க
தானே வாழுயிர் தேனே ஹரிஹரி (மா)

சரணம்.

பதினுயிரம்பொன் தேடிவைத் தாலும்
பட்டுபட்டாடைகள் வேணுமென் றுடுத்தால்
அதிகாரம் போய்ப் பாயினிற் படுத்தால்
ஆஙுங்காரனு காலங்கழிப்பிப்போ (மா)

போகபோக்கியம் அமரா மூச்சு
போனால் போச்சு பெண்டுகள் பேச்சு
தேகமெல்லாம்பிடி சாம்பலா யாச்சு
தெருவினிற் பேசிய பழங்கதை யாச்சு (மா)

தேகமெல்லாம் பொய் யிந்திர ஜாலம்
தன்னையறிந்தபின் நானென்ன கோலம்
பலவித நூல்களி லேனிந்த சிலம்
பாலசுவாமி சொல் வேறு மதிகாலம் (மா)

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி

பல்லவி.

ஞானசற்குருவை நாடு மனமே நீ
நிர்மல சுகமுண்டு பாரு

அநுபல்லவி.

ஆதியான துக்கம் அனைத்தையும் போக்க
ஆனந்தக் கடல்வடி வாகவே நிற்க (ஞா)

சரணம்.

இந்திரஜாலமே உலகவை போகம்
இன்றைக்கிருப்பது வோசந் தேகம்
அந்தர மின்னல்போ லழியுமுன் தேகம்
அய்யோ அதனுட னுனக்கென்னஸ் நேகம் (ஞா)

தனதான் யமுத லான சம்பத்து
சாஸ்வதமோ வதற் க்காயிரந் தத்து
தினமுங்கவலையை விளைந்திடும் வித்து
சீச்சி யதனை விரும்பல்வி பத்து (ஞா)

மெய்யோ ஒன்றுக்கும் உதவாப் பண்டம்
மிருகாதிகள் சூழு மாமிசப் பிண்டம்
மெய்யா யிதற்கிங்கு நித்திய கண்டம்
மீதுவைத்திடுமாசை மேவிடாத் துன்பம் (ஞா)

சிருஷ்டிக்கு முன்னும் பின்னும் நீ சத்து
சிருஷ்டியனைத்தையுங் காண்பதால் சித்து
முத்திதருங் குருபிர மானந்தரை யொத்து
மோகந்தீர்ந்து திவ்ய ஞானத்தை யுற்று (ஞா)

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாராரோ என்னைப் பாராரோ முத்தி
தாராரோ சாமி

அநுபல்லவி.

பாராதி தனிலுள்ளோர் பவதுன்ப மொழித்திட
சூராய் வந்துதித்த நீரர்பிரமானந்தர் (வா)

சரணம்.

எண்பத்து நாலுலட்சம் யோனிவழி பிறந்து
ஜனமானங்களற்று இரந்துண்டு மனநொந்து
கண்படைத்தோர்களால் காக்கப் பறந்துகொண்டு
காமாதி வாதனையில் கஸ்தியடையு மென்முன் (வா)

இன்றைக்கிருந்தவர்கள் நாளைக் கிரார்களென்று
மியல்பான மொழிகளை யெந்நாளுங் கேட்டிருந்தும்
என்றுமிருப்போமென்று ஏற்றபடி நினைக்கும்
கன்றுக்கு மதிசொல்லிக் கடைத்தேறும் வழிகாட்ட (வா)

மாறுத ஜென்மம்பூண்டு நீராக்கவலைவந்து
போராத காலநேமி பிரமையிற் சுழலவைத்து
கோராதி நேமங்களால் கொடுக்கின்ற துன்பங்களை
வாராதடித்துத்தள்ள வகையற்ற எந்தன்முன் (வா)

இ-ம்-காம்போதி-தா-ம்-ஆதி.

பல்லவி.

கருணைக் கடலதான குருவின் முகமலரைக்
கருத்திலே மறவாமல் நினை மனமே

அநுபல்லவி.

ஒருபொருளாகத்தானே உன்னதபதந்தன்னில்
நிரதிசயானந்தமாய் நின்றிட எப்பொழுதும்
பரம ரகசியந்தைப் பரிவுட னருள்செய்து
இருதயக் கிரந்தியை நன்று யவிழ்த்திட அவிழ்த்திடும்(கரு)

சரணம்.

அரனரியயன்முத லாகிய விடத்திலும்
நிறைந்திடும் பொருள்தனை நிர்மல வடிவமென்று
அருளினு லறிவிக்க அகண்ட சொரூபந்தானய்
இருந்துதா னெப்பொழுதும் ஏகரசநிலையில்
மறந்து உடலந்தனைப் பிரம சொரூபமாக
இருந்து ஆனந்தத்திலே கரைந்து பேதங்களெல்லாம் (கரு)
காமக்குரோதங்களான கள்ளர்ரயடித்தப்பால்
வாம மதமுதலாம் வைரிகளையும் நன்றாய்
பாமரா னென்றுதள்ளிப் பரமசுகானந்தமாய்
நேமத்துடனில்லென்று நித்தியமுரைத்தபின்னே
தீமையான பேதமெல்லாம் தாமதமன்றியிற் கெட்டு
நாமரூப மற்றபிர்மம் தாமதாக இருந்தெங்கும் (கரு)
வாசனு வுஸத்தாலே வருகிற விர்த்தியெல்லாம்
நாசமாகவே செய்து நாறுமுடலந்தன்னில்
ஆசையில்லாமற்றனே ஆத்துமசொரூபத்தை
தேசிகனருளாலே தெரிந்து நிறைந்துபின்னே
மாசில்லாத பொருளாக பேசும்பொரு ளத்தனையும்
ஈசன்வடிவமாகவே பாசமற்ற நிலையிலே (கரு)

பந்தமோகங்களற்று பரமசுகானந்தமாய்
எந்தவேளையு நன்றாய் இடரற்ற சுகந்தன்னை
தந்துதயவுடனே தத்துவ சொரூபந்தானய்
சந்ததமு நன்றாய்பிர மானந்த சொரூபத்தை
வந்தனங்கள் செய்ததாலே தொந்தமாயாவுலகத்தை
சந்ததமு மறந்துநான் சிந்தையற்றுளப்பொழுதும் (கரு)

இ-ம் சாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி

குருநாமமேகெதி எனஸ்மரித்திருந்தால்
குறைவேதும் வாராதெக்காலும்

அநுபல்லவி.

சுருதிமுடிவில் நின்று சுகவடிவாய்விளங்கும்
பரிதிபோன்றபிர மானந்ததேசிகர் (குரு)

சரணம்.

நதிதோறுமூழ்கியே நல்லநியமஞ்செய்து
நன்மைதேடுவேனென நாள்கடத்திடு வானேன்
அதிபதிபோலேசுற்றி ஆலயம்புகு வானேன்
ஆசைவலையிற்சிக்கி யருங்கர்மஞ்செய் வானேன் (குரு)

இயமாதியோகத்தை யிச்சித்தல்லந்தனிதம்
இதமிலாகாய கற்புத்திற்கலை வானேன்
சுயமாயங்கம்வருந்தி சோகங்கொண்டிருப் பானேன்
சொற்கடங்காமனம் சுயராஜ்யஞ்செய் வானேன் (குரு)

பாழுந்தொழில்கள்செய்து பாங்காகவுண்டுறங்கி
பழிதரும் பிறவிக்கடல்தனில்விழு வானேன்
மாளுமுடலைநம்பி மகத்துவங்கொள் வானேன்
மானமீனமில்லாமல் மயக்குமுருக்கொள் வானேன் (குரு)

இ-ம. மணிரங்கு-தாளம்-ஆதி.

பல்லவி.

குருவைப்பணிந்துமனந்தேறு பிரமானந்த
குருவைப்பணிந்து கடைத்தேறு இவர்
சரணத்தில் விழும்பத்தர் ஆயிரம்பேரு
நூறாயிரம்பேரு (கு).

இவர்சரணத்தின்முன்பாக ஸ்துதிகளைப்பாடு
கவிகளைப்பாடு சரணமென்றேமலர் சூடு
பவதரணமானதொரு பக்தியைத் தேடு
குருபக்தியைத்தேடு. (கு)

சரணம்

கோபமென்ற கோட்டையை யிடித்து இந்தக்
குணத்திரயமானதோர் கொடிகளை யறுத்து
பாபத்தைவேரோடே யெரித்து
பரப்பிரமசாம்ராஜ்ய பதவியைத் தரித்து (குரு)
பெண்டாட்டிபிள்ளைகள் முதலாய் ஏறுந்
தண்டிகைமுதலான விருதுக்கள் முதலாய்
தெண்டினபணங்காசு முதலாய் இப்போ
தேகத்தைவிட்டுப்போகும்போது வராது (குரு)

மும்மூர்த்திரூபமென்றே பாரு இந்த
முக்குணாவலையை யறுக்குந்தற் பாரு
சத்குணகமலத்தின் சாரு
சாக்ஷாத்பிரமானந்நாம் இவருக்குப் பேரு (குரு)

இ-ம். சஹானு-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஸத்குருசிந்தா கார் மொன்னு கதுல்னகோ
காலுடுபலம் உடுகை மல்லி ஜாஸ்தே
காலுடு பலம் உடுகை

அநுபல்லவி.

தூர்குண்ணு அவெத்தெஹால் துக்கஸரிரு ஏள
ஸத்குண்ணு அவெதி ஸாக்ஷாத்காரமுபொர்ந்தை (ஸ)

சரணம்.

ஸதமு ஏள மெல்லி ஸகல பாக்கிலு தொவ்லி
ஹிதவு ஜனெஸ்தெனெ ஜகதூர்ஸேஹா
பொதுலொ காயிகு தூது பிளிஜெமெ சொகனுள
யதிகுமலினமவை மாயா கடனுஹால் (ஸ)

மொட்டொகேரு ஹொல்லொ கெட்டி ஆசானுகல்லி
கஷ்டபாடுபொடி லோஷ்டு ஹோஸன்னு
இஷ்டங்கரி யெஸரிர் ஸூட்டி ஜாஸ்தே வேளாம்
கஷ்டிஞ்சி பொடெபாடு வாடுகவ யிஹாள (ஸ)

ஹரிஹரா தலுஹால் அஹமுதுட்டுனு ஏள
ஹரிவெங்கடேஸஹால் அஹமுதுட்டயிஏள
நருடு மெனி எஞ்சேதி நரகப்பிராப்தி அவை
நரஹரிமெனி எஞ்சேத் நித்யபதவி பொர்ந்தை (ஸ)

ஸ்ரீராகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மனமேசற்குருநாதனை மறவாதிருமனமே

அநுபல்லவி.

ஜனகாதி மகாமுனிவர்கள் சார்ந்தமுத்தியில்
சந்ததமும் சேர்ந்திருந்து சிந்தையுற (ம)

சரணம்.

மாயவல்லியிற்சிக்கியே இத்
தேகாதிகள் நானென்றெண்ணி
ஓயாத ஜென்மத்தும் காளானும் உயர்நிலையில்
உறுதியுடன் ஒருமைப்பட உலையாமலே (ம)

முத்தியடைய கர்நிருவாதிகள்
உத்தம சிரவணத்தால்
வெத்திசெய்து வேதாதிகள் வெறுப்பென்று
நிரமதனில் பிரியாமல் நின்றநுபவிக்க (ம)

அத்தனஸ்வத்தனருளால் வாழ்ந்த
சுத்தப்பிரமானந்தரை சித்தமதில் நிறுத்திசதா
சிந்தனைசெய்யும் வாசுதேவ
சுவாமிகள் சொன்னபடி. (ம)

பாவிமடத்தில் வந்த யோகசன்யாசியை-என்றமெட்டு.

இ-ம். எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

குருரூபமேசர்வ தெய்வசொரூபமென்று
குறித்திடு நீமனமே.

அநுபல்லவி.

மருவு சச்சிதானந்த கனமேயாகமதில்
சருவவிச ஜீவ வடிவாகியேநிற்கும் (குரு)

சரணம்.

மலரோனுமாயோனு மருவும்பசுபதியும்
வலமாகிவந்தாரே வானோர்முதலாயாரும்
பசுபலவாகிய பசுக்களும்பக்ஷ
தலமாத்தெய்வங்கள் ஆகியேநின்ற (குரு)

அஷ்டதிக்குபாலர் அஷ்டவசுக்களாகி
திட்டமாப்புவிமீதில் கிட்டியேவெகுவாய்
சட்டமாய்முனிபாண்டி பட்டபேய்களுமென்று
திட்டமாப்புவிமீதில் கிட்டியேவெகுவாய் (குரு)

அந்தர்யாமியென்று மவ்யாகிருதனென்றும்
சந்ததமும்விஸ்வ தைசதனென்றும்
இந்தவிதமாயின்று மநேகவிதங்களாகி
வந்தரேயென்றன் குருபிரமானந்தர் (குரு)

இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

மனமேநீ சேதிசொல்லிவா
பிரமானந்த குருவிடம் (ம)

அநுபல்லவி

தினமுமவருடைய சீர்பாதமலர் தன்னை
நினைவில்வைத்து நெஞ்சத்திலுருகிறேனென்றுரைத்து (ம)

சரணம்.

பிரமக்யானம்பிரமமென்று பேரறிவைக்கொடுத்து
அக்ஞானம்தீர்த்த குருவைமறவேனென்று (ம)
தத்வமஸீ யென்றெந்தன் சகலபிராந்தியுந்தீர்த்து
சத்தியசுகத்தைதந்தார் தாளைப்பணிந்தேனென்று (ம)
அயமாத்மபிரமமென்று அனுபவந்தன்னைத்தந்து
சுயமாய்விளங்கச்செய்தார் சொல்லைமறவேனென்று (ம)
காமகுரோதகள்ளரைக் காணுமலோட்டியிந்த
நாமரூபபிரபஞ்சம் நஸ்வரமென்றுரிடம் (ம)
மோகப்பிரமையைத்தீர்த்து முத்திசுகத்தைத்தந்த
ஏகரசகுருவை யென்று மறவேனென்று (ம)
அகங்காரம்வேரறுத்து ஆத்மசுகங்கொடுத்து
ஜகமையல்தீர்த்தகுரு சரணமறவேனென்று (ம)
காயம்நீயல்லவென்று கருணையாலருள்செய்து
மாயப்பிறவிதீர்த்தார் மகிமைமறவேனென்று (ம)
கரணப்பொறிபுலனும் கற்பிதமென்றுரைத்து
பரமபதமளித்தார் பாதம் மறவேனென்று (ம)
காரணதேகந்தானும் கற்பிதமென்றுரைத்துப்
பூரணம்செய்தகுருவைப் போற்றினேனென்றுரைத்து (ம)
தற்பதமென்றுரைக்கும் சர்வம்நீயல்லவென்று
கற்பனைதீர்த்தகுரு கருணைமறவேனென்று (ம)

ஜீவபரபேதங்கள் சேர்ந்தயிக்யமானபின்
பாவஞர் நீதமென்ருர் பாதம் மறவேனென்று (ம)

பரப்பிரமமயமாகப் பார்த்துப்பேதமுழுதும்
தரியில்புருஷன்போலே தள்ளென்றுரைத்தாரிடம் (ம)

சத்யஞானனந்தம் சர்வமுமென்றுரைத்த
நித்தியஅபரோக்ஷ நிலைதந்தகுருவிடம் (ம)

அகண்டாகாரவடிவே அனுதினம்நீயென்று
புகன்றகுருபாதத்தைப் போற்றினேனென்றுரைத்து (ம)

ஏகரசமாகவே யெங்கும்விளங்குதென்று
யூகம்சொன்னகுருவை யுளத்தில் மறவேனென்று (ம)

அலைநுரைகுமிழிக்கு ஆதாரம்ஜலம்போல
பலவுலகுக்காதாரம் பரமென்றுரைந்தாரிடம் (ம)

ஆனந்தா காரமின்றி யனுமாத்ரமில்லையென்றீ
ஞானசுகத்தைத்தந்தார் கருணை மறவேனென்று (ம)

சொல்லும்பொருள்முழுதும் சொரூபமன்றிவேருய்
இல்லையென்றவர் பாதம் என்றும் மறவேனென்று (ம)

பரமசுகங்கொடுத்த பிரமாநந்தர்பதத்தைத்
தரித்திருதயத்திலே திரமுற்றேனென்றுரைத்து (ம)

இ-ம்-தர்பார். தா-ம்—சாப்பு.

பல்லவி.

சமமென்னும் சாரட்டின் மேலேறிவந்தாரெங்கள்
சம்சாரதாபம் அனைத்தையும் தீர்த்தார் (ச)

அநுபல்லவி.

தாமாதியாங்கம்பி முமுக்ஷுவால்முன்னீட்டி
விவேகவைராக்யமெனும் பேரால்பின்னேட்டி (ச)

சரணம்

சாரட்டுக்கால்நாலு கரணமாயிருக்கவும்
சதுரான அச்சிரு அகமித மாகவும்
மாயையவித்தைபின் னிருவில்லா யிருக்கவும்
மகேசன் ஜீவனுமுன் னிருவில்லா யிருக்கவும் (ச)

நீஸம மெனுமிருப்பில் என்றுத னிருக்கவும்
திடசமாதியாறு கால்களாய் நாட்டவும்
மைத்ரியாதி யெனும்டாப்பு மேல்மூடி யாகவும்
மகிமையுள்ளமானுக்கர் கட்டியங் கூறவும் (ச)

சாரட்டு நாதராம் பிரமானந்த தேசிகர்
சமயமாயிருக்கும் அவிரோத நேசகர்
ஆராலு மறியவொ ணுனந்த வேஷகர்
அவருக்கவரேயெனும் அதுலமா மீசகர் (ச)

இராகம்-முகாரி-தா-ம்-சர்ப்பு.

பல்லவி.

இத்தனை தாமதமேன் என்தனைக்கண் பார்க்க (இ)

அநுபல்லவி.

பத்தனை ரக்ஷித்துப் பாதுகாப்பதினியார்
நித்தமு முறையிட்டு நெஞ்சு புண்ணுச்சுதே (இ)

சரணம்.

சத்யக் ஞானனந்த சமரச மயக்கமோ
சாதுக்கள் சங்கத்தின் சந்திசல் லாபமோ
நித்ய நிரஞ்சன நிர்மல யூகமோ
நிமிஷமும் பிரியாமல் நிலைகொண்டு நின்றதோ (இ)

சர்வ பரிபூரண சம்ப்ரம யோகமோ
சமய நெறியினர்மேல் சலிப்புற்ற கோபமோ
கர்வத்தைப் பங்கம்செய்யக் கணித்திடும் பாகமோ
கம்பீரமாகக் காலங் கழித்திப்போ வந்தது (இ)

ஏதுமறிந்திடாத என்றன்மேல் வர்மமோ
ஏங்கித் திரிந்தலைய எச்சான கர்மமோ
போதுபோக்கி வீணில் புலம்புதல் தர்மமோ
போதந்தந்திடுவாய் பிரமானந்த தேசிகா (இ)

இராகம்-தஜாவந்தி-தாளம்-ஆதி.

பல்லவி.

சோற்றுத் துருத்தியைச் சுமந்தலைந்துநீ
சோகமேன் படுகின்றாய்—சும்மா—சும்மா
சோகமேன் படுகின்றாய்

அநுபல்லவி.

ஆத்துமா வடிவே நீயல்லவோ
அண்டமெல்லாம் நிறைவாகவே நிற்கு
மகண்ட பராபர மாமறிவே நீ (சோ)

சரணம்.

நாற்ற மலத்தினால் சேர்த்த பாண்டமீ
தாத்துமா வாமோ புழு
கோத்துநெளிகிற ஊற்றைச் சடலத்தைத்
தேற்றினா லாமோ
காற்றுத்துருத்தியை மாற்றக்கூற்றுவன்
காத்திருக் கானிதை வேற்றுமையாகநீ
பார்த்துக்கொண்டாலிது க்ஷேத்திரமாமிந்த (சோ)

பிறந்ததும் பெருத் திளைத்திறந்ததும்
அறிந்தவ னாமோ—உள்ளங்
கறந்தவிலேபுண் ணிருந்துங்காணக்கண்
ணாடி வேணுமோ
மறந்த சுழுத்தியில் இறந்த காயத்தில்
மானமதென்னடா தானது வாமோ
சனாதன னான மனோதித னேநீ (சோ)

சோகமும்பசி தாகமுந் சுக
போகமுனக் குண்டோ அது
மோகத்தாலெனக் காகுமென்றுநீ
யூகித் தானுண்டோ
நாகம் தேகம் சிவோக மென்றறிந்தால்
நல்லிரு ளிரவிலைக் கண்டுடனே பது
சொல்லிக் கொள்ளாதது போலவேபோகும் (சோ)

உடுத்த துகில் தன்னை விடுத்துவோறே நீ
எடுத்துத் தரித்தாற் போல் முன்
தொடுத்த கர்மத்தாற் கடுத்துவந்துஜ
டத்துக்கு ளன்னிய மே
கடத்துக்குள் வெளி போலறிவேநீ
கர்மமூனக் கில்லை மர்மமறியாது
தர்ம மல்லவெகு துர்மதியாலிந்த (சோ)

பிரமானந்த ரெங்கள் குருகுண சங்க
ரகிதரைப் போல
அங்கமில்லாம லெங்குமேனியாய்ப்
பொங்கிப் பூரணமாய்
மங்களமா முன்னை யறிந்துநீ
மாயத்தினல்வந்த காயத்தை நானென்றும்
பேதத்தை யகற்றுமு பாயத்தினலிந்த (சோ)

இராகம்—மத்தியமாவதி—தாளம்—ஆதி.

பல்லவி.

இந்தவேளையி லறியாமலுனை நீ
எந்த வேளையி லறிவாய்

அநுபல்லவி.

அந்தமாகிய மானிட ஜென்மம்
அரிதல்லவோ பிறப்பிலையியோ (இ)

சரணம்.

சாஸ்திரம் பல கோடி யிருக்குது
சாதனம் நன்றாய்நா லிருக்குது
நேத்ராதி கரணங்க ளுண்டடா
நேர்த்தியான விவேக முண்டடா
பாத்திரம் நீ பருவமடா—இந்தப்
பாருக்குள் பெரியோ ருண்டடா
சூத்திரதாரிபோ லிருக்குதே—உந்தன்
சொரூப மாவிர்த்தி மறைக்குதே (இ)

காரண கார்யங்கள் தோணுதே—இந்தக்
காயமும் வேருய்க் காணுதே
ஆரணம் பொய்சொல் லாதடா
ஆத்மா நீராமே யாமடா
பூரணமாய்ப் பொங்குதே—யிந்தப்
பொல்லாத ஜன்மம் நீங்குதே
நாரமி யெல்லாந் தயங்குதே—அதை
நன்னை யறியாமல் மயங்குதே (இ)

ஓடமிருக்கிற போது வேணும்
ஈடனுக்குக் காலன் வாறது காணும்
பாடாமலெல்லாம் பாடுதடா—நூல்
பாதகா முக்தி கூடுதடா
மூடபுத்தியைத் துறத்தடா—ஜீவன்
முக்திவழியில் மனம் நிறுத்தடா
கூடஸ்தராமீசர் சிரிக்கிறார்—எங்கள்
குருபிரமானந்த ரிருக்கிறார் (இந்)

இ-ம் - சௌராஷ்டிரம்—தா-ம் - ஆதி.

பல்லவி

தன்னைத்தானறியவேணும் தத்துவத்தால்

அநுபல்லவி

தன்னைத்தானறியவேணும் தானவனாகவேதோணும்
சொன்னதுபொய்யல்லகாணும் ஜோதியானஉண்மைகாணும்(த)

சரணம்

அஞ்சுபூதங்களைப் பார்த்து—அதிலுண்டான
பஞ்சகோசங்களைத் தீர்த்து—மனச்
சஞ்சலமறுத்துப்புல னைந்தையுமறுத்து—அதில்
மிஞ்சினதைக் கண்டுநீ களித்து—மேலாம்பதமாம்
பஞ்சணையிலேபடுத்துப் பார்த்து—பரசுகத்துக்
கஞ்சராவியாகவே புரைத்து—அதிலேநின்றால்

கொஞ்சமோ ஆனந்தக் கூத்துங்
கென்சொல்லலா மெதிர்த்து
சஞ்சிதா காமிய மந்து
தஞ்சமாம் குருவைக் காந்து (தன்)

வாதிகள் வழக்குத் தீர—வானுக்குள் நின்ற
ஜோதியைக் கண்டுடன் சேர
உபாதியான உடல் மாற- அநாதியானபந்தந் தீர
போத மெங்கும் பூரணத்திலேற— பொல்லாத கர்மம்
வாசனையைக் கண்டு மனஞ்சீற— வையகம் பொய்யென்
றோதுமறை நிஜமென்று கூற—ஒளித்து நின்ற

போதவெள்ளம் பொங்கி வர
பேத மென்னு முள்ளந் தேற
ஜாதிவர்ணங்களுந் தீர
பேதைகளுங் கரை யேற (தன்)

பாசமேழு சுற்றி வாடி— அதற்குக்கர்ம
வாசனுண்ட நேகங் கோடி— நல்ல
வாசலால் நடந்தால் நாடி — ஆசையாமொருத்திவாடி
வாசலை யடைத்து அவள்மூடி — வழிமறிப்பள்
மாசிலாமணி விளக்கைத் தேடி— மன துருகி
நேசமுடனே நடந் தோடி — நிறைந்த வீட்டில்

வாசனெனுங்குரு பிரம்
மானந்தரைக் கண்டு கூடி
ஈசனெனக் கொண் டாடி
வாசனைகள் விட் டோட்டி (தன்)

இராகம்—மத்தியமாவதி—தா—ம்-ஆதி.

பல்லவி,

ஆத்ம ஞானமே ஜீவனமாம்—அன்
யாயமேதுக்கு ஜன்மபாவனமாம்

அநுபல்லவி.

கோர சம்சார காரணமாமகங்
கார விருத்தி வாரணமாம்
சாரயா மெங்கள் பாரமாம் பசி
திருமுளங் குளிர்ந்தாரு மென்றைக்கு (ஆ)

சரணம்.

தியானமாவது	தாரகமாம் நிஜ	
பானமானது	பாவகமாம் ஜீவ	
வினமானது தேனும்	பாலும்பழ	
மான சர்க்கரை	மௌனமே ருசி	(ஆ)
கோசு தூர்ந்தி	மோசனமாம் பசு	
பாசவர்க்கமி	நாசனமாம் வஸ்து	
தேசகாலாதி	வாசனு மாம் குரு	
பிரமானந்தர்க்கு நான்	தாசனுமாம்	(ஆ)

இ-ம்-புன்னுகவராளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தன்னையறிந்தேனே தானுனந்த மானேனே

அநுபல்லவி.

தன்னையறிந்தேன்	தலைவனையு மறிந்தேனே	
தலைவனுந் தானு	யிருக்கின்ற	(த)

சரணம்.

அன்னமயந்தனிலே	யறிவாகா சமானேனே	
சென்ற வயதுக்குள்ளே	நான் சேஷித்து நின்றேனே	
சொன்ன விகாரத்தில்	சேராமற் றன்னிலும்	
பின்ன மில்லாதொரு	பிரமந்தானுகிய	(த)
பாவியுடல் தனிலே	நான் பற்றிருந்தேனே	
தாவி வெளிதனிலே	நான் ருனேவிற்றிருந்தேனே	
ஆவிபிக்குள்ளே	யறிவாயறிந் தென்னை	
மேவிப்பதங்களில்	மேலா யிருக்கின்ற	(த)

கள்ள விஷயமெல்லாம் நான் கட்டோடவேரறுத்தேன்
கள்ளியைக் கண்டுகொண்டேன் அவளுட்கபடமறிந்துகொண்டேன்

தன்னைக் கதவடைத்தேன் .	தானே பிரமானந்தர்	
பள்ளிக்கூடந்தன்னில்	பாங்காய்ப் படித்துநான்	(த)

இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஆதி.

பல்லவி.

வாக்கு மன துக்கு மெட்டாத வஸ்துவை
வானிலே கண்டுகொண்டேனே.

அநுபல்லவி:

ஆர்க்குந் தெரியாத ஆனந்த மானந்தம்
பார்க்கக்கண்ணுயிரம் வேணும்—தன்னைப்
பார்க்கிறவன் கிட்டத். தோணும்—தேவ
ரார்க்குந் தெரியாது காணும் (வா)

சரணம்.

கர்மவலைகளைக் கண்டிக்க நல்லதோர்
கத்தியெடுத்துக்கொண் டேனே—அந்தத்
தர்மபாப பல ஜன்மவிகாரத்தைத்
தானே தவிர்த்துக்கொண் டேனே—பிந்தப்
பொம்மைக்குள்ளே புறம்பாகி யிருக்கின்ற
போதமறிந்து கொண் டேனே—யெங்கும்
சின்மயமாகவே சேவித்து நின்றசி
தானந்த ரசமுண் டேனே—நாளும்
தன்மய மாகக்கண் டேனே—நல்ல
மர்மமறிந்து கொண் டேனே (வா)

சத்துச் சித்தானந்த சம்பத்துண்டாகிய
சாஸ்வத பிரம்மமீ தென்றும்—அ
சத்து ஜடதுக்க மான ஜகத்துக்
கன்னிய மன்னிய மென்றும்—எந்தன்
சித்தத்திலே கண்டு சேவித்து நின்றசி
தாபாசனை மெள்ள வென்றும்—பர
மத்து விதீயப்பொருளை யகமென்ற
றிந்து நிலையிலே நின்றும்—ஜீவன்
முத்தி சுகந்தானி தென்றும்—யோக
நித்திரையினாலே நின்றும் (வா)

நாச சரீரத்தை நாலையுங் காண்பித்த
நால்வேத சாஸ்திரத் தாலே—பஞ்ச

கோசங்க ளென்கிற கோட்டையிடித்த
குருபிரமானந்த ராலே—யாரும்
பேசாத பேர்செல்லாம் பேசிக்கொண்டோன்
புகழ்ந்திருந்தநி ஞலே—பின்னும்
காசாசை கொண்டு கலங்கின பேருக்குக்
கார்யமில்லாததி ஞலே—எங்கள்
ஈசன்குரு நாத ஞலே—மூன்று
வாசலை யற்றதி ஞலே (வா)

வந்தான் வந்தான் பரதா-என்றமெட்டு.

இராகம்-மத்யமாவதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கரும வலை கடந்தேன்—கருத்தினில்
பிரமங்கலை யடைந்தேன்

அநுபல்லவி.

மரும மறியா மகாதவம் செய்தெந்தன்
தருமபாபங்களுந் தானே சமமாகி (கரு)

சரணம்.

அண்டம் பதினு ஞலகுக்கு மாதார
மாகி நின்றேன்
பிண்ட மிருந்தாலும் எனக்கென்ன
பேதமறிந்து கொண்டேன்
வண்டத்தனஞ் செய்த மாயாவுலகத்தைக்
கண்டிக்க நானே ரகண்ட கோடாஸியாய்
உண்டு பண்ணின வேதசாஸ்திரம்
ஒக்கவே பொய் யாக்கிதன்னிலே
கண்டு பூரணமாகியே வெறுங்
கற்பிதமாங் காலனுகிய (கரு)

ஏறுமரந்தனிலே யுபாயங்கொண்
டேறிஇருந்து கொண்டேன்
பேராயிரந்தனிலே ஞானநிலை
பெற்று நிறைந்துகொண்டேன்

மாறுத சிந்தை மகிழ்ச்சியுடனதில்
ஆறுத காதல்கொண் டானந்த மாகிய
வேறுசெய்துட லாதிகள்தனை
விண்மலர்க்கிணை யாகுமென்றெரு
தேறுதல் வருதென்ன பாக்கியமோ
தேவர்திரியெக் நாதியருக்குள்ளே (கரு)

புத்தியதி சயமோ நான்முன்செய்த
புண்ணிய பரி பாகமோ
பத்திவை ராக்கியமோ தத்துவம்
பதார்த்த விசாரணையோ
முத்திதரும்பிர மானந்த மூர்த்தியின்
சத்தியதிசய மாமிர்த சாயுஜ்யம்
அஸ்திபாதி பிரியமதென்றுரை
அநுபவங்களும் வந்தெனக்கிது
சித்தியாச்சுது இவ்வுலகினில்
ஜீவனீசனை உண்டுபண்ணின (கரு)

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.
பல்லவி.

ஐயா நீர் தந்த ஆனந்த மானாலும்
அதிசயமாகவே தோனுதையா (ஐ)

அநுபல்லவி.

மெய்யான குருபிர மானந்த நாதனே
வேதாந்த வேத்யனே நாதாந்த மூர்த்தியேயென் (ஐ)

சரணம்.

கண்டமில்லாம லகண்டமாய்க் காணுது
கருவி கரணங்கள் கண்டாலும் வீணது
அண்டர்முனிவர்க்குள்ளுந் தானென்று தோணுது
அடிநடு முடியில்லா வான்றன்னைப் பூணுது (ஐ)

பழகப்பழக மெத்தப் பாக்கியம் வருகுது
பரம சுகானந்த பரவசந் தருகுது
அழகா மறிவுத்தியால் அண்டமெல்லா முருகுது
ஆனந்த வெள்ளங்கங்கு கரையற்றுப் பெருகுது (ஐ)

கருணை மிருந்த கடாட்சத்தினு லிந்த
காக்ஷியைக் கண்டு கலந்தயல்லாச மந்த
அருணப்ர காசம்போ லண்டமெல்லா நிறைந்த
அறிவின் மகிமையை யாரிடம் சொல்வேனென் (ஐ)

கட்டை பொறுக்கவைத்தாய் சிவமே - என்றமெட்டு.

இராகம்-மணிரங்கு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மனது பூரணமாகுதே யென் சாமிநாதா
தனது பாக்யமென்றெண்ணித் தானே யோசனைபண்ணி (ம)
என்ன காரியமிருந்தாலும் எவர்பலபல சொன்னாலும்
அன்ன மயாதியைவிட்டு ஆத்ம நிலையைத்தொட்டு (ம)
நாறுமுடலை நம்பாமல் நல்வினை செய்துசோம்பாமல்
ஆறுவிகாரங்க ளின்றி ஆனந்தாத் மாவிலொன்றி (ம)
உடல்கரண மிருந்தாலும் உலாவுவதிற் பேயானாலும்
கெடல் வழிகள் தன்னைமூடிக் கேவலாத்மாவைக் கூடி (ம)
காரண காரியங்கள் தெரிந்து காமகுரோதங்கள் பிரிந்து
வீரிய மிருந்தானந்தத்தில் மேவிமகிழ்ந்தகத்தில் (ம)
குருபிரமானந்தாகியே விமலசித் சுக போதியே
துங்கஞானத் தீயிலிட்டு துவைத பாவத்தைச்சுட்டு (ம)

இராகம்-மத்யமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

சாக்ஷி சைதன்யமானே னென்றும் சத்குருகிருபையால் (சா)

அநுபல்லவி.

காக்ஷி கண்டதில்நின்று சூக்ஷித் திருந்துரைத்து
வீக்ஷித்த தினால் பந்தம் துவேக்ஷித் தொருவிதமாய்
விக்ஷணை செய்து விசாரமிருந்தொரு
தாக்ஷியில்லாமலே தற்பதமாகவே
தீக்ஷித் தவனையும் தியாகம் செய்ததி
தீக்ஷணமுள்ள திவாகரன் போலவே (சா)

சரணம்.

தேகாதி பிரபஞ்சம்வே றாக்கி—தேகாதிக்குள்ளே
மாக பாசமறுத்து நீக்கி—முக்காலத்திலும்
வேகாத தலையென்று நோக்கி—விவிதமான
சாகாத காலில்லாதென் றாக்கி
யேகாந்த நிர்மலத்தில் யோக சயனங்கொண்டு
லோகாதரங்களென்னுந் நாகந்தனிந்துள்ளம்
பாகமுறைந்து பராபரவெளியிலே
தேகமறைந்தொரு தேஜோ ராசியாய்
தாகம் நிறைந்தும் அதீத நிலையிலே
சோகமுறிந்து சுபாவம தாகிய (சா)

மாயாவுடல் கருவி யென்றும்—மற்றொருவர்க்கு
வாக்காலுரை செய்யாதே கண்டு—வானுக்குள்நின்று
ஓயாதானந்த நிலை கண்டு—ஒருவர்க்குமப்பிர
மேயா தனுபவமீ தென்றும்
காயாம் புரியில்மனம் நாயாய்த் திரிந்துலக
பேயாடுவார்கள் சம்ப்ர தாயமறிந்துமிந்த
ஞாயமடங்கிய ஞானதிவாகவும்
மாயை தடங்கிய மறையருள்கர்மங்கள்
சேய நடுங்கிய சின்மய}மாயதின்
சாயை யொடுங்கிய சமரசமாகிய (சா)

சிரவணாதி சாதனத்தி னாலும்—ஜென்மங்கள்கோடி
தவமீஸ் வரார்ப்பணத்தி னாலும்—தாரணிபுகழ்
சிவகுரு பிரமானந்தத்தின் சிந்தை —மகிழும்
நவமாம் புத்திவிவேகத் தாலும்
தெய்வமா யுலகுக்கெல்லாம் சிவமாய் நிறைந்தெந்நாளும்
பவதோஷாதிக ளில்லா தவனனுக்கிரகத்தினால்
பவமுறு சிந்தைகள் பலபலவானதும்
தவமருளுங்குரு தயவதனாலது
சிவமுறு சிந்தனை சேகரமாயுல
கவனிவ னதுவென் றனுபவ மதனால் (சா)

இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

அறிவுதா னென்றறிந்த பேர்க்கு
அவ்யமுண்டோ வதை நீபாராய்

அநுபல்லவி.

குருவுந்தானே குறிகுண மன்று
மருவுமானந்த கோசமு மன்று (அ)

சரணம்.

பெண்டு பிள்ளைகள் பொருள் பொய்யென்று
அன்று மாதவன் சொன்ன தறிந்து
கண்டு கருத்தில் கலந்து நின்று
தானே நிறைவாகவே நிறைந்து (அ)

கற்பிதபிர பஞ்சமென்று
கானற் சலம் போலே கண்டு
சொற்பனத்தில் கண்டசுகமென்று
அஸ்மா மீதா காதென்று (அ

மட்டில்வேத சாஸ்திரங்கொண்டு
சட்டி சட்டுவம் போலே கண்டு
குட்டுமார்க்க மறிந்து கொண்டு
வெட்டவெளி யாகவே நின்று (அ)

பஞ்ச பூதப்பிர பஞ்சவிகாரம்
அஞ்சுதன் மாத்திரை யறிந்த பிரகாரம்
கொஞ்ச விஷயங் குறிக்குமந் நேரம்
மிஞ்சின தேயது வேதாந்த சாரம் (அ)

பருவங்கண்டு பாக்கியங்கள்
தரும்பிரம்மா னந்த ரெங்கள்
குரு சன்னதி கண்ட ஜனங்கள்
சருவ காரண மாவார் தங்கள் (அ)

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

சபாசு மேலடா சாமி நீநந்த
சௌபாக்கிய மென்ன சொல்வேன்

அநுபல்லவி.

ஆபாசமாந்தே காதிமங்கலமும்
அறிவினிடத்திலே தோன்றிமறைந்த
தருவினிடத்திலே புருடன் போலே (ச)

சரணம்.

ஆரோபமாமொரு அடர்ந்த காட்டிலே
அபவாதவழிகண்டு
நேருடனே சென்று நிவாததீபம்போல
நிர்ச்சல மாகவே நின்றநிலைக்கு
அச்சமில்லையொரு காணுமினிமேல் (ச)

பொன்னுக்குள்ளே பூஷணங்களானதும்
பொய்யா யிருந்தாற்போல்
என்னுக்குள்ளே யிந்த வீரேழு லோகமும்
இருந்து தோனுது என்னிடமேயுற்
றுணர்ந்து பார்த்தால் தன்மயமே (ச)

மணிகளநேக மிருந்தாலு மணிக்கோர்
தசர மென்று போல
பிணியான காயங்களில் போதம்நானும்
பூண்டிருந்தேன் புவனங்க ளெல்லாம்
நின்றுண்டிருந்தேன் அறிவுமயமாய் (ச)

நிராவலம் பனமாய் என்றும் நிரஞ்சன
நிர்மல மயமாய்
சராசரங்களி லேயிருக்கும்
சலன விகாரங்க ளேதிருந்தாலும்
மலினமில்லாதொரு வெளியது போலவே (ச)

அபரிமிதானந்த வாரிதியே யென்னையா
குருபிரமானந்தனே
விபரீத பிராந்தியைப் போக்கியென்னுள்ளே
விபுவாய் நின்ற விகற்பமில்லா தொரு
பிரபுவாய் நின்ற பராபரமூர்த்தியே (ச)

இராகம்-தர்பார்-தாளம்-ஆதி.

பல்லவி.

சந்திரோதய மாச்சே போத
சந்திரோதய மாச்சே

அநுபல்லவி.

இந்திராதி தேவர் முனீஸ்வராளுக்கும்
எட்டாத குருபிர மானந்தத்திலிருந்து (ச)

சரணம்.

அறிவு நிதிவிருத்தி யாச்சே—மனதென்னும்
ஆம்பல் மலர்ந்த தாச்சே
சொரியுற தானந்தங் களுமாச்சே
சொல்லமுடியில்லாத சுகமாச்சே (ச)

காயமும் வே றாச்சே—காமாதி
கள்ளர் பயமும் போச்சே
சோயமென்னும் பதம்பொய்யாச்சே
சோகம் பாவனையே மெய்யாச்சே (ச)

மோக விருளும் போச்சே—சுபாவ
முத்தி சபல மாச்சே
ஏகமானவெளி தானாச்சே
ஏகாந்த நிர்மல வொளியாச்சே (ச)

கண்டதிரிசயமும் போச்சே—தோணியும்
கானல் சலம்போ லாச்சே
அண்டர் முனிவர்க்கும் அரிதாச்சே
ஆருமறியாத அதிசய மாச்சே (ச)

சாதி வர்ணம் போச்சே—வேத
சாஸ்திரம் வெறும் பாச்சே
ஆதியந்தமுமில் லாதவறி வாச்சே
அபரிமிதானந்த சுகமாச்சே (ச)

இராகம்-பியாக்கு-தாளம்-ஆதி.

பல்லவி.

பூரண மானேன் பிரமானந்தா
ஆரியனருளா லசையாமல் (பூ)

அநுபல்லவி.

காரணமாகக் காரியமிறந்து நிர்மாயிருந்தேன்சிவமாக
தாரணி யிழந்தேன் தன்மயவடிவாய்
வேறுரு மறந்தேன் வெளிபோலே (பூ)

சரணம்.

சஞ்சலமிறந்து தன்மயவடிவாய்
அஞ்சையுமறந்தே னநுதினமும்
மிஞ்சின பொருளாய் முத்திசுகத்தில்
வஞ்சப் பிறவியற்று வானுருபோல் (பூ)

அம்புதிபோல அகண்ட வடிவாய்
பிம்பமற்றருளும் பொருளாகி
கம்பத்தில் சோரன்போல் காணும் பிரபஞ்சத்தை
அம்பரநிலமென் றறிவாகி (பூ)

சொல்லும் பொருளற்று சொரூப சுகத்தில்
அல்லல் வினைகளற்று அறிவாகி
பொல்லா மனச்சிந்தை போக்கிப்பிரமானந்த
உல்லாசமாக நின்றேன் உயர்பதத்தில் (பூ)

சிந்தையிழந்து சின்மயவடிவாய்
பிரமாநந்தர் பதந் தொழுது சதா
எந்தன் வடிவா யிருபொருள் மறந்து
சந்தத மிருந்தேன் தானாக (பூ)

இராகம்-குறிஞ்சி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஆனந்த மானேன் ஆனந்த மானேன்
ஆனந்தமாய் நிறைந்தேன் அகிலமெல்லாம்
அருள் கிருபையால் (ஆ)

காவற் சலம்போல் பிரபஞ்சம்
தோணலென் றேயறிந்து சொரூபமானேன் (ஆ)

அறிபவனும் அறிபொருளு மற்று
பரிபூரணமான சுக பதத்தையுற்று (ஆ)

நானவனே நானுகி எங்கும்
வானுருவம் போல் விளங்கிநின்றேன் (ஆ)

அதுவிது வென்ற பேதபத மிறந்து
சதமான முத்தி பதந்தனையடைந்து (ஆ)

யாவுந்தன் மயமான இடந்தனிலே
ஜீவபாவமிறந்து சிவமாகி (ஆ)

சுத்தவஸ்து வாகத் தன்னை யறிந்து
நித்திய அபரோக்ஷ நிலையின் நின்று (ஆ)

சிந்தை யற்றுச் சிவமயமாகி பிரம்
மானந்த பதமலர் தொழுது சதா (ஆ)

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

வெட்டவெளி யாகிப்போச்சே பிரமானந்தம்

அநுபல்லவி.

இஷ்டமுடன் குருநாதன் சுட்டிக் காட்டினபொருளாய்
நஷ்டமாகி ஜென்மவினை நிஷ்டையிலே யெப்பொழுதும்(வெ)

சரணம்.

சூதுடனே வாதுசெய்து சொரூப சுகத்தை விட்டுப்
பேதித்திடு மனமாயை சேதமாகி யெப்பொழுதும்(வெ)

தாறுமாறுமாய் விரிந்த பாருலக மத்தனையும்
ஆரியனருளினுலே பூரணமா யெப்பொழுதும்(வெ)

அங்குமிங்கு மேகமாகப் பொங்கிடும் பூர்ணசுகத்தில்
மங்குமன விருத்தியெல்லாம் பங்கமாகி யெப்பொழுதும்(வெ)

பித்தனைப் போலவே சதா மத்தனுகச் சஞ்சரிக்க
உத்தம சுகத்தைத்தந்த கர்த்தனுலே யெப்பொழுதும்(வெ)

ஜாதியுடனிநிகுல கோத்திர மாதிகளெல்லாம்
ஜோதியான தன்னிவந்து பாதியாம லெப்பொழுதும்(வெ)

அம்பரம் போலவேதான் சிதம்பரமாகிய சுக
அம்புதியிலமிழ்ந்தலகி னின்பமற் றெப்பொழுதும்(வெ)

ஆவகையனாலே துடரும் போக்குவர வற்றபிரம
பாக்கியத்தை யடைந்துநான் சிலாக்கியமா யெப்பொழுதும்(வெ)

எந்தன் குருவாகவந்த பிரமானந்த ரருளாலே
பந்தமோக்ஷ மற்றுசதா எந்தன் வடிவமாகவே(வெ)

இராகம்-சஹானா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நிரதிசயானந்த சுகந்தந்த குருநாதன்
நீரல்லவோ சாமி—எங்கும்
நிறைந்த சுக போதன் நீரல்லவோ

அநுபல்லவி.

தரதி சோகம் ஆத்ம வித்து
தனே தானுச்சு தெல்லாம்
தன்மயமாய் யென்மயமாய்
சின்மயமாய் தோணுதிந்த (நிர)

சரணம்.

கர்மகள்ள குழிகளெல்லாம் காலடியிற் சுட்டி
காமமென்னுங் காடுவெட்டி ஞானத்தீயை மூட்டி
மர்மஞான வாரிதியில் வாரியெனைக் கட்டி
வாய்பேசாவான் பொருளென் மதியிக்குள்ளே நாட்டி
துன்மார்க்க வழிகளிலே தூரநடந் தோயாமல்
துரிய பதம் பெரியபதம் தெரியுவித மறிவிக்கிந்த (நிர)

கற்பனையாய்க் காண்பதெல்லாங் கருத்துக்குள்ளே தானே
கானற்சலம் போலகண்டு களித்திருப்பே னே
அற்பனிந்த மானிடனென்று அறிந்துகொள்ளலானேன்
ஆருக்குள்ளே யடங்குமிந்த அவனிக்குள்ளே தானே
சொற்பனமாய்க் கண்டதெல்லாம்
சொல்லிக் கொண்டிருந்தாலு மென்ன
சோகமுண்டோ தாகமுண்டோ தேகமுண்டோ அறிவுக்கிந்த()

காயமென்றுங் கள்ளனிங்கே காத்திருக்கும் போதே
கருந்து மாயட்டமறாமி காலனுமில் லாதே
மாயையென்னு முலகமெல்லா மாய்மடிறந்த போதே
மகத்தான பெருவெளியாய் மனது நிறைந்ததே
தூயகுரு பிரமானந்தனே தோணனுக்குள்ளானவனே
தொந்தமுண்டோ பந்தமுண்டோ மந்தமுண்டோ மதிக்கிந்த

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

அக்ஷயானந்த சுகம் அளித்தகுருநாதா

அநுபல்லவி.

சக்ஷுவினலென்னை நோக்கித் தக்ஷணமே வினைநீக்கி (அ)

சரணம்.

பாவாபாவங்கள் நீக்கி பரப்பிரம மயமாக
யாவு மறியச்சொல்லி யருளிடும் மொழியாலே (அ)
ஞானமிர்த ரசத்தைக் கருணையா லருள்செய்து
ஆனந்த வாரிதியில் அமிழ்ந்திட எப்பொழுதும் (அ)
சமரச பதந்தன்னைத் தயவுடன் கொடுத்தெந்தன்
மமதை யறுக்கமகா மந்திர முரைசெய்து (அ)
ககனுப மானத்தாலே காட்டியெந்தன் ரூபத்தை
மகாகன மாகஎன்று மாசற்ற நிலைதந்து (அ)
அகமேக மாகவிந்த அவனி முழுதுங்காண
சுகவடி வாகப் பிரம்மா னந்தராய் வந்து (அ)

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஜென்ம சபல மாச்சுதையா இந்த (ஜெ)

அநுபல்லவி.

கன்ம காரணமான ஜென்மகோடியிலிந்த (ஜெ)

சரணம்.

பொல்லாவிஷய மென்று குறித்து இந்தப்
பூலோக பரலோகமும் வெறுத்து வெகுவாய்
மல்லாடு கரணங்களை மறித்து எந்தன்
மனதில் சித்தியாசையும் பெருத்து ப்பாரில்
நல்லோரைக் காணமல் நைந்துடலிளைத்திந்த (ஜெ)

மாயாசம் சாரத்தில் வாடி உள்ளம்
மலையாமல் குருபாதம் தேடி அவர்
வாயா லுரைத்தபொருள் நாடி நல்ல
வழியொடு நடந்தென்னைக் கூடி யிவர்
ஓயா தானந்தநிலைக் குபகாரம் கோடி யிந்த (ஜெ)

சங்கவர்ஜிதனு விருந்து தானே
சச்சிதானந்தமாய் நிறைந்து குரு
பிரம்மா னந்தமென் றறிந்து தன்னை
வேதாந்த பொருளாய்த் தெரிந்து சித்தாய்
எங்குமாய் நிறைந்ததில் ஏகமாய் நிறைந்திந்த (ஜெ)

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னைத் தவிரவேறே யில்லையென் றுபதேசம்
செய்த குருவை என்றும் மறவேனே

அநுபல்லவி,

முன்னே செய்ததவம் மூர்த்திகரித்தெந்தன்
யோகந்தீர்க்கபிர மாநந்தராக வந்து (எ)

சரணம்.

பூதமும் வேறல்ல பொறிபுலன்வேறல்ல
வாதமு வேறல்ல வாக்கு விகாரமல்ல
சாதனை பண்ணிநாம ரூபத்தைச் சோதித்தால்
வேதங்கடந்த பொரு ளாமென்றுரிவர் (எ)

பஞ்சாதன் மாத்திரை பகுந்துப் பார்த்தவிடம்
பாழானதுக்கு நீயே சாக்ஷி யென்றுரிங்கே
மிஞ்சுமறிவே நோனும் நோணலே நீயென்று
வஞ்சமறும் நல்ல வாளிருகையிற் றந்து (எ)

கையென்றுங் காலென்றுங் காடென்றும் புரமென்றும்
பொய்யென்றறிந்துகொண்டு புகன்ற அறிவேயென்றும்
மெய்யென்றும் சுருதியுக்தி அனுபவத்தினுள்ளம்
கையினெல்லிக் கனிபோற் காட்டின ரதிசயம் (எ)

பட்டையு டுத்திப்பளி பூண்டுதிரியு மிந்தப்
பாக்ய மேதென்று பார்க்கில் மனவிகாரம்
கட்டையிற் கள்ளன்போல காணும் பிரபஞ்சமதைச்
சுட்டுக் கரைக்கச்சுக சாகரமாம் நீயென்று (எ)

ஆதியும் நானே யனாதியும் நானென்று
சோதித்துக் கண்டேனெங்குஞ் சோதிமயமாமென்னை
வாதிக்கு வேதமகா வாக்கியத் தனுபவம்
போதித் தறிந்தகண்ட பூரணமாம் நீயென்று (எ)

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மானத்துடனே போடி மாயையே நீ (மா)

அநுபல்லவி.

வானொத்த குருபிரமா னந்தரிங்கேயொரு
தானத்தினுண்டவர் ஞானத்தீயிங்கே யுண்டு (மா)

சரணம்.

வாசனா வசத்தாலே நீ வந்தவழியு மறிகுவேனடி
கோசத்துக் கப்பாலேநான் குடியிருப்பேனென் றறியாயோடி
பாசக்கொடி கடந்து ஆசைக் கடல்கடந்து
வாசற்படி கடந்த மாசற்ற ஜோதியடி (மா)

தத்துவ மறிவேனடி எந்தன்கிட்ட தாறுமாறுமென்னடி
சித்துரூபனடி எங்கும் சிறந்த ஞானமடி
வஸ்துநிலையை நான் உற்றுணர்ந்துபரி
சுத்த சொரூபரான அத்துவிதியனடி (மா)

குஷ்டரோகமடி உன்குய்யத்தின் திட்டம்நானறிவேனடி.
தட்டக்கூடாதுபோடி நாதன்தந்த திருஷ்டியுண்டுபோடி.
பட்டப் பகலிருட்டைக் கிட்டவரமொட்டு மடி
துஷ்டமாயையே ஞானம் சுட்டு விரட்டுமடி (மா)

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஆத்ம ஞான வலேயிற்குள்ளே
யகப்பட்டுக் கொண்டேனேவிதியே

அநுபல்லவி.

பத்மலோசன் முகத்தில் விழித்த
பலனேவிது நானறியே னிவர் (ஆ)

சரணம்.

தத்து மவிமருந்தைக் கூட்டித்
தாம்பூலச் சிரணவத்தி லூட்டி.
யுக்தி சமரச மிஞ்சியே சை
யோகத்தி லென்னுடன் கொஞ்சியே
நித்தியானந்த நிலேயிலே யென்னே
யிருத்தியே யுரு வேற்றியே
வைத்துக் கொடுத்தா ரென்னமோவதில்
மயங்கினேன் மெத்தத் தயங்கினே னிவர் (ஆ)

அகத்தி லொன்றும் புறத்திலொன்றும்
அடுத்துக் கொண்டென்னே யாகுமென்று
சுகத்தை யுள்ளுக்குள் நாட்டியே
சொந்தம் போலேபா ராட்டியே
இகத்தாரென்னே யேசவே
யிதத்திலே யவர் மதத்திலே
செகத்திலொன்று மில்லாமலாக்கிச்
செய்தவரிவர் சேதியறியாத (ஆ)

தற்பரர் சுருதி விதிந்தது தானே
தலேயிலே பிரமன் எழுத்துத்தானே
இப்படி யென்று நானறியேன்

இந்தச் சித்ரப் பிரமையைப் பிரியேன்
தற்பரர் சூது தெரியுமோ நல்ல
தர்மியல்லோ நான் கர்மியல்லோ
அப்பிரமே யசிதா னந்த ரூபர்
அசலராம் பிரம்மா னந்தரா மிவர் (ஆ)

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இவருக்கு நானென்ன செய்தேனோ தெரியாது
என்னை யிப்படிச் செய்தார்

அநுபல்லவி.

கயிறுங் தோண்டியும்போல காயத்தோடிருந்தவென்னை
காளையுங் கடிவாயும் போலெந்தன்
காயமென்க் கிருகாத மாக்கினார் (இ)

சரணம்.

பெண்டு பிள்ளையில்லாமல் பேரூரும் மில்லாமல்
நன்றுதீ தொன் றுமில்லாமல்
கண்ட கருமம் செய்ய கைகா லுடலில்லாமல்
அகண்ட பெரு வெளியுரு வமாயொரு
ஆதரவில்லாமற் செய்தார் (இ)

புதுப்பானை யீயைப்போல போகமெனக்கில்லாமல்
புவிவிஷயங்கள் பொய்யாக்கி
மதுவுண்ட நாயினால் நீருண்ட மரியாதை
சதுர்மறைகள் புராண சாஸ்திரம்
அதினுமென்னளவு மாசை வையாமல் (இ)

அசுவத்த பிரதக்ஷணம் ஆதித்தனமஸ்காரம்
அகில கர்மங்களெல்லாம்
விசுவாசமாய்ச் செய்த விருத்தியொழிக்கச் செய்தார்
நசுவரமென்னும் நாட்டிலேயெங்கள்
நாதர் குருபிர மானந்தர் (இ)

இராகம்-ஆனந்தபைரவி- தாளம்-ஆதி.

பல்லவி.

உபகாரத்திற்குப்பதி லுபகாரம்செய்ய வேறே
உலகத்திலொன்றுங் காணேனையா

அநுபல்லவி.

அபராதியாமோ அடியேனுக்கிந்த
அகிலமும்அறிவு மயமாய்த் தோனுதையா (உ)

சரணம்.

உடல்பொருளாவியு மூலகுமக்கீந்தாலும்
ஒருமொழிவிலை பெறுதையா
உடலாதிப்பிரபஞ்சத்தில் ஒன்றெனக்கில்லையது
உம்மைத் தவிர உண்டோ ஐயா ஐயா (உ)

ரணபாதகனென்று நீதிஉரைத்தாலிந்த
ரணந்தீர்க்க மாட்டேனையா
குணவிரஹிதனென்று குவலையந்தனிலும்மைக்
கொண்டாடுவேன் அனல்லாமலையா ஐயா (உ)

கூட்டுக்குளடைபட்ட புழுவெற்குபதேசித்த
குழவிக் குதவியுண்டோ ஐயா ஐயா
நாட்டுக்குள்ளே பிரம்மானந்தநாதரே
நானென்ன செய்யப்போவேனையா ஐயா (உ)

இராமம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

உமக்கென் னுபகாரத்தைப் பாரும்
உலகத்தைக் கண்டு தேறும்

அநுபல்லவி.

கமுக்கம் பேச காரியமுண்டோ
காரணகுரு பிர மானந்த நாதரே (உ)

சரணம்.

என்ன சொன்னாரிவ ரென்றிருக்காமல்
இரவும் பகலும் பார்த்து
இன்னபடியாமிவர் சொன்னவுண்மைஎன்
றெண்ணி மனதினிலேற்றி

சொன்னபடியேகடந் தாத்மலிலக்கடையைச்
சோதித் துணர்ந்து பார்த்து
சன்னல் பின்னல் செய்த ஜடசைதன்யங்களின்
சஞ்சாலத்தை நான் நீர்த்து (உம)

ஆயிரந்தரம் அருள்செய்நீராகிலும்
ஆருக்கு உள்ளிலே யேறும்
பேயுமழைக்கு முத்துச் சிப்பிகளா யெங்கும்
பெருந்துண்டாகுமோ கூறும்
தாயுந்தமருமையன் றன்னுடலாசையுந்
தவிர்ந்திருக்குமோ ஆரும்
வாயில் வலதுஞானம் வழியுந்துறையுமாக
வுார்த்தைசொல் வார்களோ பாரும் (உம)

ஆவரணாதிகள் அழிந்த கண்டனிலே
அநுபவமாய் வல்லேயோ
தீவிரமாய் திவ்ய போதாமிர்தரசம்
தேன்பால் ருசிதர வில்லேயோ
தாவராதிகளைத் தன்மயமாகவும்
தாரணியில் வெகு தொல்லேயோ
தேவரீர் ஞானத்தை தேசப்பிரசித்தியாய்த்
தினமுமனுபவிக்க வில்லேயோ (உம)

இராகம்-பிலஹரி—தாளம்-சாப்பு.

பல்லவி.

பிரமானந்தத்தைக் கண்டுநீ சும்மா
பேசா திருமனமே

அநுபல்லவி.

தர்மமோ விதுசொல்லத் தாரணியோர்க்கிந்த (பி)

சரணம்.

சர்வபூரணமாகிச் சச்சிதானந்தமாகிக்
கர்வமொடுங்கிய கேவலமாய்நின்ற (பி)
நித்யானந்த சொரூபமாய் நிர்விஷயமாய்நின்ற
சத்தியஞானனந்த சாஸ்வதமாகிய (பி)

வேதாதீதமாகிய விநிர்விஷேதமில்லாத
போதானந்த சொரூபமே சரணமாய்நின்ற (பி)
பிதோஸ்ஞுதிகளின்றி ஜெனனமரணமின்றி
வேதோக் தனுஷ்டானுதி விரகிதமாய்நின்ற (பி)
சமரசவடிவாம் பிரமானந்ததேசிக
விமலபோத சொரூப விஸ்வமயமாய்நின்ற (பி)

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சீர்பெருகும் சச்சிதானந்த மாகிய
சின்மயனே குரு நாதா
பார்முழுதும்பர மாகிநிறைந்தவென்
பாக்கியனே குரு நாதா

ஆரறிவாரெனக் கருளியவனுபவம்
ஆண்டவனேகுரு நாதா
பேரறிவாகிய பிரமநிலக்கடை
பேசறியேன்குரு நாதா

அந்தகன்போலவே யலைந்துதிரிந்தவென்னை
ஆண்டவனே குரு நாதா
சிந்தை மகிழ்ந்திடச் சிவபதமருளிய
சேதனனே குரு நாதா

பந்தமோக்ஷமென்றும் பேசறியாதொரு
பேதையல்லோ குரு நாதா
சந்தத மனுபவ மாகவேதாந்தத்தைச்
சாற்றி வைத்தாய் குரு நாதா
மரமேறிக்கை விட்ட மானிடர்போலவே
மாண்டு பிறவாமல் நாதா
திரமெனக் கிந்தருந் தேவரீரல்லவோ
தேசிகனே குரு நாதா

சரசப்பேச்சில் சச்சிதா னந்தநிலைதந்த
சாமியல்லோகுரு நாதா
பரமரகசியப் பதமருள்செய்பரி
பூரணனேகுரு நாதா

நித்ய நிரஞ்சன நிர்மலமாகிய
நிற்குணனேகுரு நாதா

சத்யஞானனந்த சமரசமாகிய
சாஸ்வதனே குரு நாதா

புத்திக்கு சாக்ஷியாய் போதமதாகிய
பூரணனே குரு நாதா
பத்திவைராக்ய மழுமறைநூல்களின்
பழம்பொருளே குரு நாதா

முத்திபரமசுகம் தன்னுக்குள்ளே தானே
முன்னமேயிருந்தாலும் நாதா
அத்திக்கு சாக்ஷியாய் அறிகிறவனுபவம்
ஆர் தருவார் குரு நாதா

சுத்தியில்ரஜதம்போல் தோனும்பிரபஞ்சமென்று
சொல்லுமையா குரு நாதா
யுத்தியனுபவங்கள் சொல்லியுலகப்பேயை
யொழிக்குமோ நூல்குரு நாதா

நிர்விஷயானந்தம் நிலையெனக்கீந்ததும்
நீரல்லவோ குரு நாதா
துர்விஷயங்களைத் தூளாக்கியவெனது
துரையல்லவோ குரு நாதா

சர்வமுந்தானாய்ச் சமரசபதந்தந்த
சாமியல்லோ குரு நாதா
பர்வதமாம்பிராந்தி பந்தமறுத்ததுன்
பாதமல்லோ குரு நாதா

காசம்பார்த்த கண்ணைக் கடுவெளியாக்கிவைத்த
காரணனே குரு நாதா
நாசம்பிறவியில்லா நாடெனக் கருளிய
நாயகனே குரு நாதா

பாசமகற்றி யென்னைப் பதிதனிற்கூட்டிவைத்த
பண்டிதனே குரு நாதா
தேசம்புகழும் பிரம்மானந்தராம் எங்கள்
தேசிகனே குரு நாதா

அடிமுடிநடுவின்றி அண்டமுழுதும்ஞான
வடிவாய்நிறைந்தவர்க்கு மங்களம் சிவ
வடியாரைக் கூட்டிக்கொண்டானந்தவெளியிலே
குடியாயிருப்பவர்க்கு மங்களம் எங்கள்
குருபிரம்மானந்தருக்கு மங்களம் எங்கள்
அஸ்வத்த நாதருக்கு மங்களம் எங்கள்

முத்துராமலிங்கருக்கு மங்களம் எங்கள்
சஸ்ஸகாய சுவாமிக்கு மங்களம் எங்கள்
விவேகாநந்த சுவாமிக்கு மங்களம் எங்கள்
சாதுசங்கந்திற்கு மங்களம் நித்யமங்களம்

இ-ம்-சுருட்டி-தா-ம்-ஆதி.

கண்ணி

நித்யானந்தபிரகாசருக்குந்நிற்குணர்க்கு மங்களம்
சத்யானந்த கனமாய் சர்வமுந்தன் மயமாய்
சுத்தஸ்படிகரான சொரூபருக்கு மங்களம்
அகிலாதிபேதமற்று அகண்டேகரூபமாகி
சுகமயமானசொரஸ் சொரூபருக்கு மங்களம்
அவனிமுழுதுமர்த ஆனந்தாகாரமாகி
சிவமயமாய்விளங்கும் சின்மயர்க்கு மங்களம்
பிரத்தக்கற்றரூபர்தானே பிரமானந்தகுருவாகி
தயவுடனருள்செய்த தன்மயர்க்கு மங்களம்

சுலோகம்

தேஹோமித்யா மனோமித்யா சித்தம்மித்யா ஜடத்வத:
ஸர்வம்மித்யாந ஸந்தேஹோ பிரம்மைவாஹம் நஸம்சய:
நிஸ்தத் தத்வ விநாஸத்வ வாசாரம்பன நாமத:
மாயாமயம் ஜகத்ஸர்வம் பிரம்மைவாஹம் நஸம்சய:
மநோமயம் ஜகத்ஸர்வம் பிரம்மைவாஹம் நஸம்சய:

நாஹம் தேஹோ நேந்திரயாண் யந்தரங்கோ
நாஹங்கார: பிராணவர்கோந புத்தி:
தாராபத்ய க்ஷேத்ரவித்தாதிதூர:
ஸாக்ஷிநித்ய பிரத்திய காத்ம: ஸிவோஹம்.

பல்லாண்டு.

மூர்த்திகள் மூவருமறியா முழுமுதல் வந்தோருருவா
யார்த்தபெரும் பாசமெனு மாயிருள்வா யழிவேனுக்
கோர்த்துணரும் வகையருளி யொருகொடியிற் பிறப்பறவே
பார்த்தெனையாட் கொண்டவர்க்குப் பல்லாண்டு கூறுதுமே
பரவரிய நாதனுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

நீங்காத பெருந்துயரா னெருக்கியெனைச் சுழற்றியிடு
மாங்காரந்தவிர்ந்திடவோ ராரியனாயெழுந்தருளி
ஓங்காரத் துட்பொருளை யொருமொழியி னளித்தெனையும்
பாங்காக ஆண்டவர்க்குப் பல்லாண்டு கூறுதுமே
பத்திவலைப்பட்டவர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

மண்பாலப் பாதலர்பால் வானோர்பான் மற்றுமுள
வெண்பாலு மெய்தரிய பேரின்பம் யானெய்த
நண்பாக வந்தருளி நல்லடியா ருடனெனையும்
பண்பாக ஆண்டவர்க்குப் பல்லாண்டு கூறுதுமே
பாராமற் பார்த்தவர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

மயலதனுன் மறந்துபிறந் துழன்றிடும் மதியிலியேன்
பயமதெலாந் தீரவரு வானுருவா யெழுந்தருளி
நயமதுறவுட்புகுந்து ஞானகனப் பேரொளியாம்
பயனதுவாய் நின்றவர்க்குப் பல்லாண்டு கூறுதுமே
பத்தருயிருண்டவர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

விருத்தம்

காடுங்கரையுமனக்குரங்கு கால்விட்டோட வதன்பிறகே
ஓடுந்தொழிலாற் பயனுளதோ ஒன்றாய் பலவாயுயிர்க்குயிராய்
நாடுங்கருணை பரஞ்சோதி யருளைப் பெறுதற்கன்பு நிலை
தேடும்பருவ மிதுகண்டீர் சேரவாரீர் செகத்தீரே.

சைவசமய மேசமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டு
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டா முத்திதரும்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாரீர் செகத்தீரே.

காகமுறவு கலந்துண்ணக் கண்டீரகண்டா காரசிவ [மாய்
போகமெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரண
ஏகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிடநாமினியெடுத்தத்
தேகம்விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரீர் செகத்தீரே.

பொன்னில மாதராசை பொருந்தினர் பொருந்தாருள்ளம்
தன்னிலந் தரத்திற்சிவ சாட்சி மாத்திரமாய் நிற்கும்
எந்நிலங்களினுமிக்க எழுநிலமவற்றின் மேலாம்
நன்னிலமருவுமேக நாயகன் பதங்கள்போற்றி.

ஐயனே யெனதுள்ளே நின் றனந்தஜென்மங்க ளாண்ட
மெய்யனே யுபதேசிக்க வெளிவந்த குருவேபோற்றி
உய்யவே முத்திநல்கு முதவிக்கோருதவி நாயேன்
செய்யுமாறென்றுங் காணேன் திருவடிபோற்றி போற்றி.

இ-ம். கமாசு-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

கருணாநிதியாங் குருவோடருளுக்குக்
கைமாறென்றும் காணேனே கரு

மறையின் மொழியும் பிரமம்உருவாய்
வரவுமருளாலே தரவும் பிரமானந்தம் கரு

தன்னைநினைந்திடச் சொன்னமொழிதன்னை
நன்றாயறிந்தெங்கு மொன்றாநிறைந்தபின்னே கரு

உடலைமறந்து அறிவாய் நிறைந்து
பரமாயறிந்த தெல்லாந் திறமாய்த் தன்னிலையிலே கரு

ஆசானருள் செய்த பேசாநிலைதன்னில்
ஈசன்றா னென்ற சொல்லும் வாசாரம் பணமாகி கரு

சிந்தையொழித்தெங்கும் சிவமாய் நிறைந்திட
வந்ததிவ்வானந்தம் பிரமானந்தனருளால் கரு

விருத்தம்

கருணபரஸ்கரன்போல் கருணையாலந்தக்
கரணமோகத்தைக் கடத்தியுள்விளக்கும்
பிரணவப்பொருளாம் பிரமவானந்தன்
சரணபங்கயத்தைத் தலைக்கணிந்தெளிர்வாம்

வந்ததோர் ஸ்தூலந்தன்னில் வான்முதல் பூதத்தம்சும்
எந்தெந்தருபமாக விருக்குமோ வதனை நன்றாய்
எந்தனுக்குரையுமென்ற வினியதோர் சீடனுக்குச்
சிந்தையின் கலக்கந்தீரத் தேசிகருரைக்கின்றாரே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அன்னமயகோச மூண்டான விசித்திரம்
ஆருடன் சொல்வேனையா

அநுபல்லவி.

உன்னவ்விதந்தைநித்தம் உண்டன்ன ரசம்பாய்ந்து
உண்டாயிருக்கும் சுக்ல சுரோணிதங்களுஞ்சேர்ந்து (அ)

சரணம்.

மண்ணில் மண் அஸ்தியாகவே யிருக்குது
வாரிவந்ததில் மாம்சமா யுறைந்தது
வன்னியந்ததில் தோலாக மூடிற்று
வாயு நரம்பாயும் வந்தது கூடிற்று
இன்னமு மாகாயம் ரோமமாய் மூடிற்று
இப்படிப்பிருதிவியின் பஞ்சக முடிந்தது (அ)

வாரியில் வாரி மூத்ரமாய்த் தீர்ந்தது
மாரிநிலமதி லுமிழ்நீராய்ச் சேர்ந்தது
விரியமாமக்னி வேர்வையாய்த் தோய்ந்தது
வீசியவாயுவும் ரத்தமாய்ப் பாய்ந்தது
ஆரியனே விண்ணும் சுக்லமாய் வடிந்தது
அப்புவின் பஞ்சகம் இப்படி முடிந்தது (அ)

வன்னியில் வன்னி தூக்கமாய் மூடிந்து
மைந்தனே மண்ணும் பசியாக நாடுது
கன்னிருந் தாகமாய்த் தண்ணீரைத் தேடுது
காட்டிய வாயுவும் சோம்பலாய்க் கூடுது
எந்நேரமும் விண்ணும்ஸ்ரீசங்கந் தொடங்குது
இப்படியாய் வன்னிப் பஞ்சக முடிந்தது (அ)

வாயுவில்வா தம் ஓட்டமே யெடுக்குது
மண்ணுமதிற்சும்மா தானே கிடக்குது
ஓயாத வாரியுந் தன்னடை கொடுக்குது
உயர்ந்தஅக்னிதா விருத்தல் செய்யுது
பகருமாகாசம் தாண்டுதல் செய்யுது
பாயும்வாயுவின் பஞ்சக முடிந்தது (அ)

வானத்தில் வானம் மோகமாய் தீர்ந்தது
வாஞ்சையாம் வாயுவும் வெட்கமாய் முடிந்தது
பானமாமக்கினி பயமாக வாச்சுது
பாயுஞ்சலமது துவேசமாய் முடிந்தது
தானமாமன்னதில் ராகமாய் நின்றது
ஸ்ரீகுருபிரமானந்தர் தாவிது உரைத்தது (அ)

விருத்தம்.

திக்குவேறில்லையென்று சேவடிபணிந்துநின்ற
பக்குவச்சீடனுக்குப் பண்புடன் தத்வமெல்லாம்
சிக்கெனவுரைத்துஸ்தூல தேகத்தைப் பணிந்துசூக்ஷம
லிக்குமவ்விதத்தையானோன் நேர்த்தியாய் நிகழ்த்துவாரே.

இராகம்—சௌராஷ்டிரம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

அன்னமயந்தன்னி லைமருஞ் சூக்குமந்தன்னை
அறைகிறேன் கேள்மகனே.

அநுபல்லவி

வின்னமில்லாதொரு பிரமவஸ்துவின்மேலே
விரிகடல்திரைநுரை சேர்ந்திருந்தாற்போலே (அ)

சரணம்

அங்கமுழுவதிலு மகங்காரன் வியானனுடன்
அணைந்துகொண்டுமிகத் துள்ளுமே
மங்காஇருதயத்திற் பிராணனுடன்புத்தி
மகிமைகொண்டங்கே தாவுமே
துங்கனேமனமு முதானனுடனேயுந்தன்
தொண்டையிலின்று கடையுமே
சங்கையென்னுமல் சூக்ஷத்திலபானன்
ஜடராக்கினிபோல் வெதுக்குழே
மங்களமாமுச்சியி லுள்ளவும்
மாவுந்திகுகையில் சித்தம் சமானனுமே (அ)

கேள்கரோத்தேந்திரியஞ் சத்தத்துடன் சேர்ந்து
காதுக்குள்ளொலி கேட்குமே

சோலை யெங்கும்பரி சத்தத்துடன் சேர்ந்து
மேவித்தொக்கேந்திரிய னாருமே
நிலவிழியில் சக்ஷுரூபத்துடனேசேர்ந்து
நின்றுதாண்டவ மாடுமே
பாலன்னரசத்துடன் ஜிக்வேந்திரியன்மிகப்
பரிந்துபரிந்துகூத் தாடுமே.
ஞாலமாகிந்த ஞானேந்திரியமைந்தும்
வாலயமாமுடலில் வாழ்ந்துகொண் டிருக்குமே (அ)

விக்லதயாமகனே வாக்கேந்திரியனுந்தன்
வாயில்நின்றாகூத் தாடுமே
நந்தவனும்பாணேந்திரியன் கரந்திறந்து
தானங்கொள்ளிய லாச்சுதே
எந்நாளினுங்காலில் பாதேந்திரியனின்று
எங்குநடந்திட லாச்சுதே
உந்தியில்சுகத்திற்கு உபஸ்தேந்திரியன்சேர்ந்து
உத்தமபதனியைக் கெடுக்குமே
சொந்தமாம் பிரம்மானந்தர் தாளைப்பெற்றால்
சோர்ந்துவெந்து அங்கே மாளுமே (அ)

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

கஞ்சமலர்ப்பதம் நெஞ்சிலிருத்திப்பவ
சஞ்சலமறவருள் புரிவாயே

அநுபல்லவி

தஞ்சம் வேறில்லையெனை யஞ்சாதிருக்கச்செய்
செஞ்சொல்மறைமொழியால்நெஞ்செனும்பிறப்பொழிய(க)

சரணம்.

இன்னமுமேவேறோரன்னை வயிற்றில்வந்து பிறவாமல்நாளும்
உன்னைமறந்திறந்து திரிந்தலையாமல்
என்னபிணிவந்தாலு மேங்கித் தயங்கிடாமல்
நின்னாதகருணையினால் நிர்மலவடிவுபெற (க)

வேற்றொரு மங்கையரைப் பார்த்தெனது விழிகள்சுழலாமல்பல
காற்றாத்துருத்தியை மாற்றக்கூற்றுவன் காத்திருப்பதைமறவாமல்

சேற்றுக்குள்திரி பிள்ளைப்பூச்சிபோலனுகாமல்
ஜெகந்தனிலிருந்து சின்மயனுகிட (க)

[ரும்
பிறப்புத்துன்பமெனவெறுப்புவருவதில் மடமைகொள்ளாமல் பெ
சிறப்புற்றோங்கிய செம்பொருள்சேரசினங்குடிகொண்டுதுள்ளாமல்
மறப்புயானவையும் மாசுஷித்துக்கொள்ளாமல்,
மறலியொழித்திடு மன்னர் பிரமானந்தர் (க)

சாமிவரவைக்காணேனே-என்றமெட்டு.

இராகம்-கரகரப்பிரியா-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்ணாலேபார்க்க வொண்ணுதா கிருபையென்
அண்ணலே யாண்டவனே ஆனந்தபோதா

அநுபல்லவி

நித்தியானந்தபோதா சதானந்தபோதா
பிரமானந்தபோதா (க)

சரணம்

இதுவேகதியென்று இங்குவந்திருந்தும்
மதியாதிருப்பதென்ன விதியோவென்பதியே (க)
உள்ளமறிந்திருந்து முண்மைதெரிந்திருந்தும்
கள்ளமனதைப்போக்கக் கருணையையாயோ (க)
நாலுவேதந்திரண்டு உருவாகிவந்தவரே
நான்கடைத்தேறவே நாடுகிறேனுதா (க)
பார்த்தவிடமெல்லாம் பரப்பிரமமாய் நிறைந்தும்
பாரிலோர் வடிவான பரப்பிரமானந்தா (க)

இ-ம்-நாதநாமகிரியை-தாளம்—ஆதி.

பல்லவி.

தன்னையறியு நில்லா பிரகிருதமாா
தன்னையறியு நில்லா

அநுபல்லவி.

தன்னையறியாதகண்டன்னமயம் நானென்றெண்ணி
நிர்ணயமறிந்திட்டல்லோ ஜென்மமெடுக்கிறுமிவர் (த)

சரணம்.

ஸாஸ்திரம்படிக்கும்நல்லோ ஆதஞ்ஞானுள்ள
ஸபுத்திரையும் பற்றுநல்லோ
பாத்ர சாலியாயில்லா பின் மாத்ரஞானமோரவில்லா
நேத்ரஹீனம் மறவல்லோ க்ஷேத்ரமுந்தொழுனுமிவர் (த)
சாரமறி வானுய்க் கொண்டுவளரே ஒரு
பாரமென்னறிக்கை கொண்டு
தூரமாக்கும் நல்லோமுக்தி கோரமாயாதிங் தேசத்தி
தீரனுய்நல்லோபுத்தி அசாரமாயிட்டலோபத்தி (த)
கோசபந்த மறவுமில்லா குருபிர
மானந்தர் காருண்யமில்லா
ஆசையும் பொயில்லாசொப்பிரகாச ஒளியில்லாவிஷ
யாசையா குல்டொருபேயா வேஷமாடுகைகொண்டல்லோ

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

நின்னு கூடரா ஒரிபாமருடா
நின்னு கூடரா

அநுபல்லவி.

நின்னுகூடரா ஒரி நிர்மல மௌனுரா
அன்யமு லேதுரா அகண்டஸ்வ ரூபமுரா (நி)

சரணம்.

யோகமு லேமிரா உசித மெந்துகிரா
யாகமு இகபர யாதன லேமிபோரா (நி)
தேவுடெந்துகுரா தினமுலெந்துகுரா
ஸாவு புட்டுகலேரா சாயுஜ்யம்பியந்தேரா (நி)
ஜெபமுலெந்நுகுரா தீர்த்தமெந்துகுரா
தபமு லேமிபோரா தானே பிரம்மமுரா (நி)

சதுவு லெந்துகுரா ஸாஸ்திரமெந்துகுரா
பதவிநீ அந்தேரா பராபர முனுலேரா (நி)
சேஷமு லேதுரா சின்மய மௌனுரா
பேதவி ரஹிதமுரா பிரம்மாநந்த குருநீவேரா (நி)

இ-ம்-சுருட்டி-தாளம்—சாப்பு.

பல்லவி.

தன்னுதானெரி கேடி தபமுவ லேனூ
தரணிலோ ஏமுன்னதி

அநுபல்லவி.

கன்னு தெலிஸி கர்ம ஸாக்ஷிவை தானு
காமாதிவை ருல கண்டிஞ்சி மதிலோனு (த)

சரணம்.

கோவுமந்தனு கோடி கோதான மிச்சின
குற்ற முனுசம்பி ஆஹுதி இச்சின
தேவுடலகெல்லனு திருப்திபொந்திஞ்சின
தினகரனுசுசி தினமு சேவிஞ்சின (த)

வுபவாஸவிரதமுலு உடுவகஜேசின
ஊரியாவுலபியாட பூடிதே பூசின
ஜெபஹோமதியான லன்னியுசேசின
தீர்த்த யாத்ரனுதிரிகி ஸ்நானமுசேசின (த)

சாதன சதுஷ்டய மூலசாரம் தோசின
சதுவுல மோபு சாலமோசின
பாஷ்யாதி லன்னியு பிரபலிஞ்சி சூசின
பிரமா நந்தகுருநீ சந்நிதி காசின (த)

துவிய பாஷா கீதம்.

இராகம்-துஜாவந்தி-தாளம்—ஆதி.

பல்லவி.

கன்னவாரிகி கைவல்யம்புனு
கானிபதம்புனு லேதுகாதா

அநுபல்லவி.

இன்னதென்றிவர் மகிமைசொல்லறியேனன்
ஏகமுகவழி கேடிஸ மாதிலோ
யோகமறிந்தவ ராகையினாலிப்போ (க)

சரணம்.

ஸாது ஜனங்கள்கொண் டாடுவார் நித்யம்
சௌனகன விஷயாநுல ஸத்யம்
ஏதுக்கவர்க்கிந்த ஜனங்களலோ ஸம்யம்
ஙக்ஷுயதக்குவ லேனிபதம்புனு
மிக்கவறிந்தவ ராகையினாலிப்போ (க)

மாசுமறுவில்லா வாக்குகள் பேசி
மறுபடி ஜனனமு லியா கனலேசி
தேசிகராமிவர் தேவர்க்கும் வாசி
தேகமு லேனி சமாதி லியந்துனு
மோகமிறந்தவ ராகையினு லிப்போ (க)

ஆரூடஞானிக ளானபேர்கோடி
ஆசிஞ்சிவீரி பதம்புனு கூடி
பாருக்குளானந்தத் தாண்டவ மாடி
பாஸமு லன்னியு கோஷின குருபிரம்
மானந்த தேசிக சின்மயரூபனே (க)

கிரந்தம்.

இ-ம்-நவரோஸ்-தானம்-ஆதி.

பல்லவி.

பிபரே பிரம்ம ரஸம் நிரஸநே
பிபரே பூர்ண ரஸம்

அநுபல்லவி.

துரித கிருத பாதகஸம் ஸர்க்கம்
பூரித காநா விதபல வர்க்கம் (பி)

சரணம்.

ஜனன மரணபய ஸோக விதூரம்
ஸகல ஸாஸ்திரநிக மாகம ஸாரம் (பி)

பரிபாலி பிருத ஸரஸிஜகர் பண்டம்
ப்ரமபஸிஞ்சி கிருதபா ஸாண்டம் (பி)
ஸுந்தபிரம்மானந்த ஆஸ்ரமீ கீதம்
ஸுகஸெஸா நகரிஷி கௌஸிகபீதம் (வி)

இராகம்—கீர்வாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

நஹி நஹி ரேஸங்க காசின்ன ஹரே
நஹி நஹி ரேஸங்க

அநுபல்லவி.

அஜம் க்ஷரமத் வைத மநந்தம்
ஜானந்தி பிரம்ம பரம் ஸாந்தம் (ந)

சரணம்.

ஏநிய ஜந்தி பஹுதர பரிதாபம்
ஏபஜந்தி ஸத்சித் ஸுக ரூபம் (ந)
பிரம்மானந்த குரு வர்ணித கீதம்
ஏபடந்திகி மார்த்தஸ மேதம் (ந)

லாலி.

இராகம்-ரஞ்சனி-ஏகதாளம்.

பல்லவி.

லாலி லாலி ஏகரூபலாலி
எங்கும்பரி பூர்ணமான சர்வசசலாலி

அநுபல்லவி.

காலதேச வஸ்துபரி சேதமில்லாமல் ஜெகத்
மூலமாகியே யனைத்தும் லீலையாய்க் கண்டு (லா)

சரணம்.

பஞ்சகோசத்தையும் விட்டு பரமாகநின்றிந்த
பாசமோகத்தை யென்றுந் நாசியாய் வென்று (லா)
காயமூன்றழித்துதான் காரண மாகியெங்கும்
பாயுமனதைப் பிரம சாயையாய்க் கண்டு (லா)
தோணும்பொருண்முழுதும் வான்மல ராகிப்பர
மானந்த சொரூபமாய்த் தானே யிருந்து (லா)

பேசும் பொருளுமற்றுப் பிரமமாக நின்றிந்த
மாசில்லாப் பொருளான ஈசனு நின்று (லா)
அகண்டானந்த வடிவா யனுதினம் நின்றிந்த
அகிலமெல்லாந் தானாக அகத்திலே கண்டு (லா)
ஏகாந்தஸ்தலந் தன்னி லெப்போதும் நின்றிந்த
மோகாந்தகாரத்தை யெல்லாம் ஞானத்தால் வென்று (லா)
சிந்தனையால் வளரும் பந்தமுழுதுமெங்கள்
பிரமானந்தரருள் செய்ய வெந்துநீ றுச்சே (லா)

ஷ

இராகம்-ரீதிகௌளை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

லாலிகுரு நாதலாலி ராகாதியற்ற பிரமானந்தலாலி
காலாதியற்றநின்ற மத்குரு பிரமானந்தலாலி
பரிபூர்ண ரூபமாகி பிரதகற்ற பரமசுகமானலாலி
திரிகுண மற்றொன்றும் தெரியான சின்மயஸ்வரூபலாலி
ஹரிஹரப்பிரமமுதல் ஆனோர்க்கும் ஆதாரபூதலாலி
நிறைவான வடிவமாக நிகரற்ற நிர்க்குணானந்தலாலி
அசையாதபொருளாகவே அனுதினமுமானந்தமானலாலி
திசைதிக்குபூர்ணமாக திகழ்ந்தபர சித்கனானந்தலாலி
ஆதிமத்யாந்தமற்ற அகிலத்துக் காதாரமான லாலி
வேதாந்த வேத்யமாக விளங்கும் விஸ்தாரவிமலலாலி
ஏகரசமாகியெங்கும் இடரற்ற ஈசவடிவான லாலி
சோகமோகங்களற்ற சுகானந்த ஜோதிமயமான லாலி
சிந்தனாதீதமாகி ஜெகத்முழுதும் சித்ரூபமானலாலி
திருமாலிருஞ்சோலை வாழுமத்குரு பிரமானந்தலாலி

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மூடருக்குபதேசம் செய்தாலவர்க்குஜீவன்
முத்திபுண்டாமோசாமி

அநுபல்லவி

வாடாமற்பாக்கியம் வாரிக்கொடுத்தென்னை
வானுக்குள் வைக்கும்பிர மானந்தநாதனே (மூ)

சரணம்.

அழுக்குழந்தைகளமுதங் குடிக்குமென்று
அழைமுழுநாஞ்சொல்லு மையா
கழுதைக்குப்ரேசங் காதிலுரைப்பாருண்டோ
அயயக்குரவேயன்றி ஐயாநீர்சொல்லும் (மு)

பாவிகள்மனதிலே பரமரகசியம்
பாவனையாகுமோ சாமி
கோவில்குளங்களைக் கொண்டாடுங்குலாமர்க்கு
ஆவிக்குவானந்தங் கொடுக்குமோசாமிநந்த (மு)

அக்கினியோநெய்யை யாகுதிசெய்வதற்கு
ஆறின்சாம்பலல்லோ சாமி
பக்குவம்வந்தகாயைப் பழுப்பிக்கலாம்பிஞ்சு
பழுத்தாலும் ருசிக்குமோ சுவாமிநீர்சொல்லும் (மு)

ஏழைத்தனத்தாலிந்த ஏகாந்தநிருமலத்தை
எளிதாக்க லாமோ சாமி
வாழைமரத்திற்றீயை வைத்திடலாகாதினி
யாவனுமறிந்தநீர் ஆத்மவித்தையைச்சுத்த (மு)

மட்டிக்குலாமர்க்கொரு தெய்வங் குருவுமுண்டோ
மானுவமானமுண்டோ சாமி நாய்க்
குட்டிக்கொருசந்தி கூறுவரோவெங்கள்
குருபிரமானந்த நாதரே பிரதிவிந்த (மு)

இராகம்-மத்யமாவதி-நா-ம்-ஆதி.

கண்ணி.

ஸ்ரீராமா குருராம சின்மய காரா
ஆனந்த வடிவான ஆத்ம ரொரூபா

அகண்டானந்த வடிவாயிந்த
அகிலமெல்லாம் நிறைந்து
சுகமாகவே விளங்கும் பிரம்
மானந்த ரென்றுணர்ந்து

பவமாகிய கடலைக்குரு கருணை
நாவால் கடந்து
சிவமாகிய வாழ்வந்தன்னைச்
சிந்தைக்குள் நினைந்து

அகம்பிரம்ம மென்றறிந்து எங்கும்
ஆனந்தமாய் நிறைந்து
மகாமோகத்தை யிழந்து
மறுபொரு ளன்றியிருந்து

மாயா மயமான இந்தக்காயந்
தன்னை மறந்து
நாமரூபமிறந்து எங்கும்
ஏகமாக வேயிருந்து

யகாரமாக எங்கும் நிறைந்து
மனங்குளிர்ந்து
சோகமற்ற நிலையில் சுகசொரூப
வடிவானேன் (ஸ்ரீ)

ஆனந்தக் கும்மி.

கண்ணிகள்.

கும்மியடி பெண்ணே கும்மியடி யெங்கள்
குருவின்பேர் சொல்லிக் கும்மியடி
நம்மிலொரு பேதமற்று விம்முகின்ற துயரம்விட்டு
சும்மாநின்று கையைக் கொட்டுங்கடி.

சிந்தனையற்றச் சிதானந்தமாம் ப்ரமா
நந்தர்பதத்தைத் தொழுதுகொண்டு
பந்தமுடன் தொந்தமற்ற சந்ததமு நான்மறந்த
அந்தநிலை தன்னைக் கூறுகிறேன்.

ஆதியந்தமற்ற ஆத்ம சொரூபத்தை
யானந்தக் கும்மியாகப் பாட
ஜோதியுமாய் நீதியுடன் வேதமுமாய்த் தான்விளங்கும்
போதகுரு பாதங் காப்பாமே.

பூரணானந்த குருநாதன் பாதத்தைப்
போற்றிக்கொண்டு கும்மிப் பாட்டுரைக்க
ஆரணாந்தோ டர்த்தத்தைக் கூறிடவே வேரறவே
வாரண மாமுகன் காப்பாமே.

அண்டசராசர மத்தனையுந் தானாய்
நின்றபராபர வஸ்துவை நான்
கண்டபடி கூறுகைக்குப் பண்டுளோர் சொன்னபடி
கொண்டு குருவைநான் போற்றிசெய்தேன்.

நித்தியமாக விளங்குகின்ற பர
தத்துவந் தன்னைக்கண் டெப்பொழுதும்
சத்தியமா மித்தனையும் மித்தையென் றறிந்தபின்னர்
சுத்தநிலை தன்னைக் கூறுகின்றேன்

கேசமலமூத்தி ரந்தாலனைத் துற்ற
நாசச் சரீரத்தை நான்மறந்து
நேசத்துட னெப்பொழுதுந் தேசிகனின் பாதத்தை
வாசிவாக்குக் காயத்தாற் பணிந்தேன்.

ராகத்துவேசத்தாற் கட்டுப்பட்டு வெகு
தேக மெடுத்துத் திரியாமல்
யோகத்தா லாத்மாவை ஏகமென் றெப்பொழுதும்
போகம்விட்டால் முத்தியா மதுவே.

சாதனைநாலுந் தனித்துச் சதாபோதும்
சற்குரு சேவையைச் செய்துவந்தால்
போதநிலை தன்னிலென்று மாதரவாய் நின்றிடலாம்
வேதனை யற்ற வெளிபோலே.

தூலவுடலத்தைச் சுட்டுநீறாய்ச் செய்தால்
சுத்த வெளியான தன்னிடத்தில்
காலத்தொடு தேசங்களு மூலத்துட னாசமதாய்
மேலாம் பதந்தன்னி னின்றிடலாம்.

லிங்கசரீரத்தைப் ப்ங்கம்பண்ணி விட்டால்
ரெண்டு பொருளற்றே யெப்பொழுதும்
எங்கும்பர மாய்நிறைந்த மங்களாகா ரத்தைவெகு
இங்கிதமாய்க் கண்டு நின்றிடலாம்.

மோகத்துடன் வந்த மூடாந்தகாரத்தை
மூலத்துடன் சுட்டு நீறுசெய்தால்
ஏகசானந்தசுக மாகநிறைந் தெப்பொழுதும்
சோகப்பிர மமாய்ச் சுகித்திடலாம்.

அற்புதமாகவே நின்றுகொண்டு வகையை
யானந்தமாயங்கே கொட்டிக் கொண்டு
தற்பதமா யெப்பொழுதுங் கற்பனையெல் லாம்விட்டு.
சிற்பர மாகவே நின்றிடலாம்.

அத்வைதானந்த சுகவடி வாகவே
ஆதிவியாதியாம் ரெண்டும் விட்டால்
உத்தமமாந் தன்னிலையில் மெத்தவுநின் றெப்பொழுதும்
சித்து மயமாய்ச் சுகித்திடலாம்.

நேதிநேதியாக நிர்ணயித் தங்கே
நிர்மலமாகவே நின்று கொண்டால்
மோதிவருந் தீவினைகள் சேதனமா யெப்பொழுதும்
சோதி மயமாய்ச் சுகித்திடலாம்.

நிஜவடிவமான ஆனந்தத்திலிந்த
நிகிலபேத மெல்லாந்தான் மறந்தால்
அசலானந்த வடிவாய் வசனாதி தம்போதித்
தசையாமலே யங்கே நின்றிடலாம்.

சித்கனமான சுகந்தனி லேமன
சித்தம் லயித்திட்ட மாத்திரத்தில்
நிர்க்குணமா யெப்பொழுதுந் தர்க்கநிலை தன்னைவிட்டு
நிற்கலாம் நித்ய சுகவடிவாய்.

அஞ்சுபொறிபுல னற்ற விடத்திலே
ஆனந்தமாகவே நின்று விட்டால்
வஞ்சனைசெய் யிம்மனதின் சஞ்சலமெல் லாம்விட்டு
மிஞ்சின தாகவே நின்றிடலாம்.

ஆகமநூலின் முடிவிலுள்ளார் தந்த
அந்தர்முகமா யமிர்ந்து விட்டால்
வேகமுடன் பாயுமன போகமுழுதும்விடுத்து
ஏகரசமா யிருந்திடலாம்.

உற்றுப் பார்த்தேயோர் சுகப்பொருளாகவே
 ஒன்றி நிலைத்தவிடந் தனிலே
பத்தியுட னெப்பொழுதுஞ் சத்தியமாய் நின்றுவிட்டால்
 முத்தி ரசத்திற் சுகித்திடலாம்.

ஏர்சிவான் மாபேத மற்றுச்சிவமாக
 என்றும் நிலைத்த விடந்தனிலே
சூசனையா யெப்பொழுதுந் தேசிகனார் செய்நிறையு
 பேசப் பேச்சற்றுச் சுகித்திடலாம்.

ஆங்காரமூல மடியோடே வெந்தங்கே
 அற்புதமாகவே நின்று விட்டால்
நீங்காமற் றன்னிலையிற் பாங்காக வெப்பொழுதும்
 தூங்காமற் றூங்கிச் சுகித்திடலாம்.

நிச்சலமாகவே நின்றுகொண்டு அங்கே
 நிர்குணமாய்க் கையைக் கொட்டிக்கொண்டு
அச்சமற்று எப்பொழுதும் நிச்சல மாகநின்றால்
 சொற்சொரூப மாய்ச் சுகித்திடலாம்.

தியான சமாதிக ளற்றுச்சிவமாக
 சந்ததமுமங்கே நின்று விட்டால்
மோனநிலை தன்னிலென்றும் ஞானவடி வாய்நிறைந்து
 தானே தானாகச் சுகித்திடலாம்.

பந்த மோக்ஷமற்று பரமானந்தமாகப்
 பாவனையற்று நின்ற விடத்தில்
வந்துநிறைந் திட்டவொரு சொந்தப்பிர மானந்தர்
 மாமலர்ப் பாதந் துணையாமே.

தாலாட்டு.

இ-ம்-நீலாம்பரி

கண்ணிகள்.

ஆதிபராபரத்தை யன்புடனே தாலாட்ட
சோதிமயமாய்நிறைந்த பிரமானந்தா வுன்றாள்பணிந்தேன்

காதலுடனந்தக் கணபதியை நான்தொழுது
சேதனமாய் நிறைந்த ஸ்வாமியில் கூறுகின்றேன்

பாதியிலே வேறாகப் பிழைகளேதாம் வந்தாலும்
பேதமென்று தள்ளாமல் பேணவே வேண்டுகிறேன்

வேதமெனக் கற்றதொரு விஸ்தார மண்டபத்தில்
சாதனம்நா லான சதுரான மேடைகளாம்

தாக்கும் பிரணவமாம் சட்டத்தில் தத்வமசி
வாக்கியத்தைச் சுற்றிலெங்கும் மாறுமலாணியை வைத்து

மனனஞ்செய்யுத்திகளை வாய்த்தகட்டை யாக்கியதில்
அநேக சுருதிமொழி யாற்றுகடைசல் செய்து

நன்மயமி நித்யாச னந்தன் மணிப்பலகை
சின்மய மாய்நிறைந்த சித்ரூப ஊஞ்சலுக்கு

மெத்த அநுபந்தநால் மேவுமதன் கால்களுமாம்
மைத்ரியாதி நாலுமங்கே வாகான மேல்வளையம்

வேதாவின்சாரம் மெலான சங்கிலியாம்
நாதமிழந்தசித்தே நாகராக் கொண்டியதாம்

விக்ஞானம் ப்ரமமென்ற பேர்தானே மெத்தையதாம்
பிரமம் அஹமென்றபதம் பெற்ற தலையணையாம்

சச்சிதா னந்தமயர் தானிறைந்த நின்மலரே
நிச்சய மென்றுசொல்லும் நிட்டையிலே தானிருந்தார்

சின்மயமாய் நிறைந்த சித்ரூப ஊஞ்சலிலே
தன்மய மாய்ப்படுத்த சற்குருவே கண்வளரீர்

அயமாத்ம ப்ரமமென்ற ஆடாத நித்திரையைச்
சயமாய்ச்செய் கின்ற சொரூபரே கண்வளரீர்

ஆரம்சமாதியென்ற ஆனந்த நித்திரையை
மாறுதுசெய்கின்ற மத்குருவே கண்வளரீர்

தானாய் நிறைந்திருக்கு சத்ரூப மானவஸ்து
மோனமே யெப்பொழுதும் வாய்மூடிக் கண்வளரீர்

இந்தச் சகமறந்து எப்பொழுதும் தானாகிச்
சிந்தை யொழிந்துநின்ற சின்மயனே கண்வளரீர்

பேசுத லற்றுநின்ற பேரானந்தஞ் சுகமாய்
வாசிமுத லொன்றுமற்ற வஸ்துவே கண்வளரீர்

அக்ஞானக் கண்ணை யகற்றியறி வாய்நிறைந்து
விக்ஞான நிஷ்டையிலே வேந்தனே கண்வளரீர்

அறியா மயக்கொழிந்து அத்வைத நித்திரையை
நெறியாகச் செய்கின்ற நித்தியரே கண்வளரீர்

பலமோக நீக்கிப் பரமாகி யெப்பொழுதும்
அலையாம லேநிலைத்த ஆரியரே கண்வளரீர்

சருவமுந் தானாய்ச் சலியாம லேநிலைத்துக்
கரியாய் விளங்குகின்ற காரணரே கண்வளரீர்

அந்தரத்தைப் போலாக ஆதார மற்றவஸ்து
பந்தமறுத்தபிர மானந்தா கண்வளரீர்

வேறு

ஆராரோ நீயாரோ நானாரோ ஊராரோ
பேராரோ என்கண்ணே பெற்றவன்தா னாராரோ

ஓயாச் சுமையெடுத்தே ஊனுராய்ச் சுற்றிவரும்
மாயாப்பேய் தன்னைவிட்டு மாற்றுவா ராராரோ

தானந்த மின்றித் ததும்பிக் கரைபுரளும்
ஆனந்த வெள்ளத் தழுந்துவா ராராரோ

நிர்ச்சகத்தாய் நிர்மலமாய் நிற்கும் நினைவதையும்
வர்ச்சித்திருக்கு மகராஜ னாராரோ

அலைநீர் மதிபோ லவித்தைத் தனிற்றோன்றி
தொலையா வடிவெடுத்த சுந்தரரோ உங்களையா

மூடி விழிக்குமுன்னே மோகசந்தி யாலனந்தம்
கூடுவிட்டுக் கூடடைந்த கூத்தரோ உங்களையா

இந்திரியத் தோழ ரெதையிழுத்து வந்தாலும்
தந்தலையில் வாங்கிகின்ற சத்தரோ உங்களையா

அதிகாரச் சட்டமிட்டு அம்புயந்தி லன்னமென
இதையக் கொலுவி லிருப்பவரோ உங்களையா

ஆடிக்குதித்து அறவே தவிர்த்த பின்பு
தேடித் தனதுபதம் சேருவார் புத்திரரோ

ஆவரணக் காலழித்து அஞ்ஞான யானைதனைத்
தீவிரமாய்க் குத்தும் ஜெகவீரர் புத்திரரோ

மோகமலை வெட்டி முமூட்சு விதைதனைத்து
ஏகமென்றும் வேளாண்மை யேற்றுவார் புத்திரரோ

சேற்றிலிட்ட பொன்போற் செருக்கேறு மொட்டாமல்
வேற்றுருப்போ னின்று விளங்குவார் புத்திரரோ

சிந்தனை யென்பதற்றுச் சின்மயமே தானாகி
முந்திடுமுத்திக்கு முனைந்தவரும் நிர்தாமோ

வேதமுடி யிப்பிலின்றி வேதமறை யென்றுறைந்து
போதமணி யாய்ப்பிறந்த புண்ணியரும் நீர்தாமோ

போகக் கடலில் மிடிபட் டுழல்வார்க்கு
ஆதாரமாய் வந்துதித்த அம்பிள்ளை நீர்தாமோ

கோடிவெட்ட வெண்மதியும் கோதிலமுதக்கடலும்
நாடிப் பணிகின்ற நல்லழகர் நீர்தாமோ

நீரறிவார் செயல்பெற்றார் தானறிவார்
ஆரறிவா ரென்று அழுவானேன் பாற்குடமே

வாசனையை வென்று மனந்துறந்து விடடைய
ஆசைகொண்டார் காண்பார் அழுவானேன் பாற்குடமே

சிந்திப் பழகிச் சிதம்பரத்தி லின்றுடும்
அத்துவிதர் காண்பா ரழுவானேன் பாற்குடமே

வந்தநோய்க்கென்ன மருந்தென்று தேடறியா
அந்தகரை யென்னணி யழுவானேன் பாற்குடமே

மருப்புசியார் வாயினிடை வானமுது வந்தூட்டும்
கருக்கொடிபோல் வந்துதித்த கண்மணியே கண்வளரீர்

சுகந்தமணி மண்டபத்தில் ஜோதிகிற ஊஞ்சலிலே
அகண்ட ரசம்புசித்த (யென்) அப்பனே கண்வளரீர்

முத்துமணிப் பொக்கிஷமே மோன மதுக்குடமே
நித்தியர் தம்வீட்டில் நிலைவிளக்கே கண்வளரீர்.

இ-ம்-புன்னாகவராளி-தா-ம்-ஆதி.

கண்ணிகள்.

ஆனந்தோஹம் ஆனந்தோஹம் ஆனந்தோஹம் மத்குரு
அரஸப்போஹம் அரஸப்போஹம் அரஸப்போஹம்

சத்குருவின் பாதமலர் தியானம் பண்ணவே
சந்ததமும் அன்னைவாணி முன்னடக்கவே

ஆலடியிலே வசித்த ஆதி வஸ்துவே
அடியார்பந்தம் தீர்க்கவேண்டி அவனி தன்னிலே

வந்துதித்த ரூபந்தன்னை பிரமானந்தராய்
சிந்தையிலே நான்தெளிந்தேன் சின்மயமாக

பிரத்யேகாத்ம பிரமமென்ற பேதங்கள் ரெண்டும்
ஏகமென்று யுக்திசொன்ன எந்தன் குருவை

போற்றிசெய்று வேறுருவாய் விரிந்த பேதத்தைத்
தீர்த்தெங்கும் சித் ரூபமாகப் பார்த்தபிற்பாடு

கடலதனிற் காற்றினாலே கணங்களாகவே
கடலிற் றோன்றிக் கடலதனி லயிக்குமாபோல

ஆனந்த சாகரந்தன்னி லவித்வதயாங் காற்று
வீசிவிரிந்த ஜகத்தெல்லாந் தோன்றிமறைக்கும்

அவித்தையென்ற வாயுவற்று அறிவுமயமாய்
அம்புதிமாத் திரமதாகி ஆத்மரூபமாய்

அருமறைகள் முதலாதி பிரணவமந்திரம்
அநேகங்கலை கற்றபோதும் ஆத்மாவைக் காணார்

எட்டுவித யோகந்தன்னை யிஷ்டமுடனே
திட்டமாகப் பண்ணினாலும் எட்டவேமாட்டார்

விள்ளொணாத வித்தைகளை விரும்பிக் கற்றாலும் எங்கள்
வள்ளல்குரு நாதரரு ளில்லாமற்போனால்

வன்னியை விழுங்கினாலும் வாருதிநீரை
வற்றவே குடித்தபோதும் இத்தையறியார்

பாவனாத்ரியங்களினால் பந்தமடைந்து
பரமார்த்த சொரூபத்தைப் பார்க்கவேமாட்டார்

பரிசுத்தவேதசீலன் நானேயென்றும்
பவிசுரெம்பவும்மடைந்து பரமமூடனாய்

மோகமலை தன்னிலேறி தெய்வலோகத்தில்
போகமுண்டு என்றுஎண்ணூந் தாகத்தினாலே

இகபராதி லோகந்தன்னில் இச்சையைவைத்து
எண்ணரிய கோடிஜன்ம மெடுந்துமறியார்

ஆனவித்தை யாரறிவா ரென்று சங்கித்தால் எங்கள்
ஆரியனருளைப் பெற்ற பேர்களறிவார்

மதியில்வெகு யுத்தியற்ற மந்தனானாலும்
மடமையெல்லாம் நீங்கிநல்ல திடஞானமுண்டாம்

இந்தவகைக் கொருயுத்தி சொல்லக்கேளும்
சந்ததம் நினைந்தபுழு தும்பியானாற்போல்

ஜாக்ராதிக விருத்தியால் அதிஷ்டிதமான
அதிகாரண குருவை அன்யமென்றமல்
எப்பொழுதும் சிந்தைசெய்தால் இந்தமனதில்
எப்படியோ அந்தரூபம் அப்படியாவார்

அஸ்தியாதி பிரியரூப மானவஸ்துவை
ஐக்யமல்லென்மை நிகழ்ச்சிபோல பேதமற்றுரே
தேசகாலவஸ்து பரிச்சேத மில்லாத
பிரம்மாநந்தரூபமாகச் சிந்தனைசெய்தால்

சிந்தையில் வணக்கத்துடன் வந்தனம்செய்தால்
எந்தப்பொருள் கண்டபோதும் ஏகமாய்க்காண்பார்
இறப்புபிறப்பு என்றுமற்று ஏகமாகவே
எங்குமந்த பிரம்மமயமாகச் சுகிப்பார்.

தங்கப்பாட்டு.

இ-ம்-காப்பி-தா-ம்-ஆதி.

கண்ணிகள்.

ஆதியந்த மற்றோரடி ஆனந்தக்காரரடி
ஜோதி சொரூபரடி தங்கமே எந்தன்குரு
சயப்பிரமா னந்தரடி

நாதாந்த ரூபரடி நால்வேத சாரரடி
வேதாந்த வேத்யரடி தங்கமே எந்தன்குரு
விக்ஞான மூர்த்தியடி

எட்டாத வஸ்துவடி ஏகரசக்காரரடி
வெட்டவெளி ரூபரடி தங்கமே எந்தன்குரு
விஸ்வ மெல்லாம் நிறைந்தோரடி

சச்சிதானந்தரடி தன்மய மானோரடி
சொற்சொரூப மானோரடி தங்கமே எந்தன்குரு
சொற் பிரகாசரடி

நிச்சலா காரரடி நிற்குணானந்தரடி
பிச்சமான வஸ்துவடி தங்கமே எந்தன்குரு
முக்குணங் கடந் தோரடி

நிசசுக ரூபரடி நிர்மலமூர்த்தியடி
அசையாத வஸ்துவடி தங்கமே எந்தன்குரு
அத்வைதா னந்த ரடி

பரப்பிரம ரூபரடி பிரதக்கற்ற வஸ்துவடி
சரியாய் நிறைந்தோரடி தங்கமே எந்தன்குரு
நன்மய மூர்த்தி யடி

அக்ஷய னந்தரடி அநுபவமல்லா சரடி
லக்ஷிய மானோ ரடி தங்கமே எந்தன்குரு
ஐக லீலைக் காரரடி

கனமான வஸ்துவடி காருண்ய மூர்த்தியடி
மனதுக் கெட்டா தோரடி தங்கமே எந்தன்குரு
மாசற் றானந் தரடி

கைவல்ய ரூபரடி காரணவஸ்துவடி
தெய்வமிவர் தாமேயடி தங்கமே எந்தன்குரு
சிவமய மானோ ரடி

எங்குமனு கூதரடி இவ்வுலகாதா ரரடி
பொங்கும் பரமானந்தரடி தங்கமே எந்தன்குரு
போக்கு வரவற் றோரடி.

இ-ம்-புன்னாகவராளி-தா-ம்-ஆதி.

பல்லவி.

ஆடுறார் ஆடுறாரே பிரமானந்த தேசிகர்கூத்
தாடுறார் ஆடுறாரே.

அநுபல்லவி.

பாடிப் படித்துக்கொண்டு பலபோது வேதாந்தத்தில்
கூடிக் குலாவிக்கொண்டு கோலா கலத்துடனே (ஆ)

சரணம்.

நாமரூபங்கள் பொய் நாடகங்களுமெய்
நேமமாயறிந்து கொண்டு நில்லென்று எப்பொழுதும் (ஆ)

சாதுக்களே வாருங்கள் சத்குருசன்னிதியில்
போதுபோக்கியே நல்ல புண்ணியபல னடைய (ஆ)

போதும் பிரபஞ்ச வாழ்க்கை போதும்போதுமென்று
ஆதரவுடன் சொல்லி ஆனந்தக் களிப்படைய (ஆ)

ஆட்டமொரு பொழுது நாட்டமோர் பொழுதுசாது
கூட்டத்தி லெப்பொழுதும் நேட்டமாய் நின்றுகொண் ()

பாலஸ்வாமி யுடனே பலபேரும் சூழ்ந்திருக்க
காலமறிந்து யுத்தி கணக்கின்றி பொழிந்துகொண் ()

இ-ம்-ஆரபேரி-தா-ம்-ஆதி.

பல்லவி.

ஆரடா பாரடா இங்கே மாறடா நீ தேறடா

அநுபல்லவி.

பிரமகுரு பிரமானந்தர் தேசிகர் தானுமோஇவர் (ஆ)

சரணம்.

சண்டமாருதம் போல அண்டம் பொடிதூளாக்கி
லண்ட மாயையற வென்றவிமல போதகர் (ஆ)

தொண்டர் மனதிலின்ற கண்டபாவ மறுக்க
அகண்டவநுபவர்கரை விண்டவாக்குகள் கொண்டுவாரவர் (ஆ)

தத்துவம் நாலாறுபெண்கள் துந்திபுல்லாங்குழல் தாளம்
மத்தளம் சங்கீதத்தோடு நர்த்தனங்கள் கண்டுவாரவர் (ஆ)

சூஸ்திர கீதாபாஷ்யத்தோடு நேத்திரமுப நிஷத்துக்கள்
சாஸ்திரகோடி வேதங்களும் காத்திரமாகிக் கொண்டுவாரவர் (ஆ)

நேதிநேதி வாக்கியங்கொண்டு உபாதியை நிஷேதித்தப்பின்
ஆதியவஸ்துயா மென்றுண்மை ஓதிஓதிக் கொண்டுவாரவர் (ஆ)

தேக சோகம்போக வெகு தாகமோக முள்ளபரி
பாகம் வந்தபேருக்கு விவேக முத்திசொல்லி வாரவர் (ஆ)

சந்ததமும் பரப்பிரமானந்த லகிரி கொண்டேறி
பந்தமோக்ஷங் காணேனென்றொரு மந்தகாசங் கொண்டுவாரவர் ()

கோடிபிரம நிஷ்டாள்கூட்டம் கூடியவர் முன்னேதானும்
பாடிபிரமானந்தாவேசம் ஆடி-ஆடிக் கொண்டுவாரவர். (ஆ)

இ-ம்-புன்னாகவராளி-தா-ம்-ஆதி.

பல்லவி.

சிதாகாச வடிவம் எங்கும்
சதாஸ்வப் பிரகாசம்.

அநுபல்லவி.

எதாஸ்திதி நிலையில் சதாவசிக்குமவர்
பதங்களைப் பணிந்தால் கதிகிடைக்குங்குரு (சி)

சரணம்.

சத்குரு கருணைக டாக்ஷம் சர்வசித்
திபுமிகபர மோக்ஷம்

சிரத்தையுடையவர்க்குச் சர்வமூர்த்தானாய்
வியர்த்தமானதினி ஒன்றையுங்காணோம் (சி)

ஆத்ம போதாமிர்த சாரம் எல்லோரும்
அனுபவிப்போம் வாரும்
நாதனமாகவே ஆத்மஅனாத்மாவை
நேதிசெய்துசம் பூர்த்தியடையுமிது (சி)

காரணகுருபிரமா னந்தம் குருஞான
பூரணசிதா னந்தம்
நேரில்பணிந்தால் குருஞானனந்தம்
கருணையோடுகாப்பார் குருபிரமானந்தம். (சி)

இ-ம்-தர்பார்-தா-ம்-சாப்பு.

பல்லவி.

ஜெகத்துமுழுவதும் பொய்யானால் பின்
ஜெனன மரணமேது

அநுபல்லவி.

அகத்த அருள்வினை தகத்த சோகம் வாடி
மகத்துவ மானபின் நகைக்கும்படி யான (ஜெ)

சரணம்.

1.

குருடன்கூத்துப் பார்க்கச் செவிடன் கீதங்கேட்க
மூடவன் னடன மாட
கரமில்லா தவன்கைத் தாளம் போடவும்
கருத்துடனூமை பாட
நரிக்குக் கொம்புவந்து வர வர வளரவும்
நாகன் கெருடன் மீத இந்த
பரமரகசியத்தைப் பார்த்தஞானிகளுக்கு
அறிவுக்குள்ளறிவா யானந்தந் தானாய் (ஜெ)

மலடி தனையனுக்கும் மரித்த புருஷனுக்கும்
மடிபிடி சண்டையிலே
தலையில்லாத சூரன் முலையில்லாத பால்
குடித்தவன் வருகையிலே

புலியின் கூட்டத்திலே பசுவந்து விழுந்ததும்
பொய்யோ மெய்யோ
எலியும் பூனைகளு மெதிர்த்துச் சண்டைபோட
முயல் கொம்பு முளை பாய்ந்து கஜம் விழுந்ததைக்கண்டு (ஜெ)

கவலை மெத்தநிரு கருமத்தினுல் வந்த
கண்வலி போதாதோ
பவக் கடலே கடல் குருபரமே கப்பல்
பலித்ததும் போதாதோ
சிவராம குருதாசன் சொன்ன வழியதாய்
சோஹம் சிவோகம் அஜபம் பிரமம். (ஜெ)

இ-ம்—எதுகுலக்காம்போதி-தா-ம்-ஆதி.

பல்லவி.

வள்ளல் பிரமானந்தர் வலியருள் தந்தபின்
கள்ள மனதைச்சற்றுங் காணேனே

அநுபல்லவி.

உள்ளங்குளிர்ந்து பொங்கி யுலகமெல்லாம் பெருகி
விள்ளவதனம் பூண்டு வித்தை வடிவாக (வ)

சரணம்.

கள்ளத் தனத்தால் ஞான ரத்னத்தைக் கைக்கொள்ள
காயத்தில் குடிகொண்ட காமாதி கள்ளர்களைக்
கலிம் புற்றபஞ்சது வாய்க் காற்றிற் பறக்கடித்துக்
கற்பனையா வங்கண்ட காட்சிப் பொருளதாக (வ)

ஞானனு பவத்திற்குத் தடையுள்ள அக்ஞானம்
சந்தேக விபரீதஞ் சிரவணுதி மார்க்கத்தினுல்
போக்கடித்துத் தள்ளி பேணுகுணம் போல்கண்டு
வான்வடிவற்ற ஆத்மாநந்த சுகமாக (வ)

இன்னுதுரைகள் நீக்கி யினிமைரசத்தைத் தேக்கி
துன்னுர் சங்கங்கள்போக்கித் துரியபொருள தாக்கி
என்னுளும் வாழ்ந்திருக்க எதுர் தடையில்லாமல்
தன்னுல் தடுக்கவுற்ற தத்பத வடிவாக. (வ)

இ-ம்-ஆனந்த பைரவி-தா-ம்-ஆதி.

பல்லவி.

நாசச் சரீரத்தை நானென்றிருக்கவும்
ஞாயமோ சொல்லு மையா.

அநுபல்லவி.

பாசத்தை நீக்கிப் பாவனைப் பதிபி விட்டு
கோசப் புரங்களெல்லாங் கொளுத்தியெரித்த சாமி (நா)

சரணம்.

மண்ணுந் தண்ணீருந்தீயுங் — காற்றும் வெளியுங்கூடி
விளைந்த உடலமென்று — மனதிலே கண்டிருந்தும்
பின்னு மதைநானென்றும் — பேதைகள் புத்திக்கினி
என்ன சொன்னாலுமுள்ளே — யிறங்குமோசாமி (நா)

மச்சை யெலும்புந் தோலு — மாமிசமுமிது
மலமான வுடலென்று — மனதிலே கண்டுபின்னும்
நிச்சய மில்லையென்றும் — நீரிற்குமிழி யென்றும்
பிச்சை யெடுத்தாருள்ளம் — பின்னையும் பேதிக்குது (நா)

வீட்டிலிருந் தொருவன் — வெளியிலே போகுமுன்னே
விட வருமோ — விண்சொல் பிணமாமிந்தக்
கூட்டி லிருந்தவனுங் — கூடவருமோ பாராய்
வீட்டில் விளங்கும் — பிரமானந்த நாதனே. (நா)

இ-ம்-பூபாளம்-தா-ம்-சாப்பு.

பல்லவி.

நீயும் நானும் விளையாடுவோம் வாராய்
நிர்குண நிலையிலே

அநுபல்லவி.

செய்யும் பிரக்ஞானத்தில் — களிப்புமிகுந்திட
சின்மயப் பெண்ணே — தெளிந்த நிலாவிலே (நீ)

சரணம்.

அந்த காரமான — மாயைகள் போகுது
அத்வைத சந்திர — னுதயம தாகுது
சிந்தை யாகியசெந் — தாமரை மூடுது
சிதாநந்த குமிலெலாம் — சேர்ந்தங்கே கூவுது (நீ)

மகாவாக்கிய மென்றொரு — மலரைநீ சூடி
மாசற்ற பெண்ணே — மகிழ்ந்திங்கே வாடி

ஓங்கார மில்லாத வெளியிலே காடி.
யகபோக மாயிருப் போம்வா கூடி. (நீ)

கள்ளக முள்ளமன மலரெல்லாம் வாடுது
காமக் குரோத கரடிக ளோடுது
அகளங் கமானதோர் சொரூபத்தை நாடுது
ஆதியந்த மற்ற அறுதியாம விடிது. (நீ)

இ-ம்-எதுகுலக்காம்போதி - தாம்-சாப்பு.

பல்லவி.

பிரமமயமான பின்பு பேதமுண்டோ மனதுக்கின்னம்
கர்மமல்ல நடக்குமென்மை கண்டுகொண்டேனே

அநுபல்லவி.

ஜென்மமில்லாப் பிராரத்த கர்மங்களைத் தொலைத்துத்
தர்மத்தை யனுசரித்து மர்மத்தைக் கண்டுகொண்டு (பி)

சரணம்.

மண்ணுமதே விண்ணுமதே தண்ணீர் வன்னி வாயுமதே
கண்ணுமூக்கு செவியுமதே கிராணனுமதே
எண்ணிக் கொண்டமனமுமதே பெண்டு பிள்ளையுமதே
கண்ணூற் கண்டதுமதே காதால் கேட்டதுமதே (பி)

ஆறு விகாரமற்று அறிவையநுசரித்து
பேருரு நாமமற்றுப் பேதகமற்றுத்
இராக ரோகமற்று ஜனனமற்று மரணமற்று
வெறுன துவைதமற்று வினையுமற்று மனனமற்று (பி)

முக்குணத்தி னுருவங்கண்டாய் நிர்க்குணமாம் பொருளுங்கண்டாய்
சத்குருவின் பாதங்கண்டாய் பொற்கமலத்தில்
நிற்கையிலும் நடக்கையிலும் நினைந்து கொண்டிருப்பவர்க்கு
சத்குருவாம் பரிபூர்ணன் சந்ததமு மவர்தானே. (பி)

இ.ம்—ஆரபி-தா-ம்-சாப்பு.

பல்லவி.

ஹோராடு கரியாவி ஸத்குருவுல் உஜ்வா
மோரான் நிஞ்தெ ஹோடே பெட்கிக் கடிகின்

அநுபல்லவி.

ஹோராடு கரியாவி ஓங்காரம்ஹோாயெ பட்ணமும்
பாாடே குலகுருஸ்தக் பொரேதல்லாக் பெட்கிக்கடிகின் ()

சரணம்.

மதமாட் கனை	மௌடோ கலிகின்
மாயாபிராக்ரி குலமெய	பழாலதகிகின் சித்து
செதுர் நாஸ்தெரியெ	பாத்ரான் அனிகின்
சபலரஹிதம் சோ	மயமு கல்லிகின்
வேதாந்த மேனெஹாதுர்	விஸ்தாரமான் ஸர்வி
விமலம் ஹொய்ரிபிடுன்	வெடிகு முக்குனு பொர்வி. (ஹொ)

கொர்கெனு வெோடெ	பனிம் ஜெயிகின்
கொப்பிவிஸ௱ர் நாஸ்தெரி	யெஸ் நாங்கரடிகின்
ஸெரிருதீன் ஹெடே	வஸ்தர் அளிகின்
ஸயதமம் ஹொயெ	கேடுக் பிரடிகின்
ஸதாஸ௱ன் ஸெரமிளி	ஸாந்தி நாமுனுலவ்வி
ஸதாஸனம் ஹொய்ரியெ	ஸமமு ஸொம்முனுகல்வி (ஹொ)

பிடமுசார் வேதுன்	ஹால் கரிகின்
பிரிதி போதொயெ	ஸெரிருக் பிஸடிகின்
கடபடம் ஹெடெஹாந்	நெரடிகின்
கனம் பயபக்தி கங்கல்	பந்தடிகின்
லாடுன் அவதூரதொ தபமிட்	டொனுமு
போடிநீஸ்தக்கன் ரியே	பிரம்ம உபதேஸ்கரி (ஹொ)

ஆஸனம் ஹொயெ	பொட்டு நீகின்
ஆர்த்தி ஹோ ரெதுர்	ஸெய் லேத்ரா மெனிகின்
வாஸனெ ஹொயெ	நெரொ ஹொடிகின்
மௌனம் ஹொய்ரியெ	பெட்கிக் தெக்கடிகின்
நஸ௱னுஸ் தக்ரியெஸ்தான்	நிர்வ ஸ௱னெகௌரகு
ஸத்வாஸனஹால் ஹொயெதொரி ஸாக்ஷிக்காட்பொடடிகின்

முத்ரான் ஹொய்ரியெ	மொதல் நீகின்
மோஸ௱ ஜானுஸ்தெ	ஜீவனம் களடிகின்
பத்ரம் ஹொய்ரி	யெவாட் தெக்கடிகின்
பயனு ஸெரொ ஈஸ்தெ	குர்த்துகளடிகின்
சித்ருபுன் ஹொய்ரியெ	பத்ர ர்ராஜ௱னுபிஸொ
சித் ஸௌக்யம் ஹொயெகுலம் ஸெய்பெட்கிக்கடிமோகொ()

இ-ம்-சஹானு-தா-ம்-ஆதி.

பல்லவி.

தெங்கொஜனி தெலெனுரீ ஹொரயெவி-மத்குருகிருபஹால்
கொங்கிடும் பீபொரி ரியேவி

அநுபல்லவி.

ஸங்குனுஸ்தக்களாசனரே ஸங்கெஹாஸிம் ஹொாவானரே
ஸங்கெதானுக் அப்யாஸ்கரேத் ஸர்வமுபொரி ரியெ. (தெ)

சரணம்.

அஸ்கிதெநு மீமீமென   ஸாஉன் த்யெமீ
கோனுமெலி ஜனன்   செக்கனின்
அஸ்மி அஹம்   பிர்ம்மம் மெலி
அர்து யெஜஊர்   வேதும் ஸங்கே
விஷ்ணுவாதி மூர்த்தின்   ஜொவள்
மீவிலெக நீனு   கொன்னி (தெ)

கோஸமு பாஞ்சமு மீமிஸி   கோட்கோட்கி
மோஸஊக ஜெஜுமுன்கடேசி   தெலெனுமீநா
பாஸமு தொடி   ஹொடேசிதா
காஸஊடுக்   கைக்யம் கரி
யாஸனதுட்டே   ஹாஸிமு
மோஸஊ நீனு கொப்பிமு   மொகொ (தெ)

குருபிரம்மா நக்துல்   ஸங்கெயெ
குருத்துகனி சாருவேது   அர்த்துஎளவி
மாருபாடு   நாரெ ஏ எ
ஸாரே தொரெ   ஸொரூப் ஜனி
பாருநாரே தொகொ   ஸங்கே
சராசரய்மு   பொரி ரியெ (தெ)

அல்லோ மில்லோ.

கண்ணிகள்.

தனமாதர் மோகந்தன்னைச் சாமான்யமாகப் பார்த்து
சற்குருவின் பாதமலர் சூடித்தலைமேல்

மனம் புத்திமகள் தாயார் மகானுபாவர் சேதிசொல்ல
வாக்குத்தேவி வந்தெனக்குத் துணையாவாய்

அன்றிருவர் தேடியோடி அடிமுடிகாணாத
ஆதிவஸ்து அருகில்வந்து சொன்னதே தன்னை
என்றும் நம்மை கிருபையோடே யீடேற்றவேணுமென்று
எளிதாகச் சேவைதர வந்தார்காண் மின்னே.

பிரமாதி தேவதைகள் பேசரியாப் பேரறிவு
பேசிவார்த்தை சொல்லிவந்த தாரடியன்னே
கர்மாதி வாசனையாங்கட்டை வெட்டப் பட்டயமாய்
கையும்வாயுங் கொண்டுவந்த கண்ணனார் மின்னே.

வற்றாத ஆசைக்கடல் வற்றிபுற் றடைந்துபோன
மாயையென்ன மாயஞ் சொல்லு மாதாவே யன்னே
கற்றார்கள் வித்தைபோலே அன்னையவர் கற்றவித்தை
கடலோ சோறும் சொல்லும் கண்ணனார் மின்னே

ஆனந்த சாகரத்தில் அனுதினமுந்திளைய
ஆர்நம்மைகொண்டுவந்துவிட்டார் சொல்லன்னே
மோனானந்தமானகுரு மொழியும் ஒளியும் நம்மை
முழுகிக் கரைந்துபோக விட்டது மின்னே.

நித்யானந்தக் கடலில் நிரந்தர முந்திளைய
நிமிஷத்திற் கொண்டுவந்து விட்டதா ரன்னே
அத்தியா ரோபமப வாதமற்ற ஆதிவஸ்து
ஆலடியில் பார்த்தபார்வை விட்டது மின்னே

சத்துச் சித்தானந்த சர்வாதீத சாகரத்தில்
சந்ததமுந் திளையவைத்த தாரடியன்னே
அசத்துஜட துக்கமென்னும் மந்தகாரக்காடுவெட்டி
அகண்ட வெளியாய்க் காட்டி வைத்தார்காண் மின்னே.

சுகதுக்கமானவலை சோகமோக சாகரத்தில்
துடர்ந்து துடர்ந்தடித்த தெங்கடியன்னே
ஜகமித்தை யென்றுசொல்லித் தள்ளித் திடந்தரவந்த
தேசிகரைக் கண்டொழித்து போச்சுது மின்னே..

இட்ட இட்ட நாமரூப மெப்படிப் பொய்யநாச்சு
இதிலொருநிருஷ்டாந்த மெனக்குச் சொல்லன்னே
கட்டை முட்டைடகாஷ்டபேதங் காட்டுந்தீயிற்கண்டதுண்டோ
காலதேச நாமரூபங் கண்டுகொள் மின்னே.

அண்டாத அர்மசுகம் அனுபவித்தே சுகிக்க
அரிந்த அதிக்கத்தைத் தந்தார் சொல்லன்னே
பண்டாலின் பிழிறந்து பார்த்த பார்வையு மொழியும்
பாக்கியத்தைப் பெற்றெடுத்துத் தந்தது மின்னே.

ஜகத்தெல்லாந் தூங்குவதி லேவிழித்துச் சஞ்சரிக்க
தயைபண்ணின குருவை சொல்லுவாயன்னே
மகத்தான பேர்கள்கூட தூங்குவதிலேவிழிக்க
மகானுபாவர் கோபாலர் காருண்யமின்னே.

கண்டதிரியங்கண்ட விடத்தில் கண்டிருக்கக்காணுமல்
கருத்தும் பொய்யாய்க் கழிந்த தேதடியன்னே
உண்டென்னுங் கானற்சலம் ஓடுவது பொய்போல
உற்றுப்பார்த்த உல்லாசம் ஒப்புதல் மின்னே.

நித்யதிருப்தி யால்நிறைந்து கிருபாதியால் மகிழ்ந்து
நீயிருக்கும் நேர்த்திதன்னைச் சொல்லுவாயன்னே
புத்தார்த்ததிருப்தியினுல் போட்டசைகள் போட்டாற்போல்
பூராகிருபையால் நிறைந்து ஒளிர்ந்தேனுன் மின்னே.

அஞ்சடக்க முத்தியென்று ஆகமவேதங்கள் சொல்ல
அத்தனையருமையோ அறிந்து சொல்லன்னே
பஞ்சுபோற் பறக்கு மஞ்சும் பராபரத்திலே நிறுத்த
பக்குவனுக் கேயொழிய கூடாது மின்னே.

அந்தப் பரம்பரையாய் வந்த ஜகத் பிராந்தியைத்தான்
அழித்துக் கெடுக்கிறது எப்படியன்னே
சற்றும் சந்தேகமன்றிச் சற்குருவின் வாக்கியத்தால்
சாக்ஷமாய்த் துணிந்தால் தானேபோமின்னே.

எங்கெங்கு பார்க்கினும் சராசரமாயுற்றிருக்க
எவ்விடத்தில் சத்துநித்திருக்குஞ் சொல்லன்னே.
அங்கங்கேயது வதுவாய் அக்கினியும் புகைபோல்
அண்டபிண்ட லோகமெல்லாங் கண்டுகொள் மின்னே.

முர்த்தியெது பந்தமெது முன்னும் பின்னுமுள்ளதெது
மூன்றையுமொன்றில் காணச் சொல்லுவாயன்னே
விர்த்தியுதயமேபந்தம் விருத்திநாசமே மோக்ஷம்
விட்டிடத்திற்றானிருக்கு மெப்போது மின்னே. .

எல்லா விஷயங்களு மெப்போதும்போல் பசித்து
எனக்கில்லை யென்னுந்தீர மெப்படி யன்னே
சொல்லாது மனசாலுந் தோணுகிற சாக்கிரத்தைச்
சொப்பனம்போல் நிக்ஷயிந்த துணிவுகாண் மின்னே.

சுழுத்திபோல சாக்கிரத்தி லேயிருக்கும் சுகந்தன்னைச்
சொல்லலாம் போலிருந்தாற் சொல்லுவாயன்னே
விழித்துறங்கி விவகாரம் பண்ணுகிறவனைவிழுங்க
வேணுங்காண் பின்னையொன்றும் வேண்டாங்காண் மின்னே.

சாக்கிரத்தி லந்தியம்போல் நித்திரையிலாதிபோதும்
சஞ்சரித்திருக்கிறது எப்படியன்னே.
பார்த்துக் கெட்டலைந்த மனம் பற்றுக்கெட்டுச் சித்தாய்ப்பேர
பதின்மடங் கத்தைப்போ லிருக்கலா மின்னே. [றால்

குருவாகி வந்தவனார் சீடனா வந்தவனார்
கூசாமலே நன்றாய்த் தெரியச் சொல்லன்னே
குருததுவென்னும் சப்தம் துவமென்னும் பதம்சீடன்
சோதித்தால் சப்தம் ரண்டும் சுத்தம் பொய்மின்னே.

எங்கெங்கும் ஏகரச மாகநிறைந் திருக்க
எவ்விடத்து விர்த்தி மூன்றிருக்கும் சொல்லன்னே.
பொங்குங் கருணைபுசிக்க மாட்டாத புத்தியிலே
போக்கடித் தனந்தவிர்த்தி கற்பிக்கு மின்னே.

சத்துசித் தானந்தத்திலே சகத்துண்டாய் லபிக்கிறதும்
சாத்தியமன்றே யிதைநீ சாற்றுவாயன்னே.
சித்து சடந்தன்னை நன்றாய்த் தீரவிசாரிக்கும்போது
தெரியலா மதுவிரண்டும் வெறும் பொய்மின்னே

என்னிடத்தி லுண்டாகி என்னைப்பயமுறுத்தியே
எனக்குப் பயந்தொளிந்த தேதடியன்னே
தன்னைமறந்தாலிருக்கும் தன்னையறிந்தா லொளிக்கும்
சற்றுநீ யுற்றுப்பார்த்துச் சந்தோஷி மின்னே

உற்பத்தி நாசங்கள் ஒருக்காலு மற்றிருக்க
உண்டாய் லயிருக்கிறது எப்படி யன்னே
கற்பித்த அம்புதியைக் கடக்காத பேர்களுக்குக்
காணும் நாமமாய் மயங்கி கற்பிக்கு மின்னே

கரையில்லா வானந்தம் கண்டவிட மெல்லாம்பருக
கானற் சலம்பானம் பண்ணப் போவானேனன்னே
விலையில்லா ரத்னம் வேணபடி யிங்கிருக்க
வெறுங்கல்லை வேண்டிக்கொள்ள போவார் காண் மின்னே.

ஆதியந்தம் ஞானியரா யகண்ட பரிபூரணராய்
அறிவே யறிவாயிருந்து மலேவானே னன்னே
ஜோதியான மட்கண்ணைச் சுத்தப்பொய் கொள்ளைகொள்ள
தலங்கப்பறிகொடுத்த தோஷங்காண் மின்னே

பார்த்தவிடமெல்லாம் பரம் பூரணமாய் நிறைந்திருக்க
பாடுபட்டுத் தேடுந்தெய்வ மேதுசொல்லன்னே
ஆப்தவாக் கியத்தைக்கேட்டு அறிவுகண்ணால் விழித்தா
லப்போது நீசொன்னதற்கு அர்த்தமாமின்னே

மகான்க ளிவர்கட்கிச்சை வரப்போகுதென்றுசொல்லி
மகாவிஷ்ணு தலைமேற் சுமந்த தேதன்னே
தானே தன்னை நாசம்பண்ணிச் சர்வதியாகி யாயிருந்தால்
தலைமேற் சுமக்கிறது அருமையோமின்னே

தத்துவமஸியென்னும்பத சாஸ்திரக்கட்டு நழுவ
தாமரைப்பூக் கண்ணாலே பார்த்ததாரன்னே
சித்திரம் போல சகத்து சித்தமென்னும் படத்திலே
தெரியும்படி பண்ணின கோபாலர் மின்னே

ஆனந்தவே தோபநிஷத் தாருசாஸ்திர மாகமங்கள்
ஆரிடத்தி லுண்டான தறிந்து சொல்லன்னே
மனந்தன்னி லுள்ளசப்தம் வாக்கினாலே யுச்சரிக்க
மகாமோகமாய் வளர்ந்த மாமோகமின்னே

ஜீவனிருந்தாலன்றோ தேகேந்திரிய விஷயங்கள்
ஜனித்து மரித்தலைய போகுது அன்னே
பாவனையென் சோகம் சுருதி அனுபவம் வந்தவர்க்கு
சொர்ப்பனத்திற் கற்பிதம்போல் தோனுங்காண் மின்னே

ஸ்வதசித்த மாயிருந்து சுயமாய் விளங்குவதைச்
சொல்லப் போவதேது வேதசாஸ்திர மன்னே
சதிபண்ணு மனமாயை சத்ருவர் முன்னேதானும்
தத்வமஸி யென்றுதான் சாதிக்குமின்னே

சோகம் சொரூபமென்று சொல்லற் றிருந்தவிடம்
தோன்றுகிறதேது சொல்லு நானு வாயன்னே
அகம் இகம் மமவென்றும் அவாந்திர கற்பனையால்
அண்டபிண்ட லோகமெல்லா முண்டாச்சு மின்னே

அத்தைக்கண்டு தத்துவ மனத்துள்ளே போயொளித்தால்
ஆத்மாவைத் தேடுபவன் ஆரடியன்னே
உற்றுப்பார்த்து ஒத்துக்கொள்ள மாட்டாத அகங்காரி
உழறுபட்டுப் பாதிகளைத் தேடுருன்மின்னே

நாலுவேத சாஸ்திரங்கள் நாதனைக்கண்டே நடுங்கி
நானுனக்குச் சொல்வில்லை யென்றதே தன்னே
கால்தலையில் லாவிடத்துக் கற்பித்த கபட்டைக்கண்டு
கண்ணைக் குத்தித் தள்ளப் போரா ரென்றஞ்சி மின்னே

பதினாலாயிரங் கோடி பாஸ்கரானுதயம்போல
பளிச்சென்ன வேதெரிய பார்த்தாரன்னே
இதையாந்த காரத்தை யெளிதாக வெளியாக்கி
யீடேற்றி விட்டா ராஜகோபாலர் மின்னே

அடிநாளாய்க் காலின்கீழே ஆவரணமுள்ள தெல்லாம்
அடித்துப் பறித்துக்கொண்ட தாரடியன்னே
குடிகுலம் குணங்கர்மம் புத்திசத்தியுள்ள தெல்லாம்
கொள்ளையிட்டுக் கோலங்கொண்ட கோபாலர்மின்னே

சொர்க்காதி போகமெல்லாந் துச்சமென்று தள்ளிவிட்டு
சுகத்தை இதிகாசத்தால் சொல்லுவாயன்னே
சொர்க்காதியிலிருப்பதுவும் சுகமென்று சொல்லுவதும்
சொர்ப்பனமே சொர்க்கமென்று சொல்லலா மின்னே

பண்டுநாள் பலசுருதி பார்த்துக் கேட்டதாயிருந்தும்
பரமார்த்தம் நானறியே னென்றதேதன்னே
கண்ட சர்க்கரையையுண்ட நாவுருசி சொல்லாமல்
கண்டகண்க ளுண்டருசி சொல்லுமோ மின்னே.

ஆகாசம் சரீரமென் றவுபவிக்கச் சுருதிசொல்ல
ப்ராரப்த மங்கீகரிக்க தேதடியன்னே
சாகாரமாய்த் துணிந்து தன்னை நாசம் பண்ணரிய
அசத்துக்கள் புத்திக்கிது நிச்சயமின்னே.

இ-ம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி

ஐயனே யுந்தன் அனுக்ரகமகிமையை
ஆதிசேடனாலு மறிவிக்கக்கூடுமோ.

அநுபல்லவி.

மெய்யனே குருபிரமானந்த தேசிகனே
துய்யனே யுனக்கொருவரும் நிகர்காணேன்
தொய்யவறிவெனக் கோதிடாவிடினும்
வையகமறிய நின் வாக்குதவியால் சொல்வேன் (ஐ)

சரணம்.

வண்டத்தனஞ்செய்யு மாயாவுலகந்தனில்
கண்டவைதக் காட்சியாய்க் கனவிலும் நினைத்து
உண்டவைதப் போகமா யுளமொத்த மூடனைப்
பண்டுள்ளபழம் பொருள் ஆகிடச்செய்தவென் (ஐ)

தேகாதி பிரபஞ்சத்தை மெய்யெனவேநம்பி
வாகானபோஷணை வாஞ்சையினாற்கொண்டு
ஏகாதவாழ்வென ஏற்றிடு மாபாசனை
சோகாதபிக்பபத சுகந்தன்னில் நிறுத்திய (ஐ)

தொண்டர்பணிக்குதவி நல்கும் கெம்பீரா
அண்டர்முனிவர்க்குங் கோனான தீரா
எண்டிசைபோற்றிடும் ஏகவொய்யாரா
சண்டமாருத மோகம் ஒளித்திடுஞ்சூரா (ஐ)

இ-ம்-சௌராட்டிரம்-தாளம்-சாப்பு.

பல்லவி

அறிவுதானென் றறிந்துகொள்ள
ஆர்க்குங் கிடைக்குமோசாமி

அநுபல்லவி.

உரியமாவிடையுரு வெடுத்ததிருவென்ன
குரவனடியவனைக்காக் குருட்டுக்குலாமர்கள் (அ)

சரணம்

பெண்டுபிள்ளைகள் பூமி தானமுதல் யாவும்
கொண்டபெரிதான நூலம் படைத்தோமென்று
கண்டுமகிழ்ந்து கணப்போதிடைவிடாமல்
காமாதிவாதனையிற் களிப்புற்றமூடர்கள் (அ)

நீரிற்குமிழிக்கு நிகரான காயத்தை
நெடுநாளிருக்குமென்று நிச்சயங்கொண்டிப்
பாரிற்பலநாளும் பதராய்ப் பறந்தலையும்
பாவிகளாய் ஜனித்த பாங்கான மாடுகள் (அ)

செல்வந்தரித்திர மென்ற மொழிக்கருத்து
நிலையாமை யாகுமென் றறியாமல் மூடமாய்
புல்லறிவுற்றபெரும் வெறிநாய்போல் பேராசை
கொண்டவர்கள் பிரமா னந்தர்கிருபைபெற்று (அ)

இ-ம் காம்போதி-தா-ம்-ஆதி.

பல்லவி

அரிதேயுந்தன்கிருபை யார்க்குங்கிடைக்குமோ சாமி

அநுபல்லவி.

பரிதிபோன்ற பிரம்மானந்ததேசிக
பாரிலுள்ளோர் சுழுவில் பரசுகம்பெற்றுவாழ (அரி)

சரணம்.

முற்சனனத்துச்செய்த சத்கர்மம் யாவும்சேர்த்து
மோகாதி குணங்களை யேகாதடக்கியபின்
கற்பனையானகன்ம ஜன்மத்திற்றுக்கங்கொண்டு
கஸ்திகொண்டுனைத் தேடிக் காத்திருந்தாலல்லால் (அரி)

எந்தகிமிஷத்திறு முந்தன் பாதார்விந்தம்
தந்தென் கருத்தினிற் றருக்கியிருக்கச்செய்து

பக்தராமாய்ப் பணிந்து பக்தி தவிர்த்திடாமல்
பால்போல்மனதைத்தேற்றிப்பணிவிடைசெய்தாலல்லால் (ஆ)

இட்டகட்டளையாவு மிதயம்விட்டேயிடாமல்
ஏதமாகவுட்கொண்டு இன்பத்திலாசைபூண்டு
பட்டதுயரம்போக துஷ்டவாதனைவிட்டுக்
கொட்டிக்குடத் தண்ணீர்போல் கனமேயிநின்றாலல்லால் (ஆரி)

இ-ம்-அரிகாம்போதி-கா-ம்-சாப்பு.

பல்லவி.

ஆடிமொட்டத்தை நான் ஆரிடம்சொல்வேன்
கண்மணியே கண்மணியே ஞானக்கண்மணியே

அநுபல்லவி

அங்குமிங்கு மெங்கும் பொங்கும்பிரமானந்தர் (ஆ)

சரணம்.

சாதுசல்லாபத்தின் சந்தோஷத்தினாலே
சத்துசித்தானந்தந் தானேயுண்டாகுமென (ஆ)
உள்ளக்கருத்து வள்ளலறியும்
உள்ளதுள்ளபடி உண்மைவெளிப்பட (ஆ)
கள்ளமனதைக் கண்டிக்க நல்லதோர்
கண்டகோடாலியைக் கையிற்பிடித்துக்கொண்டு (ஆ)
பித்துக்குழியான புத்திமயக்கத்தை
யுத்திரத்தினத்தால் வெற்றியடைந்துகொண்டு (ஆ)
தஞ்சமென்றோர்களை யஞ்சாதேயென்று
குஞ்சிதபாதத்தைக் கும்பிட்டுநில்லென்று (ஆ)
பஞ்சகோசங்களைப் பாழாக்கிவிட்டு
பரமசிவலயிலே பாவனையாக்கிக்கொண்டு (ஆ)
ஏதேது நின்னை வந்தாலும்லோகம்
எப்படிக்கீழ்மேறா மாறினாலும் நீயுண்டென்று (ஆ)

ரு-ம்-பூரிகல்யாணி-தாளம்-சாப்பு.

ஆச்சி போச்சி என்ற அனுபூதி பாடல்.

கண்ணிகள்.

ஆசைக்கயிற்றாஞ்சல் ஆடித்திரிந்ததும் போச்சே
அசஞ்சலமான அகண்டசொரூபன் நா ஞச்சே
ஆணென்றும் பெண்ணென்றும் அலைந்துதிரிந்ததும் போச்சே
அணையாத ஞானம் வெளியாயிருக்கவு மாச்சே
அந்தகனாலே யதட்டிப்பயந்ததும் போச்சே
இந்த அவஸ்தைகள் மூன்றுக்கு மப்பாற்பட்டோ னச்சே
ஆங்கார துக்கம் அருமை டம்பங்கள் போச்சே
தூங்காமற்றூங்கிச் சுகமாயிருக்கவு மாச்சே
அனந்தசன்மத்துக் கடியாயிருந்ததும் போச்சே
அகந்தனிலுஞ் சென்மமில்லாதிருக்கவு மாச்சே
ஆறுகுளங்களி லாடித்திரிந்ததும் போச்சே
அறிவுவடிவாய்த் திடமாயிருக்கவு மாச்சே
அலையிற் றுரும்புபோ லலைந்துதிரிந்ததும் போச்சே
மலையாமற் பருவதம் போலே யிருக்கவு மாச்சே
ஜாதிகுலங்கள் ஆசிரமதருமங்கள் போச்சே
சத்துசித்தானந்த பிரமமேநானென்ன லாச்சே
செம்புத்தருவுஞ் சிலையுந்தொழுததும் போச்சே
தென்பாகச்சித்து மயமாயிருக்கவு மாச்சே
நாமரூபமுன்னே நாமென்றிருந்ததும் போச்சே
நாலுமுகனாலு மறியப்படாதவ ராச்சே
நீரிற் குளித்தும் நீரிற் கழித்ததும் போச்சே
நிர்மல நித்திய சொரூபமே நானென்ன லாச்சே
தாவரசங்கமம் சத்தியமென்பதும் போச்சே
தாவராதி பொய்யின் மாத்திர மிச்சம தாச்சே
தான்பிற ரென்கிற தாழ்வு முயர்த்தியும் போச்சே
வான்வடிவாக வழங்கியிருக்கவு மாச்சே
பசிக்கிரை தேடியே பண்ணுமுபாயங்கள் போச்சே
புசிப்பதற்குள்ளது தானேவருமென்ன லாச்சே
என்னசெய்வோமென ஏக்கம்பிடித்ததும் போச்சே
ஏதேது வந்தாலு மெல்லாஞ்சுபாவமு மாச்சே

காமக் குரோதாதிகள் காயக்கிலேசங்கள் போச்சே
காலத்திரயத்திலுங் காணுகிறவனா னாச்சே
கோத்ராதி கற்பித குணங்கள் குறிகளும் போச்சே
குணாதீதன் பரப்பிரம்ம ரூபனா னாச்சே
லோகாதி லோகங்களுண்டென்று சொன்னதும் போச்சே
ஒன்றுமில்லையென்று நானாயிருக்கவு மாச்சே
இந்ரயக்பின்லோகா வியென்றபேரெல்லாம் போச்சே
எப்போதும் பிரமசொரூபமே நானென லாச்சே
வேற்று ரூபமாகப் பார்த்து இருந்ததும் போச்சே
வேறொன்று மில்லாமல் நானாயிருக்கவு மாச்சே
பொய்யை மெய்யென்றெண்ணி போகம்புசித்ததும் போச்சே
மெய்யைமெய்யென்றெண்ணி மெய்யாயிருக்கவு மாச்சே
எக்கிய யாகங்க ளோற்றவிதிகளும் போச்சே
எச்யாதி கர்மங்க ளென்னைப்பஜிக்கவு மாச்சே
புத்திர ராற்கதி யுண்டென்றிருந்ததும் போச்சே
புத்திரர் தாரம்பொய் பூரணம் நானென்ன லாச்சே
பஞ்சவிஷயத்தால் பலன்வருமென்றதும் போச்சே
பஞ்சதன் மாத்ரைக்குப் பரமாயிருக்கவு மாச்சே
ஜனனமரண மெனக்கென்றிருந்ததும் போச்சே
சனிமிருத்து பொய்யென்று ஜயித்து இருக்கவு மாச்சே
சந்தைக்கூட்ட வாழ்வை நிசமெனமதித்ததும் போச்சே
அந்தக்கூட்டம் விட்டா லந்த சின்மயரூப மாச்சே
சப்தகோடி மந்திர சாகங்களென்பதும் போச்சே
சப்தமயமென்று சாக்ஷியே நானென்ன லாச்சே
மாயையுபாசித்தால் வருமோசமென்பதும் போச்சே
மாயைக் கதிட்டான மாயாவிநானென்ன லாச்சே
எனக்கெதிராக வெகுவாகப் பார்த்ததும் போச்சே
ஏகமேகமென்று எங்கும் நிறைந்தவ னாச்சே

வருகிறானோ வாரானோ சுக்ரீவன்-என்றமெட்டு
இ-ம்-அசாவேரி-தா-ம்-ரூபகம்.

பல்லவி.

என்னை யென்னிலமையில் என்றும்நிலைக்கவைத்த
உன்னையொருநாளு மறவேனே

அநுபல்லவி

நின்னையல்லாது தெய்வம் வேறெனக்குளதோ
தன்னையறிந்தசுகம் தனக்கு நிகருமுண்டோ. (ஏ)

சரணம்

பொருளல்லாதவைகளைப் பொருளென்றுணர்ந்திருந்த
மருளாலேவந்தடர்ந்த மாளாப்பிறப்பதனை
மருணீக்கி மாசற்ற மகிழ்ச்சிவந்திடச்செய்து
இருளாம்பிறவிநீக்கி யின்பந்தனைக்கொடுத்து (ஏ)

மெய்யுணர்வில்லாதார்க்கு ஐயுணரெய்தியகன்றும்
பயனில்லையெனும்மொழி பிசகல்லவே
நையுந்துன்பத்தை நீக்கிச் செய்யுஞ்செய்கைமுடித்துக்
கையினெல்லிக்கனிபோற் கணத்திற்காட்டிக்கொடுத்து (ஏ)

பிறப்பென்னும் பேதமையைப் பறக்கத்துலைப்பதற்கு
சிறப்பென்னுஞ்செம்பொருளைச் சேரக்கணத்திலேற்றிப்,
பரலோக இகலோக மலவிச்சைகளொழித்துத்
திரமாயிருக்கச்செய்த தீரர் பிரம்மானந்தர் (ஏ)

ஏலப்பாட்டு.

இராகம்—புன்னாகவராளி.

கண்ணி.

ஏல ஏலோ அகண்டரசம் சிவோஹம்
ஏலே லோ பூர்ணரசம்

அகண்டரச மாய்ப்பெருகும் சிவோஹம்
ஆத்மானந்த சுகத்தைச் சேர்த்து எந்தன்
ஜென்ம பந்தம் சிவோஹம்
தீர்த்துவைத்த பிரமானந்தரைப்

முடுகு.

பத்தியுட னநுதினமும் பணிந்து நமஸ்கரித்து
பித்தனாகியவென்றன் புத்தியினாலே
இத்தைநா னுரைக்கவே பிழையில்லேமுக
குற்றமதுவந்தாலுங் குருவுடைய வருளால்

சத்தபேதங்களைக் தள்ளியவுருநிராமயம்
சுத்தமாகவே யென்றன் நிச்சயங்கூற
புத்திரன் செய்பிழையைத் தாய்பொறுத்தல்போல
நித்தமு நான்செய்த குற்றமனைத்தைப்பொறுத்து
தத்துவமா யனுக்கிரகிக்கும் சற்குருவைப் பணிந்தேன் (ஏல)

நிர்குணமய மாகவெங்கும்—சிவோஹம்
நிறைப்பாக நிறைந்திருக்கும்
வஸ்து வென்ற சாக்கெடுத்து....சிவோஹம்
வகையுடனே தானேற்ற

முடுகு

பிரக்ஞானம் பிரமமென்ற பலகைதனை யெடுத்து
அஹமஸ்மி யென்றுமிரு ஆணிகளைத் தைத்து
அஸியென்ற பதத்தினு லசையாமற் சேர்த்து
பிசகாத நிலையையொரு பாய்மரங்கட்டி
அசையாத விளக்கென்ற ஆத்மரத்னம்வைத்து
ஆனந்தமாய் நிறைந்த அகண்டவாரிதியில்
விசையாக நடத்தினர் விக்ஞான மறிந்தோர் (ஏல)

போதமய மாய்நிறைந்த—சிவோஹம்
பூரணமாங் கப்பலிலே
சோதனமாய் விளங்குகின்ற—சிவோஹம்
சித்ரூப ரத்தினத்தை

முடுகு.

காணவே வேறுமெனிற் கற்பிதமான
நாதமுதலானதெலாம் மித்தையெனத்தள்ளி
ஆனந்தமாயிருக்கு மறிவுநிலைகண்டு
அகம்பிரம மென்றுசொலு மிருபதமுந்தாண்டி
ஒளியாக விளங்குகின்ற பரமவெளி தனிலே
சலியாம லனுதினமு நிலையாக நின்றால்
வெளியாகும் பொழுதினிலே விளங்குகின்ற ரத்னம் (ஏல)

அத்வைதமாய்நிறைந்த —சிவோஹம்
ஆத்மரத்னங் காணுகைக்கு
சாதனங்கள் நாலுடனே—சிவோஹம்
சற்குருநாதன் றுணையால்

முடுகு.

வேதாந்த மானதொரு கப்பலிலே யேறி
வெகுவித மாய்விரிந்த ஜெகநஞ்சே(?)தாறி
குருநாதனருளாலே அறிவாகத்தேறி
பிரியாமலேயந்தப் பிரமநிலையுற்று
தூரியமாக வேகண்ட தோன்றலையழித்து
சரியாக விளங்குகின்ற ரத்தினத்லதப் பெற்று
சுயமாக விருந்தேன்பிர மானந்தருளால் (எல)

இ-ம்-சங்கராபரணம்-தா-ம்-சாப்பு.

பல்லவி.

என்னென்று நான் சொல்லுவேன்
ஏகசுகத்தை (எ)

அநுபல்லவி

ஒன்றென்றும் பலவென்று முரைக்குமொழியெல்லாம்
பின்னமில்லாம லபின்னமாய்க்காணுது (எ)

சரணம்

சூதென்றும் வாதென்றும் சொல்லுமொழியெல்லாம்
பேதமொன்றில்லா அபேதமாய்க்காணுது (எ)
தானென்றும் பிறரென்றும் சாற்றுமொழியெல்லாம்
ஆனந்தமாகவே அநுதினங்காணுது (எ)
அதுவென்றுமிதுவென்றும் அறையுமொழியெல்லாம்
சிதானந்தரசமாகச் சிந்தையிற்காணுது (எ)
இல்லையுண்டென்று இரண்டிரண்டாகவே
சொல்லுமொழியெல்லாஞ் சொரூபமாய்க்காணுது (எ)
பந்தமோக்ஷமற்ற பிரமானந்த சொரூபரே
சிந்தையிற்குடிகொண்டு எனையாளும் விதத்தை (எ)

இ-ம்-தோடி-தாளம்—ஆதி.

பல்லவி.

ஞானம்படித்ததினுல் வருமோ ஏகசொரூப பரபிரமம்

அநுபல்லவி

மோனமகிழ்ந்துசிவ ஞானமிருந்து ஏக
முடிவற்றதிசுக வடிவுற்ற பரப்பிரம்மம் (ஞா)

சரணம்

ஆசையென்றருங்கடல் பாசத்தை நீக்கி
அறிவுருவானபே ரானந்தந் தாக்கி
நேசம்வைத்த பரோக்ஷ ஞானத்தை நோக்கி
நிலைநிற்க மாட்டாத பேய்வெறி நாய்க்கி (ஞா)

மோகங் கொடுக்கும் பந்தம் சமைத்திடுங் கூடு
மும்மலம் சேர்ந்துடன் கருவேலங் காடு
முழுமுற்றவர்க்கல்லோ பேரின்ப வீடு
உறுதியென்றறியாத கெடுமூறு மாடு (ஞா)

வாதனைகளை வளர்த்திடுந் தேகம்
ப்ரலாபவசனி சொல்வசனசு பாவம்
காதலாகினி மறிய மோகம்
காமுகரோடு மிந்தக் கபடர நேகம் (ஞா)

இ-ம்-தன்யாசி-தா-ம்-ஆதி.

பல்லவி.

சிறுக்கி நடையும்பிடி யிடையு முடையுங்கண்டு .
சிந்தையுருகலாமோ மனமே

அநுபல்லவி

பொறுக்கி யெடுத்தஞானம் போகும்போகும் சொன்னேன்
கழிக்கிப்பாதியும் சுரக்காய்விதைக்காகுமோ சின்ன (சி)

சரணம்

தோலுமிறைச்சியுடன் துடர்ந்த உதிரஞ்சியும்
காணுந்தலை முடியாய்க் கண்டவுருவமன்றோ
நாணுந்தெரிந்திருந்தும் நரகம்புசிக்கலாமோ
பாழும்படுமுழன்னைப் பாக்கியமிருக்கையில் (சி)

அலையிற்றுரும்புபோலு மலைந்து திரிந்துமிந்த
அலைநீர்ச்சிக்கிமாய்போல் மயங்கித்திரிந்தொருகால்
நிலையிலடுத்தவின் தாழக்குனியாயோடன்
தலையிலெழுத்தைக்கென்ன நான் செய்யலாம் சின்ன (சி)

மாயா வுலகத்தோடு மயங்கித்திரிந்து மிந்த
காயாபுர மாங்கோட்டை கைவிடுங் காலத்தில்
பேயாய்த் திரியவேண்டாம் பிரமநிலைக் கடையை
ஆயாய்ப் பிரமானந்தனை அறிந்துகொள்வாய் சின்ன (சி)

இராகம்-தர்பார்-தாளம்-ஆதி.

பல்லவி.

நீயும் நானும் வேறு எந்தனறிவே.

அநுபல்லவி.

காயும் விரையும் போலிருந்தும்
கண்டனை செய்து நீக்கும் விதம்போல

சரணம்.

ஏதே தென்னிறு மதற்கிணங்கியே
என்னை விட்டகலாமல் மூடிக்கும்
யாதேயுனை மறக்கவே தேவந்ததே நாதே
எனக்கார் துணையினி தொல்லுலகினிற் றேடக்காணேன்
மூதேவியையாகம்பின மூடமெனக்குமுன் வந்துநிற்க (நீயு)

இத்தனைகாலம் சாயை போலவே
நித்தமாகக் கூடியிருந்தும் சத்தனுக்கலிக்கவுற்ற
உத்திய போக மாமதனைப் போல மகிழ்ந்து கொண்டு
மதிப்பில்லாப லெனைமடித்து மமமேதென இகழ்ந்து
தள்ளிமாளும் படிக்குத் துரத்திவிட்டாய் (நீயு)

பத்தனுக்குப் பரசுகந்தரும்
புத்தன் பிரமானந்த தேசிகன்
எத்தனை நாளெந்தன்மேல் வர்மம்வைத்திருந்தாரோ
முத்தனுகி மோனமடைந்தாய் மோகமேறுனக்கினிமேல்
அத்தனேயுனைவிடுத்தே னடிக ளற்றதருகிகானேன் (நீயு)

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

கண்ணி.

சிவசிவ பவபவ சரணம்—சம்போ
பவதுஸ்தர குருஸ் மரணம்

கதம்ப வனஸ்தல வாசா—சிவ
காபூர ஹாரஹார ஆசா
கங்காதர சந்திர சூடா—ஜகன்
மங்கள சர்வலோக நீடா
பஞ்சானன பலி பூஷா—சிவ
பரம புருஷமுனி வேஷா
பஸ்மத் தூளித தேகா—சிவ
பரம புருஷ விருஷ வாகா
சந்திர சூர்யாக்னி நேத்ரா—சிவ
சதுர்ப்புஜ நடன சரித்ரா
ஆனந்த நடனவி நோதா—சச்சி
தானந்த விகலித பேதா
நவவியா கரணசு பாவா—ஸ்ரீமங்
நாராயண தீர்த தேவா
ஆனந்த நடனவி நோதா—வெகு
அழகுள்ள குஞ்சித பாதா
சதானந்த நடனவி நோதா—பூர்வ
சஞ்சித பாபவி நாசா
சிதானந்த நடனவி நோதா—திவ்ய
சின்மய ரஞ்சித போதா
பிரமாநந்த நடனவி நோதா—பூர்ண
பிரம சொரூபம கேசா
நித்யானந்த நடனவி நோதா—பர
நிர்குண வுல்லாசவி லாசா
ஸற்குரு பிரம்மா நந்தா—என்
ஊமைத யறும்படிவ ரந்தா

இராகம்-அடாணா-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆரடா வுனையறிந்து பாரடா—பர
மாத்மாவென்று தேரடா தேர்ந்தால்
உனக்கெதி ராரடா

அநுபல்லவி.

தூல சூக்கும காரண மோடா நீ
துரியமானபொருள் தா னோடா
காலமூன்று மாய்க்கவி வோடா நீ
காரணமாய் நின்ற கருத்துத் தானோடா (ஆ)

சரணம்,

தோன்று மவஸ்தைகள்தா னோடா—அதைத்
துடர்ந்துகின் றறிந்ததுரை யோடா
மூன்று விருத்திகள்தா னோடா—நீ
முத்திபந்தமில்லா மூர்த்திதா னோடா (ஆ)

மாறிவருகுமுடல் தா னோடா—நீ
மாசில்லா வான்மதி யோடா
ஆறு விகாரங்கள் தா னோடா—நீ
அருமையாய் நின்ற அறிவுதா னோடா (ஆ)

போக்கு வரத்துடல் தா னோடா—எங்கும்
பூரணமாய் நின்றபொரு ளாடா
சேர்க்கும் நாமரூபந்தா னோடா—நீ
சேதனமாய் நின்ற சிவன்று னோடா (ஆ)

கருவிகரணங்கள் தா னோடா—அதைக்
கண்டறிந்த ஞானக்கண் ணோடா
குறியுங் குணமுநீயா மோடா—எங்கள்
குருபிர மானந்தர் தானு மோடா

இ-ம்-புன்னாகவராளி—தாளம்-ஆதி:

பல்லவி.

ஆசையானேனே என் சாமி மேல்

அநுபல்லவி.

ஆசையானே னவருடைய லீலையை
தேசமெங்கினுந் தேடியுங் காணேன்
கோசபஞ்சனை மேல்வினை யாடும்
வேஷகுரு பிரமானந்த நாதன் மேல் (ஆ)

சரணம்.

கடங்காருக்குள் வாய்போல
கடங்காரர்க்குள் ளே யவன்
தடங்கலைக் கொண்டே யுல
கடங்கவும் நின்றெைன் பெருங்
குடங்கள் போலிரு கொங்கை யுமல்குல்
தடங்களையுந் தானவன் கண்டு
படர்ந்த லீலைகள் செய்யுமவன் மேல்
அடர்ந்த மோகம தாகினேனடியேன் (ஆ)

ஆசைபெருகுதடி பெண்ணே
மோகம் பெருகுதடி யவன் மேல்
தாகந் தருகு தொரு வகை
யாக வருகுதடி யிப்போ
தேகாரக்ஷியானவன் சரசம
நேகமாமதை யென்சொல் வேனடி
போகபோக்கிய சாதன சிக்கன
யோகமாகிய சரச விலாசத்தில் (ஆ)

அடுத்தநாயகன் வந்தென்னைப்
பிடித்தநாள்முத லாயவன்
கொடுத்த கலவி யில்மனம்
பிடித்தமாகுதே யென்சொல் வேன்
படுத்தவுடனிதழ் கடித்துக் கொண்டவன்
உடுத்தசேலையை விடுத்துமேற்கொண்
டடர்ந்தவேளையி லானந்தாமிருதம்
குடித்தென் னுளங் குழுறுதடிபெண்ணே (ஆ)

இ-ம்-ரீதிகௌளம்-தா-ம்-சாப்பு.

பல்லவி.

கண்டாரென் குருநாதர் ஜீவ
பக்ஷிகள் படுந்துயர் தீரவே (க)

அநுபல்லவி

மன்றுடும் சத்துவ மனமெனும்பூமியில்
கொண்டாடி விரைத்தாரே சுயேச்சையாம்விரைகளை (க)

சரணம்.

விசாரமாமரமதில் கருணையாஞ்சலம்பாய்ச்சி
தனுமானசியெனும் பூகாய்கருடன்காய்ச்சி
பதசத்வா பத்தியெனும் பழங்களைஜீவ
பக்ஷிகள்நிறையவே சாப்பிட்டுக்குளிரவே (க)

பிரமானந்தரெனுங் குருநாதனருளாலே
அஸம்சத்தியெனும் அந்தப்பழரசத்தை
வரமாகப்புசித்தங்கே வழிபடும்பதார்த்தா
பாவனையெனுமந்தப் பரவசமடையவே (க)

துரியமாம் நிலமதிற் றுலங்கியஜீவர்
உறுதியாம்வஸ்துவில் உலையாமலேநிற்பன்
பெரிதாகும்பேரின்ப விடதுவாகுமே
பிரியமாய்ச்சொன்னேனே குருநாதன்மொழிப்படி. (க)

சொன்னேன் ஸ்ரீராமனென்று-என்றமெட்டு.

இ-ம்-பியாக்கடை-தா-ம்-சாப்பு.

பல்லவி.

வந்தாரேகுரு நாதர்பிரமானந்தர்
தந்தாரே காக்ஷி

அநுபல்லவி

எந்தன்பிறப்பொழிக்க முந்தத்தவமுழுதும்
வந்தொருமித்ததுபோல் சொந்தக்கல்லலைநீக்கி (வ)

சரணம்

அன்னைதன்சிசுக்களை ஆமைமீன்பறவைபோல்
என்னுள்ளம்சோதித்து இயற்கைக்குணமறிந்து
பின்னையெவ்விதத்திலும் பேதமையணுகாமல்
என்னையறிவதற்கு இதோபதேசம்சொல்ல (வ)

ஆரோபஅபவாத இலக்கணைகளைக்காட்டி
வேறுயிருந்தறியும் அறிவேநீயென்று
ஒரோர் பொருள்களையு முள்ளபடிக்கேகாண
நேராயனுபவத்தை நின்றநிலையில்விள்ள (வ)

சற்பனைசெய்மாயையை ஜெயஞ்செய்துநிறைவாக்க
சொற்பனம்போலகத்தைச் சோதனையால்வெளியாக்க
விற்பனவிவேகந்தேக்க வேற்றுமைபொருள்கள்போக்க
கற்பனையாவையும்நீக்கக் கண்டறிந்த பொருளாக்க (வ)

இராகம்-நாட்டைக்குறிஞ்சி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆனந்த ரூபமே அடியார்களுக்காக
அவனியி லவதரித்தார்

அநுபல்லவி,

மனமுத லிந்திரியங்கள் மருவியறியப்படா
தினகரன் போன்றவென்குரு பிரமானந்த தேசிகராய் (ஆ)

சரணம்.

சித்த சுத்திவந்து முத்தி விருப்பங்கொண்ட
பத்தர்களுக்காக
உத்தம சுருதியுத்தி அநுபவங்களுடன்
புத்தியளவைக்கண்டு
தத்துவ தொகுதியும் வஸ்துவின் மிகுதியும்
வித்தாரதிய மங்களாதியும் மெத்தவேயுரை செய்யவே (ஆ)

அவஸ்தா திரயங்களும் அந்வய யுத்தியும்
அதற்குள்ள சாக்ஷியென்று
பலமாக வுதிக்கின்ற அவயவக் கூற்றையும்
அதற்குள்ள அத்தியாசம்
விவரித்துச் சொல்லியும் விதங்க ளிதெனக்காட்டிப்
பவமதைத் தீர்த்துப் பரப்பிரம மயமாக்க (ஆ)

கலியாண்டு தொளாயிர நாற்பது தை சுவாதியில்
கதிர்சுக்ல பஞ்சமியில்
சுலபமாய்ப் பிரகுலத்தில் ராமலிங்கராய்ச்
சுகமுடனவதரித்தார்
மலமிலாதிவருட சரித்திர மதைக் கேட்டோர்
பலமேயெனப் படித்தோரும் குழுவினில்முத்திபெற(ஆ)

ஆண்டிப்பாட்டு.

இ-ம்-குறிஞ்சி-தாளம்-ஆதி.

கண்ணி.

அண்டரண்டமெல்லாந் தாண்டி அவன்
அறிவாய்வந்ததிந் தாண்டி இந்த
தொண்டரிடர்தீர்க்கந் தாண்டி வந்து
பிரமானந்தரூபமா னாண்டி.

வந்தறியாமலே தாண்டி நானும்
மதிகெட்டுப்போயிருந் தேண்டி அவன்
எந்தவிதமாவோ தாண்டி எந்தன்
சிந்தைமகிழவைத் தாண்டி

பின்னையும்ஞானத்தைத் தாண்டி சற்றும்
பாராதிருந்துவிட் டேண்டி நீ
சொன்னதறிந்திடேன் றாண்டி பார்த்து
ஜோதிமயமாகி னேண்டி

உரைத்தசொல்லைநான் றாண்டி நான்
உற்றுணர்ந்துபார்த் தேண்டி அங்கே
நிறைந்துபூரணமாய்த் தாண்டி பின்னை
நீநானுமற்றிருந் தேண்டி

காமாதிவைரியைத் தாண்டி அவன்
காணமலோட்டிவைத் தாண்டி பின்னை
நேமத்தைப்பூணச்சொன் னாண்டி யென்னை
நிர்மலமாக்கிவைத் தாண்டி

தேகாதிசங்கத்தைத் தாண்டி என்னைத்
தெரிசித்திடென்றுசொன் னாண்டி பின்னை
மோகத்தைப்போக்கிவைத் தாண்டி நேக்கு
முத்தியைக் கையிற்றந் தாண்டி

பாசமறுத்துவைத் தாண்டி பர
மானந்தத்தையளித் தாண்டி பஞ்ச
கோசமெரித்துவிட் டாண்டி என்னை
பேசாதிருந்திடென் றாண்டி

நாசாரூக்காகவே தாண்டி அவன்
காயமிப்பில்லாக்குறிக் தாண்டி எந்தன்
ஆபாசமெல்லாந் தாண்டி அவன்
அடியோடேயொழுந் தாண்டி

அஞ்ஞவிஷயத்யாகந் தாண்டி அவன்
அழிக்குமிடையென்றுசொன் னாண்டி பின்னை
மிஞ்சினவஸ்துவைத் தாண்டி நானும்
மேலாம்பதத்திருந் தேண்டி

போசப்பேச்சில்லாமற் றாண்டி என்னைப்
பிரமமயமாக்கி னாண்டி இந்த
வாசிநிலைத்திடென் றாண்டி அந்த
மாசில்லாப்பொருளென் றாண்டி

சத்துச்சித்தானந் தாண்டி எங்கும்
சத்தியமென்றுசொன் னாண்டி அதை
உற்றுவிசாரித்துத் தாண்டி நானும்
ஒன்றாகவேயிருந் தேண்டி

காணும்பிரபஞ்சத்தைத் தாண்டி அவன்
கட்டையிற்கள்ளனென் றாண்டி பின்னே
உன்னிநிலைத்திடத் தாண்டி அவன்
உன்வடிவென்றுசொன் னாண்டி

தோணும்பொருளெல்லாந் தாண்டி அவன்
சுத்தியில்வெள்ளியென் றாண்டி பின்னே
தானேதானாகவே தாண்டி என்னைத்
தன்மயமாக்கிவைத் தாண்டி

கானற்சலம்போல தாண்டி எல்லாம்
கண்டுகொள்ளென்றுசொன் னாண்டி பின்னும்
ஆனந்தமாகவே தாண்டி நானும்
ஆகிநிறைந்துகொண் டேண்டி

ரச்சுவிற்சர்ப்பம்போற் றாண்டி தன்னில்
ரண்டாகத்தோணுமென் றாண்டி அத்வைத
துச்சமாய்த்தள்ளினன் தாண்டி அந்த
சொற்சொரூபமாமென் றாண்டி

அந்தரவெளிபோல தாண்டி நானும்
சந்ததமுமிருந் தேண்டி பிரமா
நந்தரூபமாகத் தாண்டி எந்தன்
பந்தமொழித்துவைத் தாண்டி

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மனதோநானுனைக் கண்டேன்
இன்றுனைக்கொன்றேன்

அநுபல்லவி.

பெண்டுபிள்ளையெனும் பண்டுமனைகளுடன்
கொண்டஆசையாலே யென்றுங்கெட்டுப்போன (ம)

சரணம்

பகிர்முகமாகி பாவனைபெருகி
சதிசங்கந்தேடி ஜகத்ரூபமாகி
மழைநுரை குமிழிகள் போலவேயழிந்து
நிரைநிரையாகவே ஜனனங்கள்பெருகும் (ம)

சிற்றின்பநினைவால் ஆசைகள்பெருகி
குரோதங்கள்வளர்ந்து விவேகமுந்தவிர்ந்து
உரைசெய்யுங்குரு வாக்கியம் மறந்து
ஞானமுமிழந்து அநியாயமாய்க்கெட்ட (ம)

சாதனநான்கையு மடைவாய் உன்
சாவுடன்பிறப்பையு மொழிப்பாய்
தத்துவவழிகளைத் தெரிவாய்நீ
தானேதானா யிருப்பாய் (ம)

இப்படிக்கெட்டு அலைவதினாலே
தப்புமோபிறவி தப்புவேன்கேளு
முத்திதருங்குரு பிரமானந்தரைத்தேடிப்
பத்தியுடனவர் பாதமேகூடு (ம)

நோட் மெட்டு.

இ-ம்-தேவகாந்தாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்

எந்தன்சிந்தையில் சந்ததம்பிரமா
னந்ததேசிகன் வந்துநின்றனன்
அந்தரங்கத்தில் சொந்தமாகவே
பந்தம்போக்கியபின் விந்தைகாட்டிட
நானவனெனும் பேதமன்றியே
மோனவின்பத்தில் மூழ்கிநாடிட
எவ்வுலகமும் என்முன்தோன்றியே
செவ்விதாயமேல் செறிகல்கண்டிட
அறிவுவொன்றுமே ஆதியந்தமாய்
தெரிவுருவதாய்த் தோணலுற்றிட (எ)

ஸ்ரீமந்நாராயணஹரியே நிக்குவேறில்லை நீகெதியே-என்ற மெட்டு.

இ-ம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னை உபேக்ஷித்தவகை யொன்றும்
அறியேனென்குருநாதனே

அநுபல்லவி

முன்னேசெய்ததவ முழுதுமொருமித்து
என்னைக்காக்க வந்தவா பின்னை
என்னசெய்வேன் பிழைபொறுத்தாட்கொள்ளும் சுத்த
பேரின்பவிட்டோனே (என்)

சரணம்

மாலோனாகிவந்து வேழத்தைக்காத்தநீ
ஏழையைக்காவாயோ பின்னை
வேலாயுதங்கொண்டு சூரபத்மனையும்
சுமக்கமயிலாக்கினாய் (என்)

ஆதிசேடனாகிப் பூமியைச்சுமந்தாயே
அதற்கென் செய்தார்பசுக்கள் மாதுக்
காதியிற்றாயில்தந்த உதவிக்கென்செய்தானோ
அதைநீர் சொல்லுமையா (என்)

சத்துவகுணத்தாலே மெத்தவுலகங்காத்தாய்
பத்தரை மறப்பாயோ நித்தம்
வெற்றிராஜதத்தாலே யித்தையுலகயீன்றாய்
சுத்தபிரமானந்தனே. (என்)

இ-ம்-எதுகுலக் காம்போதி-தாம்-சாப்பு.

பல்லவி.

கும்பகோணம் பெரிய வூரடி குருசுவாமி
அங்கிருக்கிறார் பாரடி

அநுபல்லவி.

நம்பிப்போ வோர்க்கங்கே காட்டந் தெரியுமடி
நல்லகுருவைக் கண்டு நடுமையம் பாரடி (கு)

சரணம்.

உளற்றை மண்ணாற் கட்டும் வீடடி அதற்
கொன்பது வாசலுமுண் டடி
பிற்றற்றுருத்தி யென்று பேரிட்டார்கள் கோடி
பிணமான பேய்நரி பிடுங்கித் தின்றிடுங் கோடி (கு)

ஆறுபேர் தூதர்கள் உண்டடி அதற்
கன்பனை ரைந்துபே ருண்டடி
சீறும் புலையனாக இரண்டுபே ருண்டடி
சுக்ஞானந் தெரிந்துநீ சீர்பதம் சேரடி. (கு)

விதியு மதியும் ரண்டு மூச்சடி அந்த
ரவியு மதியுங்கண்க ளாச்சடி
விதி மதிக் கப்பாலே துரியந் துரியாதீதம்
துரியந் துரியாதீதம் ரண்டுமொன்றாச்சடி (கு)

துரிய மத்தியிலொளி யாமடி துரியா
தீதமத்தியில் வெளி யாமடி
குறி தவறாமலே நீயங்கே பாரடி
கோவிந்த ஜோதி நடனத்தைப் பாரடி. (கு)

இ-ம்-எதுகுலக்காம் போதி-தா-ம்-சாப்பு.

பல்லவி.

குருசிகா மணியைக் காணேனே அடிதோழி

அநுபல்லவி.

கருமத்தைக் கண்டித்த கருணைவடிவீசர்
தருமமறை எல்லையில் தானாக நிறுத்தின (கு)

சரணம்.

வானம் புவனமெல்லாம் வஸ்துவாய் நிறைந்த
தானே தானாக நின்ற தன்மயப் பொருளாம்
மானப் பிரமானந்த மத்குரு நாதன்றன்னை
மல பாச மறுத்து இன்பரச மளிக்கும் (கு)

சதமல்லடா இந்தத் தேகம்-என்ற மெட்டு.

இ-ம்—பைரவி-தா-ம் ஆதி.

பல்லவி.

மத்குரு பிரிவற்ற தாகம்—அது
மதிக்க முடியுமோ சோகம்

அநுபல்லவி.

விற்பனனை வேத வேதியனே யென்
கற்பனையாவும் நீக்கும் கருணைக் கடலதான (ம)

சரணம்

இத்தனைகாலமட்டும் காத்து நின்
பத்தனாகவேயென்னைச் சேர்த்து
முத்திவழியிதெனப் பார்த்து நின்
முறையாகச்செய்வதற் காத்து
புத்தியுடன்சிலசுருதி அனுபவங்கள்சேர்த்து
முத்திபெறுவதற்கு முறையாகச்சொல்லிய (மத்)

கர்த்திருத்வ புத்தியைப் போக்கி யெனைக்
கருணைக்கண்பார்வையால் நோக்கி
அற்புதசொரூபனு யாக்கி யெனை
அறிவுவடிவாகத் தாக்கி
சர்வசாக்ஷியான சமரசபதந்தந்து
கர்மங்களைக்களைந்து கருத்துடனிருவென்ற (மத்)

மாயாப்பிறவியைப் போக்கி யென்
மதிக்கிசைந்தமொழி தாக்கி நிதம்
ஆயாப்பிரமானந்தரை யெண்ணி வழி
யாதொன்றுந்தோணாமல் நண்ணி
தாயாமவனைக்காணுத் தனையனைப்போலவே
வாயாற்புலம்பியே வழிதனைநோக்கிநிற்கும்(மத்)

இ-ம்-நவரோக்-தா-ம் ஆதி.

பல்லவி.

பிரம்மா நந்தம்பஜ ஹேமனஸ
பிரம்மாநந்தம்பஜ

அநுபல்லவி

பிரமவிஷ்ணுருத்ர பிரகடித பாதம்
பாமராதிமத கண்டித ஸ்ரீதம் (பி)

சரணம்

ராகத்துவேஷகாம குரோதலோபமோஹ
ரஹிதாத்துவயசுர ரஞ்சிதசரணம் (பி)
விஷ்யஹிருதயபாப விக்ஷிததார்டயம்
வீதாமிர்தவாக்ய க்ஷீரஸமுத்திரம் (பி)
கர்மகாண்டபக்தி காண்டயோககாண்ட
ஞானகாண்டபூர்ண ஞானஸொரூபம் (பி)
ஸாரஹீனஸம் ஸாரவிதாரம்
ஸகலோப நிஷத ஸாரவிசாரம் (பி)
கர்மஞானதல கலுஷேந்திரியஸஹ
காணசதுஷ்டய விரஹிதரூபம் (பி)
அக்ஞானதிப ரோக்ஷவிஹீனம்
அபரோக்ஷத்பா னந்தஸொரூம் (பி)
மித்யாத்தியாத்யாஸ மிஹிகாமார்தாண்டம்
ஸத்யக்ஞானனந்த ஸாஸ்வதபரமம் (பி)
பிஜஜாக்ரதாத் யசலசுரேந்திரம்
பிகரபுத்ராதி யஜைலேந்திரம் (பி)
பூர்வபூமித்ரய லங்கிருதஹிருதயம்
பூஜித்தரியாத் யசலநிலயம் (பி)
பிராகபாவபிரத் துவம்ஸாத்யகில
பாவவிவர்ஜித பரமத்யானும் (பி)
திருஷ்டாந்தார்தவி ரோதபோதமஹா
தார்ஷ்டாந்தான்வய தாஸவிநோதம் (பி)

பிராந்திஜநாதாத் மாதிவிரஹிதம்
ஸாந்திகாந்திஸம்பந்த ஸத்விவேகம் (பி)

பூர்வாபக்கிரம உபஸம்ஹாரம்
பூரிதஷ்டித லிங்கவிதானம் (பி)

பிப்பலேஸகுரு பிரியபூஜார்யம்
பிரியமாஸ்பத பிரம்மாநந்தார்யம் (பி)

இராகம்-பியாக்கடை-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மத்குருவே மனம் செய் சற்பனையை
மாற்றிட லாகாதோ மாற்றிடலாகாதோ
உம்மா லாகாதோ உம்மா லாகாதோ

கற்பனையாகத் தோன்றித் தோணி காக்ஷி தருகுதே
அற்பனென்று தள்ளிடாம லளித்திடலாகாதோ
அளித்திடலாகாதோ மாற்றிடலாகாதோ
மாற்றிடலாகாதோ

எதேதென்னினும் அந்த வடிவாய்
எதிரிட்டு நிற்கிறதே
யாதுசெய்வே னுந்தன் கிருபை
இரங்கிட லாகாதோ இரங்கிட லாகாதோ

தோற்றமான வேளை தனி லெந்தன்
சாக்ஷி மறைக்குதே
காத்தலா ருனையல்லாமல்
கர்த்தர்க ளுறவேது கர்த்தர்களுறவேது

கிற்பனனை வேதவடிவனே
வேடிக்கை பாராதே
விரைவில் வருவாய்ப் பிரமானந்தா
வேற்றுமை பாராதே வேற்றுமைபாராதே (ம)

இராகம்—ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

குருநாதா நின் வாசகப் பொருளாலே
மறுபிறப் பெறுமையல் நீக்குமே

அநுபல்லவி.

பருவதமாம் பிரதி பந்தங்கள் போக்கியும்
சருவ விதமான சஞ்சிதம் நீக்கியும் (கு)

சரணம்.

அந்த காரமான அவிந்தையை யோட்டியும்
சந்ததமும் பிரம்ம தியானத்தை யூட்டியும்
வந்ததாம் சோகங்கள் தருந்துன்ப நீக்கியும்
மூந்த செய்தவினை முழுவதும் போக்கவும் (கு)

பந்த மெனுங்கர்ம பாசத்தைப் போக்கியும்
விந்தைய தாம்ஞான விதிகளை யோதியும்
சொந்தமதாந் தன்னைச் சோதித்துப் பார்க்கவும்
எந்தநேரமு மென் னிலையிலே நிற்கவும் (கு)

அம்பரமான சிதம்பர ரூபனே
தொம்பத தற்பத நீக்கிய நேசனே
சம்பிரதாயகுரு பிரமா நந்தனே
வம்பனுன வெனைக் காக்க வந்தவென் (கு)

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சாரட்டு மேலேறிப் போவோம்—எங்கள்
சாமியைத் தெரிசித்து வருவோம்

அநுபல்லவி.

பாரெட்டும் சாணெட்டும் பறக்கும் குதிரைரெண்டு
ஏரிட்டுப் பார்க்குமுன் னீரேழுலோகஞ் சுற்றும் (சா)

சரணம்.

பஞ்சதன் மாத்திரைக ளுண்டு—பிர
பஞ்சமெல்லா மங்கே யுண்டு
நெஞ்சிற் கடிவாளத்தை நேராய்ப் பிடித்திரண்டு
கண்சிமிட்டு முன்னே காணலாம் சகலமும் (சா)

பிராரத்த கர்மத்தைத் துலைந்து—துஷ்ட
ஆறுவிகாரத்தை வெறுத்து
ஆறுபலமுந்தாண்டி யம்மா சத்திரந்தாண்டி
போர வழிக்குத்துணை புவனநாதனை வேண்டி (சா)

காந்ரித பலமெல்லாம் கொடுப்பார்—சில
ராமதாசர் பங்கி லிருப்பார்
கோமள மாகிய லிங்க தரிசனம்
கொண்டாடுவோர்நேய குசநாயகியுடன் (சா)

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஞாயந்தானோ நீர் சொல்லும்—குருபிரமானந்த

அநுபல்லவி.

மாதவஞ் செய்வது மாமுனிக் கேற்கும்
மானிட ஜென்மத்தில் குருவில்லா எக்கம்
நாசப் பிறவியில்லா நாடெனக் கருளிய
நாதனுன குரு பிரமானந்த (ஞா)

சரணம்

இதுவரை பிடித்த எக்கம் போதாதோ
பதின்மூன்று நாளில பரதேசம் போக
தாயில்லாக் குழந்தைகள் போலவே தவிக்கப்
போவது சரியோ புண்யம் போதாதோ (ஞா)

ஆகமப் பொருளெல்லா மனவிட்டுக் கண்டு
அஸ்வத்த நாதனருள் அனுதினங் கொண்டு
ஆனந்த குருவா யவனியில் வந்து
அநியாயம் செய்வது ஆகுமோ சாமி (ஞா)

இ-ம் சாரங்கா-தா-ம் ரூபகம்.

பல்லவி.

வாராரோ என்னைப் பாராரோமுத்தி
தாரா ரோசாமி

அநுபல்லவி

ஆராருளந்தன்னில் வேரூயுலகெங்கும்
கூறுகியேகின்ற நாருபிரங்கண்ணர் (வா)

சரணம்.

சண்டமாருதம்போலே யண்டம்பொடிதூளாக்கி
வண்டமாயையற வென்றவிமலபோதர்
தொண்டர்மனதினின்ற கண்டபாவமறுக்கஅ
கண்டவநுபவத்தை விண்டவாக்குகள்கொண்டு (வ)

சச்சிதானந்த ரத்துவிதீய ரவர்க்
சொந்த எதிரில்லாத வஸ்துவே யவரென்று
பத்திசெய்தவர் ஜீவன் முத்தியடையநல்ல
சத்தியமா மவர் யுத்தி சாதனங்கொண்டு (வா)
வாசர் சச்சிதானந்தா வேச ரபரிமிதா
காச ரருளானந்தா வேச ரவருக்கொரு
நாசப்பிறவியில்லா விசரிவரே சொப்பிர
காசபரமகுரு பிரமானந்தரவரிங்கே (வா).

இ-ம்—முகாரி—தா-ம்—ஆதி.

பல்லவி.

சற்குரு பிரிவுற்ற தாகம் சாதுக்களேயென்னால்
சகிப்பில்லை சோகம் (சற்)

அநுபல்லவி

கற்பனைபோக்கிக் கடைத்தேறச்செய்த
விற்பனனானபிர மானந்தாநீத (சற்)

சரணம்

இத்தனைகாலம் எனிருப்பானோ
நித்ய பதமு நானும் நீங்குவதேனோ (சற்)
ஆனுனுமெனைப்போல கிடையாதுபாவி
நானாக வியப்புற்றே நடுங்குதென்னாவி (சற்)
இந்நேரந்தனிலென்முன் னிரங்கிவாராரோ
முன்னேமொழிந்தபடி முழுதுங்காவாரோ (சற்)

இ-ம்—குறிஞ்சி—தா-ம்—ஆதி.

பல்லவி.

சிந்தா நாஸ்தி கிலாம் தேஷாம்
சிந்தா நாஸ்தி கிலாம்.

அநுபல்லவி.

சமதமகருணா ஸம்கீர்ணானாம்
ஸாதுஸமகம ஸம்பூர்ணானாம் (சி)

சரணம்

காலத்திரயாநித கந்தர் பானும்
கண்டித ஸர்வேக் திரியதர் பானும் (சி)
பாமஹம்ஸகுரு பதசிந் தானும்
பிரம்மா நந்தா பிர்தபா னுனும் (சி)

தெலுங்கு.

விடமு ஸேயவே—என்றமெட்டு.

இ-ம்—கரகரபிரியா—தா-ம்—ஆதி.

பல்லவி.

நிர்த்த மேடிகிரா மனஸாவேறு
நிர்த்த மேடிகிரா

அநுபல்லவி

நிர்த்தமேடிகி குரு சரணேதமுண்டக
பிராந்திதோ லோலபெடவு
பக்திலேனு துஷ்டவலே (நி)

சரணம்.

கங்கா நிர்த்தமுனு கதிப ரோக்ஷமுனு
ஸாது ஸங்க கியான கங்க
கதிஅப ரோக்ஷமுனு (நி)
அக்ஞான சேதமுனு ஆவ்ரண நாஸமுனு
அநர்த்த ஜடதுக்கமு
லங்கிய லேக ஜேஸனுரா (நி)
பிரமானந்த சரணேதக பானவிசேஷமுன
பிரபலபாப நாஸாதி
பிரபல பாக்ய முலிச்சு. (நி)

இ-ம்-பியாக்-தா-ம்-ஆதி.

பல்லவி.

நின்னுட நாமத்தின் மகிமையைச்சொல்ல
நாட்டோர்க்கது சக்கியமா (ட்)

அநுபல்லவி.

அன்னவாகனாதி ஆதிசேடனாலும்
மன்னரறிந்து சொல்வதற்கு முடியாத (நின்)

சரணம்.

பிரமானந்தாயகமஹா என்றோர்க்கு
பந்த மனைத்தும் போக்கிப் பிரமமயமாக்கி
சிந்தை தெளிந்து திவ்யஞானத்தைத் தேக்கி
சின்மாத்ர மயமாகவே செய்கின்ற (நின்)

சித்த சுத்தியுந்தரும் சிரவணாதிகளுக்குள்ள
சாதன நான்கது அவதி வரைக்கும் தரும்
அன்வய வெதி ரேக யுத்யால் வருகின்ற
அவஸ்தா த்ரய சாக்ஷி துவந்தரு கின்ற (நின்)

பக்தி செய்தவர் நான்கு புருஷார்த்தமும் பெற்றார்
பரிசுத் தாத் தொய்த பஜனைகளையும் பெற்றார்
நித்ய நிற்குண நிர்மல மாகிய
நிரதி சயானந்த நிர்விகற்பம் பெற்றார் (நின்)

இ-ம்-உசேனி—தா-ம்-ஆதி.

பல்லவி.

சங்கற்பமே சகலமென்று சற்குருவால் தெரிந்தேன்
சகல பிறப்பறுத்துலக மநித்யமென்றறிந்தேன்

அநுபல்லவி.

சங்கையில்லாப் பிறவிக்கடல்
க்ஷணத்தில்வற்ற இறைத்தேன்
இங்குமானேன் அங்குமானேன்
எங்குமானேன் என்வடிவாய் (சங்)

சரணம்.

குற்றமறும் ஞானிகளின் மனச்செயலைக் கேளு
கோதிலாத சகலசித்தி நிரமுடைய தாகும்
சம்சயமாம் விகற்பமற்று பூரணமாய்க் காணும்
சாதுசங்கம் சாஸ்திரத்தின் வாதனையைக் கூடும்
பாரனைத்து மித்தையென்று மனமுரைத்து நிற்கும்

பரப்பிரம சொரூப மென்று பார்த்துமனங் களிக்கும்
யுத்தியல்ல புத்தியல்ல சத்தியல்ல நானே
முத்தி சொல்லும் குருவின் பாதம் சத்தியமாய் நம்பு. (சங்)

கள்ளமனத் தூறலறுத்து நிற்குமந்தப் பெரியோர்
கானற் சலம் போல் நினைத்து மாநிலத்தில் வசிப்பார்
இவ்வுமுமுஞ் சித்தொளித்து ஆனந்தமே பெருகும்
அதையுரைக்க வாயில்லாமற் கண்விழிநீர் பெருகும்
அடிமுடியும் நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டால்
அத்விதப் பொருளாகி முத்தியிலே நிற்பார்
வெற்றியல்ல முத்தியல்ல சித்தியல்ல சுபாவம்
நிலையறிந்த முத்தர் பதம் பத்தியுடன் தொழுவேன் (சங்)

சீர்பெருகுஞ் சிதாகாயம் தன்வடிவாய்க் காணும்
சித்தநிலை சிவமென்றே சுருதியெல்லாம் பேசும்
திடம்பெறவே நிற்கிலெல்லா வுலகமுமே பணியும்
நிலைநின்றோர் ஜனகன்முதல் முனிவரையும் பாரும்
வஸ்துநிலை சொன்னகுரு பரமானந்தர் கவியால்
சித்தநிலை முத்தியதாம் மித்தை ஜெகந்தானே
சத்துதானாய் சித்துதானாய் ஆனந்தமே வடிவாய்
சுருதி யுத்தியனுபவத்தால் நிருவிகற்பமாமே. (சங்)

இ-ம்-சகானு-தா-ம்-சாப்பு.

பல்லவி.

ஆனந்த வடிவாக நிறைந்தேன் எங்கள்
ஆரியனருளால் பேதங்கள் மறந்தேன்.

அநுபல்லவி.

எனைதிர்த்திடுங் கடல் போலே சுத்த
மானவொரு பொருளைத் தானென்றதாலே (ஆ)

சரணம்.

ஆசாபாச மறுத்துக் களித்து தேஜோமய
மாயெங்கும் சிவமாக நிலைத்து
அச்சப் படுத்துமோக மொழித்துமின்னே
மிச்சமான பொருளே தத்துவ மென்றுணர்ந்து (ஆ)

அஞ்சி விஷயங்களை மறந்து மனச்சஞ்ச
லா கிதமா யஞ்சாம லிருந்து
பந்தமான தேக மழிந்தெங்கள் பிரமா
னந்தராலே தொந்தமுந் தொலைந்து (ஆ)

இ-ம்-தோடி-தா-ம்-ஆதி.

பல்லவி.

பந்த மழிந் தறிவாய் நிலைத்தேன்
பரமானந்த வெளிதன்னில்

அநுபல்லவி.

பந்தமழிந்த பரமானந்த சொரூபமாய்
சிந்தனை யொழிந்துடல் சந்ததமும் மறந்து (பந்)

சரணம்.

ஆசைத்துடக்கறுத்தே துணிந்தேன் வெகு
வாசனையாய் வந்த
கோச மெரித்தொரு பொருளுணர்ந்தேன் அங்கே
பேசப் பேச்சில்லாமல் வாசிநிலைத்த பின்னே
தேசிகனருளொன்றே நாசமற்ற பொருளாய் (பந்)

கானற்சலம்போ லுடலழிந்து விந்து
நாதமுத லொழிந்து
தானந்த மயமாய்க் கலந்து ஜெகம்
மானபேதமாய்க் கண்ட தோணலுமிழந்தபின்
ஆனந்தவடிவாக நானங்கே யிருந்தபின்னே (பந்)

எந்த இடங்களும் நிறைந்த பொரு
ளெங்கள் பிரமானந்தராக
வந்த பரமென வறிந்திருந் தேன் வெகுது
வந்தமய மயமாகிய மந்த மதியறுத்து
வெந்துய ரொழிந்து அந்தரவெளி போலே (பந்)

இ-ம்-இந்துஸ்தான் காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆனந்த மானந்த மானந்தம் குரு
நாதனாருளே பரமானந்தம்.

அநுபல்லவி.

தானந்த மயமான ஞானசுக நிலையில் (ஆ)

சரணம்.

பேத பாவமறந்து பிரமமயமாய்த் தானே
சோதனையா லறிந்து ஏகமாயெங்கும்
போதமய மாய்நிறைந்த ஆதிபரம் பொருளாய் (ஆ)

சச்சிதானந்த மாகவேயிந்த
நாச விஷயமெல்லாம் போகவே யென்று
நிச்சமான நிலையில் நிச்சலமாயிருந்து (ஆ)

அண்ட முழுதுமொன்ற தாகவேயிந்த
பிண்ட மதிலிருந்து போகவே யெங்கும்
கண்ட மறத்துநிறைந்த ரெண்டற்ற பொருளாகி. (ஆ)

இ-ம்-உசேனி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஸங்கல்பூஜ்ஜ ஸமஸ்தம்மெனி ஸத்குரு கிர்ப கரியானு
ஸர்வபரிபூர்ண ஸஹஜானந்தம் ஹொரவடியானு

அநுபல்லவி.

இங்கு ஸ்லோக பவஜலதி கிங்குமனி இங்கடியானு
கிம் கானி கிடுக்கரனி ஊமெனனி உனிசவடியாஸ் (ஸங்)

சரணம்.

ஸரீரத ஸரீருகன்யம் ஸாக்ஷிககரிஸொடியானு
ஸகல ஜகத் பிரமஸ்ரீ மெனி கூடணிகம்மு தொடி ஹொடியானு
துரித மயாம் தஸ்கரண துராத்முனுக் ஒத்கடி யானு
துக்கஸாக ரூபுனு துதாருக தமடியானு
உரிதக ஊர்த்வ திருஷ்டிம்
ஒஸந்து நிஸ்தக் உனிஸவடியாஸ்
ஹரி ஹரச துனுக் அந்துசாரெஎ
ஜூக் மாஅுபவமவடி ஸொடியாஸ் (ஸங்)

கர்தவ்யமு விலகிலேத்ர தாகர்தவ்யம் . அவடியானு
கர்மஜல் மதர் மாதர்மம் யோடுகி ஹோடடி யானு
போக்த மீமெனிபிரமபொடி யொவெதின்லு தொகொஹெற
[தியானுஅ
போக்தமீமெனி அந்தரங்கம்மு ஆணிககடி ஸொடியானு
ஆர்திஹோரகி அநிவேகமுர்
அபரி மிதாத் மிகம வடியாஸ்
அகணிதம் ஹொய் அமனஸ்கம் ஹொய்
அநுபவம் ஹொய் அவடி ஸொடியாஸ் (ஸங்)

ஆஸெரத காஸாகந்தர் ஆஸஹதம் கரியானு
ஹானி விர்தி துவந்தபந்தம் அதிதுதர் ஒக்கடியானு
கோஸமு பாஞ்சு லொடிவிஸாலமு ஹொவடியானு
கொங்கிடு தொரனின கவன்யம் நீஸ்திஸ தெக்கடியானு
தேவஸீகஸ்வாமி திவ்ய வெங்கடேஸ கடாக்ஷமுயே
நாஸமு நீபாஸமு கிஸேஷமு சின் மாத்ரமு மீ. (ஸங்)

இ-ம்-வராளி-தா-ம்-ஆதி.

கண்ணிகள்.

கூடஸ்த தரிஸனம் ஹொயாஸ் தெங்கோ
வர்ட்பிரி ஜெஹுமுனு ஸேஹா தெங்கோ
நாடக பொம்மான் நசடியாஸ் தெங்கோ
நாமரூப் ஹோர் பிரேவ் அவைஹ்ரா தெங்கோ (கூ)
பஞ்ச கோஸம் தடியாஸ் தெங்கோ
பாஸம் ஹால்பந்தம் ஸேஹா தெங்கோ
வஞ்சன ஸர்ர்மீ மென்னுஸ் தெங்கோ
பஞ்ச விஷய ஆஷ அவை ஹா தெங்கோ (கூ)
அவஸ்தா திரயமுனு ஜனியாஸ் தெங்கோ
அவஸ்தா திரய ஸாக்ஷி ஸட்டைஹா தெங்கோ
பவஸம் சார்தடெ ஸாதல் எனுஸ் மெனி
பஜனுலு கரஸனு பகவத் பக்துநு (கூ)
ஸங்கி மெனியாஸ் பிரம்மா நந்தால் கவி
ஸங்கெ தானுக் ஸங்கியாஸ் விவேகா நந்துநு
இங்கித தங்கணிகே விவேகினு புத்திமு
ஸங்கியானஸ்கி திரிஸாக்ஷாத் காரம்ஹோய் (கூ)

இ-ம்-மத்யமாவதி-தா-ம்-ஆதி.

பல்லவி.

குருநாதப் பணிந்து கடைத் தேறு எப்போதுமவர்
குணத்தை வர்ணித்துமனந் தேறு

அநுபல்லவி.

பருவம் வந்ததேயானால் பாரும் பரப்பிரமத்தை
அறிவுக்குள் அறிவாகிப் பரமாய் நிறைந்துநின்ற (கு)

சரணம்.

உண்டானபோது கோடி பந்துளங்கும் மிருந்து
பெண்டாட்டி பிள்ளைமுதல் வந்துமனம் பொரிந்து
கண்டபேர் வணங்குவார் முந்தியவத்தை யறிந்து
கொண்டா லுனக்குச் சொல்வேன் தந்து
சண்டாளவிஷயத்தைச் சாதனைகொண்டு தள்ளி
அண்ட மளந்தவரைக் கண்டு தொழுது நின்ற (கு)

கோடி தனத்தைத் தேடினாலுங் கூத்தாடினாலும்
மோடி சங்கீதம்பாடினாலும் வேதங்கள் நாலும்
பாங்காகவே படித் தாலும் சிங்கார மான
மேடை மாளிகையிடு மெத்தவே யிருந்தாலும்
கூடுவிழ் விழும்போது கூடவருமோ சொல்சொல் (கு)

மண்ணில் பிறப் பிறப்பும்பொய் யே மாயையும் பொய்யே
கண்ணிற் கண்டவைகளும் பொய்யே காயமும் பொய்யே
எண்ணு மனது புத்திபொய்யே இகமும் பொய்யே
பெண்டுபிள்ளையும் பொய்யே பேருருசாதியும்பொய்யே
எந்நாளும் பிரயானந்தர் ஏகரொருவர் மெய்யே (கு)

இராகம்-கல்யாணி—தாளம்-ஆதி.

பல்லவி.

பட்டபாடு கேளாய்—மனமே நீ
பட்டபாடு கேளாய்

அநுபல்லவி.

பட்டபாடுகேளாய் பயனின்றிய தோளாய்
கட்டும் சுருதிசொன்ன திட்டம் விட்டுப்புவி
மட்டிமடவா ராசை யிட்டுக் கெட்டுப்போன (பட்)

சரணம்

குட்டவயிற்றறைந்தொட்டு இட்டகனலிற்சுட்டு
மட்டிப்புழுக்கள்கிட்டி எட்டிக்கடிக்கப்பட்டு
விட்டமூத்திரநாற்றங் கட்டுப்பட்டுப்பையில்
இட்டுமுன்னூறுநாளும் தொட்டுக்கெட்டசன (பட்)

எட்டாமலையினின்று விட்டுருட்டினாற்போல
தொட்டதனஞ்செயாதியால் கஷ்டப்படுத்தும்போது
மட்டஅன்னையுயிரும் பட்டகஷ்டத்துடன்
கிட்டைவிட்டுதலை நீட்டிவிட்டபோது (பட்)

தட்டான்சட்டக்கம்பி யுற்றபாடுபோல
எட்டுப்பங்குபட்டு அட்டகாசந்தோடே
எட்டியழுமோசைசெவி பட்டுப்பிரமானந்தன்
கிட்டவந்துஉன்னை யெட்டிப்பார்க்குமுன்னே (பட்)

இ-ம்—சாரங்கா-த-ம்—சாப்பு.

பல்லவி.

ஏனிந்தவுடலெடுத்தாய் இனியாகிலுநா
னில்லெனவேயதுபடுத்தாய்

அநுபல்லவி

மானபூமியில் ஜெனித்தாய் அநேகமுற்று
வளர்ந்துகெட்டது பாராய்
இறந்துவிட்டதும் கேளாய் (ஏ)

சரணம்

நாறுமுடலுக்கும் நமக்குமுண்டோ சொந்தம் முன்பின்
நியாயமாய்க்காணுமோசொல்லது பந்தம்
அகங்காரியிவைசெய்தான்பல வந்தம் ஆகி
அறியாமல் மநலையா யலைவுற்றுப் வெகு ஜென்மம்

அதுவுமல்லாமலாறாரும்போதவள்
அளப்பறியாத அன்னையானவள்
பசித்தழுகையி லெண்ணெயிட்டதும்
வலித்தழுகையி லழுதமிட்டதும் (ஏ)

வயோபத்தாறு வயதுந் தொலைந் தாயே அப்போ
வாத்தி சொன்ன பொருளுந் தெரி யாயே
கலியாண மாப்பிள்ளை யானாயே நெடுங்
காலமளவுங் கந்தர்ப்பன் கணையால் மெலிந்தாயே

காரிய மிறு மெத்த
கன்னியர் மயக்கம் சுற்ற
வாரியே பணங்கள் தூற்ற
வகையற்று தரை குற்ற (ஏ)

தனுவினில் நரைதிரை வந்ததே அப்போ
தாரித்திர துக்கமுனக் குற்றதே
பார்க்கில் ஏஷணைமூன்றும் வந்ததே சுற்றி
பரிகாசம் சிறுவர் செய்யப் பெற்றதே

பாரிப்பூரணிக்கா யெனக்காலன்
பற்றித்தின்னது வெண்ணரைந்தலை
சூடிப்பிரமா னந்தன்றுளினை
கூடிப்பவமது தீர்ந்திடாமலே (ஏ)

கட்டை பொறுக்கவைத்தாம் சிவமே-என்றமெட்டு.

இ-ம-மணிரங்கு—தாளம்—ஆதி

பல்லவி

பீற்றற் செருப்பாலேயடிப்பேன் ஓமனமே
பீற்றற்செருப்பாலேயடிப்பேன் மூடமனமே கெட்டமனமே

அநுபல்லவி

கட்டையிற்கள்ளன்போல தோணும் காயத்தைநம்பி
கற்பாந்த மிருப்போமென் றெண்ணும்
ஊற்றைச் சரீரத்தை யுண்மையாகவெண்ணிப்
பார்த்துமண் பொன்னிடம் பற்றிக்கொண்டவுன்னைப் (பீ)

சரணம்

பழுதையிற்பாம்பெனவே தோணும் ஜெகத்தைநம்பிப்
பலகாலும் ஓடியெய்தி னாலும்
கழுதையுன்னிலுமதிக மாகவேதோணும்
கசடனியெய்பதற்குக் கதிவேறென்னவேணும் (பீ)

தாயெனவந்துதித்துமுன்னாள் தான்வினைகளைத்
தவழ்ந்துபரம்பொருளைத்துன்ன கிருபைகூர்ந்து
சேயேமயங்காதேநீயே நானென்றுசொன்ன
தேசிகர்பிரமானந்தர் வாசகமறந்தவுன்னைப் (நீ)

வந்தநோ திமை இலங்கைக்கு-என்றமெட்டு
இ—ம்-வராளி-தாளம் சாப்பு.

பல்லவி.

நீயா ரெனக் குரை மனமே உறுதியாக
ஆவாய் தினம் சிநேகமே

அநுபல்லவி.

நீயாரெனக்குரை நீபெறும்பிறப்பெல்லாம்
ஆராய்ந்தறிந்துன்னை யானந்தம்பெறச்செய்வேன் (நீ)

சரணம்

பஞ்சபூதசுமை சுமந்தாய் அது
பழவினையால்வந்ததென்று நீ யறிவாய்
சிந்தனைவிரிவாக விரிந்தாய் அது
ஜெனனமெடுக்கும்விதையென்று தெரிவாய் (நீ)

வெகுபாகுகன்களைப் படைத்தாய் பாகு
தவறுமற்றடிகொண்டுதன்மீதி லடித்தாய்
மோகம் நிறைந்தபெண்ணை நினைந்தாய் முழு
மோசமானநரகக்குழியினில் விழுந்தாய் (நீ)

ஆசையென்னுங்காற்றிற் சுழன்றாய் அத
னாலேகிடைப்பதென்ன அதை யெனக்குரைப்பாய்
பாசவலையைவெட்டித் துறப்பாய் பாதை
சொல்வகைதெரிந்து பாங்காய் நீ நடப்பாய் (நீ)

நீநானுமிருந்தது மறந்தாய்
நித்தங்கேட்டுமுரைத்துநீ நிர்மூடமாய்
ஆறுதத்துவமுரைப்பதில் அதி
லாரோநீ யறிந்தெனக்கவசியம் சொல்லுவாய் (நீ)

ஸ்தூலதேகம்நீ யல்ல அது
அன்னமயமான அருங்கோச மாமே
பிரகுமத்யஸ்தானம தாகும் அங்கே
நின்றதுவிஸ்வனும் தேவனுமாமே (நீ)

புத்திபோசமது வாரும் அங்கே
சாக்கிரமெல்லாருள் சங்கற்ப மாரும்
ஸ்தூலதேகமயமாக சொன்னோரும் இனி
சூக்குமமாமயன் சுபாவந்தனைக் கேளும் (௫)

சமாதி அனுபூதி பாடல்.

கண்ணிகள்.

ஜோதிமயமாய்த் துலங்குபிரமானந்தருக்குப்
பாத்திரமா நிட்டைப் பதமடைந்தேன் சின்மயமாய்
எவ்வளவோ ஜெந்ம மெடுத்ததெல்லாம் பொய்யாகி
விண்ணுருவாய் நிட்டைவிளங்கினேன் சின்மயமாய்
ஆறுவித வைரிகளை யப்புறத்த டித்தோட்டி
மாறுதநிட்டை மகிழ்ந்திருந்தேன் சின்மயமாய்
பந்தமோக்ஷம் விட்டுப் பரமாகி யெப்பொழுதும்
சிந்தைமகிழ்ந்து நிட்டை சேர்ந்திருந்தேன் சின்மயமாய்
சொற்பத் துருத்திதனைச் சதமென்று சொல்லுகின்ற
வார்த்தையற்று நிட்டையிலே வாய்ந்திருந்தேன் சின்மயமாய்
அஞ்சுபொறிபுலனை ஆதாரத்துள்ளடக்கிச்
சஞ்சலமற்று நிட்டை சார்ந்திருந்தேன் சின்மயமாய்
சூனியத்தைக்கண்ட சொஸ்சொரூப மாய்நிறைந்து
வான்போல நிட்டையிலே வாழ்ந்திருந்தேன் சின்மயமாய்
அந்தரத்திற் பூத்த அருமலர்போ லெப்ரபஞ்சம்
தந்திரமாய்க்கண்டு நிட்டை சார்ந்திருந்தேன் சின்மயமாய்
சாட்டையிலாப் பம்பரமாய்த் தாரணியெலா மறிந்து
ஆட்டமற்று நிட்டைஅடைந்திருந்தேன் சின்மயமாய்
அம்புதியிற் கண்ட அலைநுரைபோ லெப்பிரபஞ்சம்
தம்மிடத்திற்கண்டு நிட்டை சார்ந்திருந்தேன் சின்மயமாய்
பொன்னிடத்துப்பூஷணம்போல் போதமா யிப்ரபஞ்சம்
என்னிடத்திற்கண்டேக னாயிருந்தேன் சின்மயமாய்
அப்பிலிட்ட வுப்பதுபோல் அகிலமென்னிலயிக்கியமாய்
எப்பொழுதும் நிட்டை யிருந்தேனன் சின்மயமாய்
கட்டையிலேகண்ட கள்ளனைப்போல் காண்பதெல்லாம்
விட்டுவிட்டு நிட்டை விளங்கினேன் சின்மயமாய்
கானற்சலம் போலசகம் கற்பிதமா யென்னிடத்தில்
தோனலென்று நிட்டை துலங்கினேன் சின்மயமாய்

என்குரு வெனக்கிதமா யேற்றபிரமம் நீயென்று
சொன்னபடி தேர்ந்து தெளிந்தேனுன் சின்மயமாய்
அண்ட பிண்டமென்னும் அகிலமெல்லா மித்தையென்று
கண்டு சிந்தைதன்னிற் களித்தேனுன் சின்மயமாய்
என்னசெய்வோ மென்றேங்கி யெங்குந் திரிந்தமனம்—குரு
சொன்னமொழி கொண்டுசோதித்துணர்ந்தேன் சின்மயமாய்
ஆசையெனும் பேயை யடித்தோட்டிவிட்டதற்பின்
வேசகுருநாதர் விளங்கினர் சின்மயமாய்
கோசப்புர மஞ்சு கொளுத்தியெரித்த தற்பின்
வாசஞ்செய்ய வென்குருவும் வந்தார்காண் சின்மயமாய்
அஞ்சுவித வைரிகளை அஞ்சா தடக்கியபின்
நெஞ்சிலபித்தவிட மென்றிருந்தார் சின்மயமாய்.

கோலடிச் சிந்து.

இ-ம்-முகாரி-தா-ம்-ஆதி

கண்ணிகள்.

நித்யவாழ்வுற்ற நிர்மலனே பிரமானந்த தேசிகா
சத்யஞானனந்த சமரசநிலைதந்த எந்தன் தேசிகா

உன்னடியாரில் பரமசிவன் பிரம்மானந்த தேசிகா
உன்கிருபையால் ஞானஅனுபவம்விள்ள எந்தன் தேசிகா

கெருடன் பறக்கக் கொசு பறந்தவைபோ லுன்முன் தேசிகா
தெரிந்தமட்டும் விரித்துரைப்பேன்பிர மானந்த தேசிகா

உள்ளங்குளிர்ந்து உனதடி போற்றினே னென்றன் தேசிகா
விள்ளஹிருதயக் கொலுவில் விளங்கிடு மென்றன் தேசிகா

உற்றபொருளை யுரைக்கலுற்றேன் பிரமானந்த தேசிகா
குற்றமிருந்தாலுங் குணங்கொள்ளச் செய்வீரென்றன் தேசிகா

நிர்மலவஸ்துவின் நிலைமை சொல்வேன் பிரமானந்த தேசிகா
சொற்குண கோலடிபாட்டுக் கிசையவே என்றன் தேசிகா

குணபூஷணிவந்தாள் க்ஷணநேரத்தில் பிரமானந்த தேசிகா
மனத்தின் வசத்தால் மறுவார்த்தை சொல்லாமலென்றன் தேசிகா

சாந்தமுவந்தாள் சகியாளுடன் பிரமானந்த தேசிகா
விஸ்ராந்தியுவந்தாள் விநயகுணத்துடன் என்றன் தேசிகா

ஞானமுவந்தாள் மோனமாய்ப் பிரம்மானந்த தேசிகா
நானவனென்றும் பேதமில்லாமலே யென்றான் தேசிகா

பூரணம்வந்தாள் புன்னகையுடன் பிரமானந்த தேசிகா
காரணம்வந்தாள் களிப்புமேற் கொண்டு என்றான் தேசிகா

முத்திகாந்தை வந்தாள் முகமலர்ந்தே பிரமானந்த தேசிகா
மோக்ஷமு யந்தாள் வெகுபக்ஷமாகவே யென்றான் தேசிகா

ஆனந்தம்வந்தா ளன்புடனே பிரமானந்த தேசிகா
யனென்றுகேட்க ஏதுமில்லாமலே யென்றான் தேசிகா

எல்லாருங்கூடியிவ் வேளைதனில் பிரமானந்த தேசிகா
சல்லாபமாகவே கோலடிக்கலுற்றார் என்றான் தேசிகா

உன்வாக்கியத்தடிப்புற்ற கோல்கொண்டு பிரமானந்த தேசிகா
நினைவாகஅக்ஞானம் போக அடித்தார் என்றான் தேசிகா

பிர்மம் நித்தியம் ஜகமநித்தியம் பிரமானந்த தேசிகா
வர்மமதனை வகையோடறிந்தே னென்றான் தேசிகா

இகபரசுகத்தினி லிச்சைவிட்டேன் பிரமானந்த தேசிகா
சகசமாய்க் கண்டேன் சதாகாலங்களிலென்றான் தேசிகா

சமதமாதிகளைச் சற்றும்விடேன் பிரம்மானந்த தேசிகா
க்ஷேமமாயறிந்தேன் கனம்பெற்றிடவே யென்றான் தேசிகா

முத்திவிருப்பத்தில் மோகங்கொண்டேன் பிரமானந்த தேசிகா
பத்திவைராக்கிய பதங்கைபிடித்தே னென்றான் தேசிகா

தாபத்திரயத்தினால் தட்டழிந்தேன் பிரமானந்த தேசிகா
ஆபத்தில்வாடி யவதிமிகக் கொண்டே னென்றான் தேசிகா

ஈஷணை வலைவட்டு ஏகிவந்தேன் பிரம்மானந்த தேசிகா
போஷணைசெய்தென்றன் பாசமறுத்திடுமென்றான் தேசிகா

அன்னைபோலென்னை யாதரித்தாயே பிரம்மானந்த தேசிகா
சொன்னதுகேட்கச் சுகமுடனறியுமென்றான் தேசிகா

அடங்கிய விருத்தி யாவென்றறிந்தீர் பிரமானந்த தேசிகா
உடம்பினுட்சிவனுக்குபதேசம் செய்தீரென்றான் தேசிகா

என்னையறியும்படிக்குரைத்தீர் பிரமானந்த தேசிகா
தன்னைத்தேகமெனவே புணர்ந்தே னென்றான் தேசிகா

அதுகேட்டு ஆச்சரிய நகைகொண்டார் பிரமானந்த தேசிகா
எதுகொண்டாகிலு மீடேற்ற வெண்ணினீரென்றான் தேசிகா

அவஸ்தையறிவதா ரென்றீர் பிரமானந்த தேசிகா
ஞவங்கொண்டறிபவன்தோ றுதெனச்சொன்னேனென்றன் தேசி

போதமாக வுரைக்கலுற்றீர் பிரமானந்த தேசிகா
ஏதுமறிந்திடா எந்தனுக்கிரங்கி யென்றன் தேசிகா

ஆரோபத்தால்பந்தம் மைந்றுதென்றீர் பிரமானந்த தேசிகா
நேராகக்காட்டினீர் நிச்சயமாகவே யென்றன் தேசிகா

அபவாதத்தால் முத்தியாகுமென்றீர் பிரமானந்த தேசிகா
ரூபங்களில்லாமல் நிஜமறிந்துகொண்டேனென்றன் தேசிகா

ஆரோப அபவாத வகுப்பினால் பிரமானந்த தேசிகா
ஆரோபத்தைமுந்தி விசாரிக்கலுற்றீரென்றன் தேசிகா

உணர்வொளியென்றுமுள்ளதென்றீர் பிரமானந்த தேசிகா
கணப்போதிற்காண கவலைமேற்கொண்டே னென்றன் தேசிகா

ஆரோபமே கற்பனையென்றீர் பிரமானந்த தேசிகா
ஆரோபம்பழுதையைப்பாம்பென்றார்போலென்றீரென்றன்தேசிகா

நாமரூபங் கற்பிதமென்றீர் பிரமானந்த தேசிகா
நேமமாய்க் கொண்டே னிற்சலமாகவே யென்றன் தேசிகா

அறிவுமயக்கமே பிரகிருதி யென்றீர் பிரமானந்த தேசிகா
விரிவாயதில் குணத்திரய முதித்தன வென்றீரென்றன் தேசிகா

சத்துவகுணமே மாயையென்றீர் பிரமானந்த தேசிகா
உற்றரஜோகுண மவித்தையா மென்றீ ரென்றன் தேசிகா

தாமதமே யுடல் தோற்றமென்றீர் பிரமானந்த தேசிகா
ஆமதுவே ஆவரண விக்ஷேபமென்றீர் என்றன் தேசிகா

மாயாபிரதிபிம்பம் ஈசனென்றீர் பிரமானந்த தேசிகா
காயம்படைத்தாலும் குணரஹிதனென்றீர் என்றன் தேசிகா

அவித்யா பிரதிபிம்பன் சீவனென்றீர் பிரமானந்த தேசிகா
தவிப்புற்றலைந்தே தட்டழியலானேன் என்றன் தேசிகா

அறிவைமறைப்ப தாவரண மென்றீர் பிரமானந்த தேசிகா
இருள்போல மூடியுள்ள தென்றீ ரென்றன் தேசிகா

விக்ஷேப தன்மாத்திரை சூக்ஷம பூதமென்றீர் பிரமானந்த தேசிகா
தாக்ஷியில்லாத ஆகாயமுதலென்றீ ரென்றன் தேசிகா

மாயையீசர்க்கு காரணவுடலென்றீர் பிரமானந்த தேசிகா
மாயையீசர்க்கு சுஷுப்தி யவஸ்தையென்றீரென்றன் தேசிகா

மாயையிரன் ஆனந்த கோசமென்றீர் பிரமானந்த தேசிகா
அவித்தையே சீவர்க்கு அந்தமூன்றுமென்றீ ரென்றன் தேசிகா
சத்வகுண வியஷ்டி ஞானேந்திரிய மென்றீர் பிரமானந்த தேசிகா
சத்துவசமஷ்டி மனம்புத்தி யென்றீரென்றன் தேசிகா
ரஜோகுண சமஷ்டி பிராணபஞ்ச வாயு வென்றீர் பிரமானந்ததே
ரஜோகுண வியஷ்டிகன் மேந்திரிய மென்றீ ரென்றன் தேசிகா
ஞானேந்திரியாதி தத்வம் பதினேழும் பிரமானந்த தேசிகா
வாஞேர் சீவர்க்கு சூக்ஷ்மதேகமு வென்றீ ரென்றன் தேசிகா
இவ்வுடலில் சொற்பனவஸ்தை யென்றீர் பிரமானந்த தேசிகா
இதில் பிராண மனவிஞ்ஞான கோசமென்றீ ரென்றன் தேசிகா
தமோகுணப்பங்கு பஞ்ச பூதமென்றீர் பிரமானந்த தேசிகா
தேமமிக்கி பாதிநன் னான்காக்கிடி வென்றன் தேசிகா
நான்கான நன்னுவில் ஒவ்வொன்று பிரமானந்த தேசிகா
நீக்கியதிற் சேர்த்து ஸ்தூலபூதமென்றீ ரென்றன் தேசிகா
இதில்ஸ்தூலதேகமுண்டான தென்றீர் பிரமானந்த தேசிகா
இதிலண்டபுவனபோகம் வந்ததென்றீ ரென்றன் தேசிகா
இதிலீச சீவஸ்தூல தேகமென்றீர் பிரமானந்த தேசிகா
இதிலீசசீவ சாக்கிராவஸ்தை யென்றீரென்றன் தேசிகா
இதிலிருவர்க்கன்னகோச மென்றீர் பிரமானந்த தேசிகா
இதிலிவர்க்குள்ள இயல்பையறிந்தே னென்றன் தேசிகா
சுஷுப்தி சொப்பன சாக்கிராபிமானத்தால் பிரமானந்த தேசிகா
ஈசனந்தர்யாமி ஹிரண்ய விராட்டென்றீ ரென்றன் தேசிகா
சுஷுப்தி சொப்பன சாக்கிராபிமானத்தால் பிரமானந்த தேசிகா
சீவன் பிராஞ்ஞ தைஜஸத விசுவனுமென்றீ ரென்றன் தேசிகா
ஈசசீவபேதந் தெரியக் கேட்டேன் பிரமானந்த தேசிகா
ஈசன்சமஷ்டிசீவன் வியஷ்டி யென்றீ ரென்றன் தேசிகா
சமஷ்டி வியஷ்டி தெரியக்கேட்டேன் பிரமானந்த தேசிகா
சமஷ்டியெல்லா உடல்வியஷ்டி தனிமையென்றீ ரென்றன் தேசிகா
காரணோ பாதியீசர்க்கென்றீர் பிரமானந்த தேசிகா
காரியோபாதி சீவனுக்கென்றீ ரென்றன் தேசிகா
கற்பனையாவுங் காட்டினீர் பிரமானந்த தேசிகா
சொற்பனம்போல வென்றறிந்திருந்தேனென்றன் தேசிகா

அபூர்வமுத்திபடைவதற்குப் பிரமானந்த தேசிகா
அபவாதலக்ஷணம் சொல்லுமென்று கேட்டேனென்றன் தேசிகா
பாம்பிற்பழுதையாய்ப்பார்த்தல் போல பிரமானந்த தேசிகா
பூதபுவனமில்லை ஸ்திர பிரம்மமென்றீ ரென்றன் தேசிகா
பனிதைபோன் புடவை நூலானவைபோல் பிரமானந்த தேசிகா
பிரகிருதிவரைபி லடக்கிப் பிரமமென்றீ ரென்றன் தேசிகா
தன்விடங்கற்பித்த சகசிவனை பிரமானந்த தேசிகா
என்னுருவாய்ப் பார்த்தே னென்றன் இருமையாலென்றன் தேசிகர்
ஆவரணமறைப்பான விதம்கேட்டேன் பிரமானந்த தேசிகா
பிரமபீசர் பேதந் தெரியாமூடலென்றீ ரென்றன் தேசிகா
அதுபோல கூடஸ்த சீவர்க்கென்றிர் பிரமானந்த தேசிகா
இதனை விசசிவ பவப்பிணியாச் சென்றீரென்றன் தேசிகா
ஆதார மறைந்தா லாரோபமே தென்றேன் பிரமானந்த தேசிகா
ஆதாரம் சமமும் விசேஷமுமா மென்றீ ரென்றன் தேசிகா
பிரமம் கூடஸ்தர் சமமென்றிர் பிரமானந்த தேசிகா
ஈசஜீவர் விசேஷமாமென்றீ ரென்றன் தேசிகா
சமமான ஆதார மறையா தென்றீர் பிரமானந்த தேசிகா
விசேஷ ஆதார மறைபடுமென்றீ ரென்றன் தேசிகா
அந்தவித மாவ தேதென்றேன் பிரமானந்த தேசிகா
பழுதையைப் பாம்பெனப் பார்ப்பதா மென்றீரென்றன் தேசிகா
இவ்வித ஆவரத்தால் பிரமானந்த தேசிகா
ஈசர்ஜீவ அறிவுமறைந்திடுமென் றீரென்றன் தேசிகா
இதனாலே பிரமம் கூடஸ்தரைப் பிரமானந்த தேசிகா
ஈசர் ஜீவர் பாராமையா மென்றீ ரென்றன் தேசிகா
விக்ஷேபமே தென்னிலமை மறப்பென் பிரமானந்த தேசிகா
விக்ஷேப முத்தியில் கூட்டிவைக்கு மென்றீ ரென்றன் தேசிகா
பொய்விக்ஷேப முத்திபொய்யா மென்றேன் பிரமானந்த தேசிகா
பொய்பான சொர்ப்பனந்தரும்சாக்கிரமேயென்றீரென்றன் தேசி
இதற்குள்ள நிச்சய மேதென்றேன் பிரமானந்த தேசிகா
அதுபோல் விக்ஷேபந்தரு முத்திமெய்யென்றீ ரென்றன் தேசிகா
மாயைநீக்க உபாயங்கேட்டேன் பிரமானந்த தேசிகா
மாயைசத்த மந்தமாமென்றீ ரென்றன் தேசிகா

அஸத்தர்மைச் சுத்தங் கெடுக்குமென்றீர் பிரமானந்த தேசிகா
அந்தக்கரணச்சுத்தமும் ஞானத்தால் [illegible]மென்றீரென்றன் தேசிகா
அந்தவிதமெப்படி யாமெய்ந்தேன பிரமானந்த தேசிகா
சலங்கடுதடி வெந்தது போலாகுமென்றீ ரென்றன் தேசிகா
இந்த இருவித மாயைகளால் பிரமானந்த தேசிகா
ஆத்மாக்களுக் கேழவத்யாத வருமென்றீரென்றன் தேசிகா
அஞ்ஞானத்தால் மூடமென்றீர் பிரமானந்த தேசிகா
பரோக்ஷ அபரோக்ஷ ஞானமிரண்டென்றீ ரென்றன் தேசிகா
துக்கநிவிர்த்தி குளிர்மை யாதலாம் பிரமானந்த தேசிகா
தக்க இவ்வேழையுந் தயவாய் வெளியிட்டீ ரென்றன் தேசிகர்
பிரமமான தன்னை மறந்த தஞ்ஞான மென்றீர் பிரமானந்ததேசிகா
பிரமமில்லையென்ப தாவரண மென்றீ ரென்றன் தேசிகா
ஜீவனென்றல் விக்ஷேபமென்றீர் பிரமானந்த தேசிகா
குருவாக்யப்படி தன்னைப் பிரமமெனல் பரோக்ஷமென்றன்தேசிகா
அத்வைதந் தானுணல் அபரோக்ஷ மென்றீர் பிரமானந்த தேசிகா
கர்த்ருத்வ பேதங்கழிதல் துக்கம்போத லென்றன் தேசிகா
நிருத்திமிருத்திய காணது ஆனந்தமென்றீர் பிரமானந்த தேசிகா
உறுதியாகச்சொல்லக் கேட்டுளங் குளிர்ந்தே னென்றன் தேசிகா
வேதமுடிவா மகாவாக்கியத்தில் பிரமானந்த தேசிகா
தத்வமசி வாக்கிய அர்த்தவர்மங் கேட்டேனென்றன் தேசிகா
பிரமங் கூடஸ்தர் லக்ஷியமென்றீர் பிரமானந்த தேசிகா
இச்சீவர் வாச்சியமெனச் சொன்னீ ரென்றன் தேசிகா
பாகலக்ஷி செப்பிதல் பிரமானந்த தேசிகா
டைத்வைத நீக்கியென்னைப் பிரிக்கச்சொன்னீ ரென்றன் தேசிகா
அந்தவிதங்கேட்க ஆசைகொல்லென்ன பிரமானந்த தேசிகா
சொந்தமாகக் கிருபை செய்வதற்றீ ரென்றன் தேசிகா
உடலைநானெனச் சொல்ல வொண்ணாதென்றீர்பிரமானந்ததேசிகா
உடல்பஞ்சபூத விகாரமெனச் சொன்னீரென்றன் தேசிகா
பிராணவாயுவை நானென வொண்ணா தென்றீர் பிரமானந்த தேசி
அஃதுரஜோகுண விகாரமெனச் சொன்னீரென்றன் தேசிகா
மனம்புத்தி நானென வொண்ணாதென்றீர் பிரமானந்த தேசிகா
மனம்புத்தி சத்வகுண விகாரமென்றீ ரென்றன் தேசிகா

ஜீவனை நானென வொன்றுமென்றீர் பிரமானந்த தேசிகா
ஜீவன் வித்தியா விகாரமெனச்சொன்னீ ரென்றன் தேசிகா
பஞ்சகோசங்களை விட்டுநீங்கச் சொன்னீர் பிரமானந்த தேசிகா
சத்துசித்தானந்த பிரமநானென்றீ ரென்றன் தேசிகா
அஞ்சுகோசமூன்று தேகம் விட்டமேல் பிரமானந்த தேசிகா
அஞ்சனவிருளா யிருந்ததை விஞ்சிடஎன்றன் தேசிகா
அந்தவிருளோ நானென்றேன் பிரமானந்த தேசிகா
அந்தவிருளன்று அதைக்கண்ட வளியென்றீரென்றன் தேசிகா
சரீரமூன்றிற்கு சாக்ஷி நானென்றீர் பிரமானந்த தேசிகா
அவஸ்தைகள் மூன்றிற்கும் சாக்ஷிநானென்றீ ரென்றன் தேசிகா
அபிமானிமூன்றிற்கு சாக்ஷிநானென்றீர் பிரமானந்த தேசிகா
காலமூன்றிற்கு சாக்ஷிநானென்றீ ரென்றன் தேசிகா
இந்தசாக்ஷித்துவம் உறுதிகொள்ள பிரமானந்த தேசிகா
சற்குருவின்பேரில் வாக்கையுரைத்தி ரென்றன் தேசிகா
சுயஞ்சோதியான தன்னைப்பார்க்கப் பிரமானந்த தேசிகா
வேறுபிரகாச மிருக்குதோவென்றீரென்றன் தேசிகா
அறிவுக்கறிவு கொடுப்பதுண்டோ வென்றீர் பிரமானந்த தேசிகா
அறிபொருளாயென்னையனுபவிக்க ஆற்றீரென்றன் தேசிகா
என்னைத்தவிர வேறில்லை யென்றீர் பிரமானந்த தேசிகா
எல்லாமென்றும் வியாபகமென்றீ ரென்றன் தேசிகா
வாக்கியலக்ஷிய பிரம கூடஸ்தர்க்குப் பிரமானந்த தேசிகா
அச்சத்தத்தாலைக்கியங் கூடுமெனச் சொன்னீ ரென்றன் தேசிகா
வாக்கிய வாச்ய ஜீவவீசற்கு பிரமானந்த தேசிகா
எத்தாலைக்கியங்கூடாதெனச் சொன்னீரென்றன் தேசிகா
தத்பதத்வம்பத பிரகூடஸ்தரை பிரமானந்த தேசிகா
ஆசிபத்மானது ஐக்கியங்காட்டு மென்றீரென்றன் தேசிகா
கடமட ஆகாசம் ரெண்டுபோல் பிரமானந்த தேசிகா
கூடஸ்தபிரமமொன்றான நானென்றீ ரென்றன் தேசிகா
இந்தவனுபவந்திடமாகப் பிரமானந்த தேசிகா
சிவோகமென்று இருந்திடச் சொன்னீ ரென்றன் தேசிகா
அந்தவாக்கியம் போல இருக்கையில் பிரமானந்த தேசிகா
யாவையும் யேகபிரமமானே னென்றன் தேசிகா

இந்தநித்திய வார்த்தைக் கந்தகுரு பிரமானந்த தேசிகா
உந்தனுக்களிக்க வொன்றுங்காணே னென்றே னென்றன் தேசிகா
என்னால் செய்யலாவதேதெனில் பிரமானந்த தேசிகா
மன்னுமுன்னடிகளைச் சந்ததம்பணிகிறேனென்றன் தேசிகா
இந்தவாக்கியம் கேட்டவன்றன் குருபிரமானந்த தேசிகா
சொல்லாத தடைமூன்றுந் தடுத்துதவி யென்றீரென்றன் தேசிகா
ஞானமன்றி நின்றதுரைக்க நலமுமோ பிரமானந்த தேசிகா
தானும் பிரமங்குரு நூலால் தோன்றிடினு மென்றன் தேசிகா
அப்படித் தோன்றிய அநுபவம் பிரமானந்த தேசிகா
தடைவந்தால் ஞானந்திடப் படாதென்றீ ரென்றன் தேசிகா
அந்தத்தடைகளை யறியக்கேட்டேன் பிரமானந்த தேசிகா
அஞ்ஞானம் சந்தேக விபரீதமெனச் சொன்னீரென்றன் தேசிகா
இந்தமூன்றுங் கெடுவழியேதென்றேன் பிரமானந்த தேசிகா
சிரவணமனன நிதித்தியால் நீக்கென்றீரென்றன் தேசிகா
அக்கினிகட்டுண்டால் சுடாதவைபோல பிரமானந்த தேசிகா
தடைகொண்ட சித்தினால் பந்தங்கெடா தென்றீ ரென்றன் தேசிகா
பிரமத்தை மறைத்துத் திரிசயங் காட்டுதல் பிரமானந்த தேசிகா
அஞ்ஞானக் குறையென்று அறியவுரைத்தீ ரென்றன் தேசிகா
குருவாக்கியம் நம்பாமல் குழம்புதல் பிரமானந்த தேசிகா
சந்தேகமா மென்று அறியவுரைத்தீ ரென்றன் தேசிகா
ஜெகமெய்ச்சரீரம் நானென்னு மயக்கம் பிரமானந்த தேசிகா
விபரீதமாமென்று அறியவுரைத்தீ ரென்றன் தேசிகா
தத்துவவுபதேசங் குருமுகமாய்க் கொள்ளபிரமானந்த தேசிகா
சிரவண மாமென்று அறியவுரைத்தீ ரென்றன் தேசிகா
உபதேச வசனத்தி லர்த்தந்தெரிதல் பிரமானந்த தேசிகா
மனனமாமென்று அறியவுரைத்தீ ரென்றன் தேசிகா
மனதுதன்னை யநுபூதி ரசத்தாலே பிரமானந்த தேசிகா
நிதித்தியாசன மென்றறியவுரைத்தீ ரென்றன் தேசிகா
எப்போது மிந்நு சந்தானத்தால் பிரமானந்த தேசிகா
தடைநீங்கி முத்தியடைவாயெனச் சொன்னீ ரென்றன் தேசிகா
இந்நாநு சந்தான மெதுவரை யென்றேன்பிரமானந்த தேசிகா
காண்பானுங் காக்ஷியுமொன்றாமட்டு மென்றீரென்றன் தேசிகா

கிரியமற்று நீங்கிடில் பிரமானந்த தேசிகா
அவனேயிவன்முக்தனுமென்றுரைத்திரென்றன் தேசிகா
ஆத்மசொரூப மிவன்முக்தர் பிரமானந்த தேசிகா
விதேகவைகவல்ய மடைந்தவனுமென்றீரென்றன் தேசிகா
அப்படிக்குற்ற முத்தர்குணம் பிரமானந்த தேசிகா
அடைவினில் கேட்க ஆவசைகொண்டேனென்றன் தேசிகா
அவர்கள் நாலுவகையா மென்றீர் பிரமானந்த தேசிகா
பிரமவித்துவான் வரியான்வரிட்டனென்றீரென்றன் தேசிகா
லோகோபகார நிமித்தியமாய்ப் பிரமானந்த தேசிகா
சத்கர்ம பிரமவித்து செய்வாரென்றீரென்றன் தேசிகா
காமாதியிச்சைதன் யாவையும் பிரமானந்த தேசிகா
கணத்தில் பிரமவித்து நீக்குவா னென்றீரென்றன் தேசிகா
வாக்குகாயமிரண்டன்றி பிரமானந்த தேசிகா
மனமுலகில் பிரமவித்தொவ்வானென்றீரென்றன் தேசிகா
வஸ்துநிச்சயமுலகி லேதுரைக்கினும் பிரமானந்த தேசிகா
மறுக்காமல் பிரமவித்திருப்பானென்றீரென்றன் தேசிகா
தன்னனுபவத்தை வெளிவிடாமல் பிரமானந்த தேசிகா
அடக்கொண்டு பிரமவித்திருப்பானென்றீரென்றன் தேசிகா
துரியாதீத மகாமௌனங் கொண்டு பிரமானந்த தேசிகா
ஊமைபோல் பிரமவித்திருப்பானென்றீரென்றன் தேசிகா
பேதகர்மம் பிராப்தம்போல் பிரமானந்த தேசிகா
வெவ்வேறும் விவகாரம் பிரமவித்துக்கென்றீரென்றன் தேசிகா
மாதவ வாணிப வரசாக்ஷியும் பிரமானந்த தேசிகா
ஐயம்புகுதலும் பிரமவித்து செய்வனென்றீரென்றன் தேசிகா
போனதுவரப் போரது பிரமானந்த தேசிகா
நினைத்துவாடி மகிழார் பிரமவித்தென்றீரென்றன் தேசிகா
நிகழ்காலத்தில்வரும் பொருள்களைப் பிரமானந்த தேசிகா
பிராப்தமென பிரமவித்துக் கொள்வானென்றீரென்றன் தேசிகா
உஷ்ணகிரண மமூர்தமாய் பிரமானந்த தேசிகா
விழுதிறங்கினும் புதுமைபாரா னென்றீரென்றன் தேசிகா
மரித்தவன்பிழைத்து வாழ்ந்தாலும் பிரமானந்த தேசிகா
அதிசயமாய் பிரம்வித்து பாராரனென்றீரென்றன் தேசிகா

நன்மைதீமை யிவையென பிரமானந்த தேசிகா
சாக்ஷியான பிரமவித்து சொல்லானென்றீ ரென்றன் தேசிகா
உணவுகேட்டுண்டு சமாதிசெய்பவனைப் பிரமானந்த தேசிகா
பிரமவரனு மென்றுரைக்க லாற்றீரென்றன் தேசிகா
பிறர்கொடுத்தாலுண்டு சமாதிசெய்பவனைப் பிரமானந்த தேசிகா
பிரமவரியானு மென்றுரைக்க லாற்றீரென்றன் தேசிகா

தன்றாலும் பிறராலு முணவேற்காமல் பிரமானந்த தேசிகா
சமாதியில் மேலாம் வரிஷ்டனிருப்பா னென்றீரென்றன் தேசிகா

இந்நால்வகை முத்தரநேக ராகிலும் பிரமானந்த தேசிகா
முத்தியாவர்க்கும் சரியாகுமென்றீரென்றன் தேசிகா
சமாதியிலீடில்லா பிரமவித்துக்குப் பிரமானந்த தேசிகா
நெடுந்துன்ப மனுபவமாகுமெனச் சொன்னீரென்றன் தேசிகா

பின்னைமூன்று முத்தரும் பிரமானந்த தேசிகா
நிரதிசயானந்த மாகவாழ்வானென்றீரென்றன் தேசிகா
ஞானிக்குக் கூடுமோகிரியை யென்றேன் பிரமானந்த தேசிகா
கிரியைசெய்தாலுங் கருத்துவேறே யென்றீ ரென்றன் தேசிகா

ஆகாசமுதற் பூதத்தில் சேராமைபோல் பிரமானந்த தேசிகா
ஞானிகருத்து கிரியையில் சேராதென்றீ ரென்றன் தேசிகா

சீவன்முத்தரைச் சேவித்தோர் பிரமானந்த தேசிகா
மும்மூர்த்திகள் மகிழுதவமுடிந்தவ னென்றீரென்றன் தேசிகா
சீவன் முத்தரைச் சேவித்தோர் பிரமானந்த தேசிகா
பவம்பரிசுத்த மானவனென்றீ ரென்றன் தேசிகா

சீவன்முத்தர் மேலடையும் விதம் பிரமானந்த தேசிகா
விதேகமுத்தி பெறுவாரெனச் சொன்னீரென்றன் தேசிகா
முத்தர்சஞ்சித கர்மத்தைப் பிரமானந்த தேசிகா
ஞானத்தீச்சுட்டு எரிக்கு மென்றீரென்றன் தேசிகா
முத்தராகாமிய கருமங்கள் பிரமானந்த தேசிகா
கிட்டவராமலே யோடிடு மென்றீ ரென்றன் தேசிகா

முத்தர் பிராரப்த கர்மத்தைப் பிரமானந்த தேசிகா
மூன்றுவிதமா யனுபவிப்பா ரென்றீரென்றன் தேசிகா

பிராரத் வானுபவ காலகர்மங்களைப் பிரமானந்த தேசிகா
பூஷண தூஷணை செய்வார் கொள்வா ரென்றன் தேசிகா

சரீரத்திரய மழிய விரங்கேட்கில் பிரமானந்த தேசிகா
ஞானத்தீ காரண டடலைச் சுடுமென்றீ ரென்றன் தேசிகா
காலநியமம் முடிந்தபின் பிரமானந்த தேசிகா
ஸ்தூலதேகம் மிவையாய் விழுமென்றீ ரென்றன் தேசிகா
சாதனத்துக்குரிய சூட்சம தேகப் பிரமானந்த தேசிகா
பிரமசொருபத்தில் நசிக்குமெனச் சொன்னீரென்றன் தேசிகா
முத்தரின் முத்தேக மொழிந்தால் பிரமானந்த தேசிகா
விதேகமுத்தி பெற்றிருப்பானென்றீ ரென்றன் தேசிகா
பிரமானுபவ மிப்போ துதித்ததாய் தோன்றினும்பிரமானந்த தேசி
எப்போதுமுள்ள நித்தியப் பொருளென்றீ ரென்றன் தேசிகா
கானல் நீர்போல பிரபஞ்சமென்றீர் பிரமானந்த தேசிகா
சிளிஞ்சில்வெள்ளிபோல பிரபஞ்சமென்று சொன்னீரென்றன் தே
கந்தர்வ நகரம்போல பிரபஞ்ச மென்றீர் பிரமானந்த தேசிகா
சொர்ப்பன நகரம்போல பிரபஞ்சமெனச் சொன்னீரென்றன் தே
ஆகாசநீலம் போல பிரபஞ்ச மென்றீர் பிரமானந்த தேசிகா
பழுதையில் பாம்புபோல் பிரபஞ்ச மெனச்சொன்னீ ரென்றன் தே
மலடிபிள்ளைபோல் பிரபஞ்சமென்றீர் பிரமானந்த தேசிகா
முயல்கொம்புபோல பிரபஞ்சமெனச்சொன்னீ ரென்றன் தேசிகா
கட்டையிற்கள்ளன்போல பிரபஞ்சமென்றீர் பிரமானந்த தேசிகா
எல்லாவிதத்திலும் பிரபஞ்சம் பொய்யாச்சுதென்றன் தேசிகா
சுத்தசைதன்யமாகிய நான்பரமானந்த தேசிகா
உமதாக்ஞைப்படிக்கு மெய்யாயிருக்கிறேனென்றன் தேசிகா
இந்தவனுபவர் தந்தகுரு பிரமானந்த தேசிகா
உன்பாததூளியைச் சிரசில் வகிக்கிறேனென்றன் தேசிகா
எந்நாளும் வாழியென்றன் குருபிரமானந்த தேசிகா
எந்நாளுமுன்றன் அடியாரும் வாழியென்றன் தேசிகா
உன்வாக்கில் விண்டவேதம் வாழிபிரமானந்த தேசிகா
ஒருநாளு மழியாத பிரமம்வாழியென்றன் தேசிகா

கோறு பிரமானந்த கோறு
நித்தியானந்த கோறுகோலே
கோறு சத்யானந்த கோறு
சந்தியானந்த கோறு கேவல பிரம்மமல

ஊஞ்சல்.

ஓங்கார மானதொரு பலகைதன்னில்
உபநிஷத் வாக்யத்தை யொர்ந்துச்சேர்த்து
நீங்காத நிலையங்கே வளையமாக்கி
நிர்மல பிரமானந்த ராமரூஞ்சல்.

ருக்யசுர்சாம அதர்வணத்தின் சாரமான
சங்கிலியைச் சத்ரூப கோடிதன்னில்
பிரத்தியேகாத்ம பிரமஐக்ய மாக்கிப்பூட்டி
பேச்சிறந்த வஸ்துமய ராமரூஞ்சல்.

ஞானக நிறைந்திருக்கும் சாக்ஷிதானே
சமரசமாய் விளங்குகின்ற பலகைதன்னில்
பரிபூர்ணமானதொரு பாரியோடே
பரமசுக மானபர ராமரூஞ்சல்

சச்சிதமாகவே சாற்றும் சமாதிதன்னில்
தன்மயமாயுற்றசக்தி தானந்தத்தை
உல்லாசமாயறிந்துகொண்டு நின்றபேர்கள்
சின்மயமாய்க் காணும்பொருளாமரூஞ்சல்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஜோதிமயமா யெங்கும் சுயமாய் விளங்குகின்ற
சுத்தனல் லோகுரு நாதா
ஆதியந்த மில்லாத ஆனந்த வடிவான
அறிவல்ல வோகுரு நாதா
பந்தமறுத்தென்னைப் பரமாய் நிறையச்சொன்ன
பாக்கியனே குரு நாதா
வந்தநேக ஜகமாய் உள்ளமலைந்த தெல்லா
மாற்றிவைத்தீர் குரு நாதா
மூலவியாதி தீர முத்தி குளிகைதந்த
மூர்த்தியல்லவோ குரு நாதா
சாலபாரத்திலே சாட்டிக்கொடாமலென்னைக்
காத்து ரக்ஷித்த குரு நாதா

ஆசையென்ற பசாசை யடித்துத்தூரத்திவைத்த
ஆண்டவனே குரு நாதா
கோசமான அஞ்ஞசைக் கொளுத்திநிருகச்செய்த
கோனே ஸ்ரீகுரு நாதா
காமக் குரோதமான கள்ளரை யடித்தோட்டும்
காரண னேகுரு நாதா
நீமை தனையறுத்துச் சின்மய மானந்தந்
தந்தவரல்லோ குரு நாதா
ஐந்து பொறிபுலனை யடக்கியாளச் சொன்ன
ஆண்டவனே குரு நாதா
சிந்தை யறியாத சின்மய நிலைதந்த
தேசிகனே குரு நாதா
சத்துச்சித் தானந்த சாஸ்வதனாகிய
சாமியல்லோ குரு நாதா
உத்தம மாகிய தத்துவ சுகந்தந்த
நித்யரல்லவோ குரு நாதா
அந்தரப் புட்பமிந்த அகில மென்றுரைசெய்த
அற்புதனே குரு நாதா
அஸ்வத்த ரூபமாய்ப் பந்த மறுத்துவைத்த
ஆரியனே குரு நாதா

சுந்தர பியாரிமைகோ -- என்ற மெட்டு.

இராகம்-கரகரப்பிரியா-தா-ம்-ஆதி..

கண்ணிகள்.

சத்துசித்த பிரமானந்த சாமியருள் பாலனடி
சுத்தசித்தி யாய்விளங்கும் சுவாமிஅத் வீதனடி
வேதநான் மறைகள்யாவும் விரித்துரை செய்பவனடி
சாதகர்கள் காதல்கொள்ளும் சாயுச்ய நிலையடி
முக்குணங் கடந்துநின்ற முன்னோனருள் பெற்றவனடி
சிக்குறுமாயை யகற்றிச் சிரோங்கு முத்தனடி
அன்பருக்கு அன்படி ஐம்புலனை வென்றவனடி
துன்புறு வினைகள்யாவுந் தொலைத்த கம்பீரனடி
உத்தமர்க்கு உத்தமனடி ஒர்நிலையிலிருப்பவனடி
பற்றறநிர்வாணனடி பரம கீர்த்தனடி (சத்)

இ-ம்-அடாணா-ரூபகம்-தாளம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

குருபத்தி செய்யாத நெஞ்சாம்
குறைதீர்ந்து வாழப்போமோ

அநுபல்லவி.

வெறுமதியினால்குறை குருவிடம்சொல்லப்போமோ
கர்மமது செய்திட்டாலும் தர்மமதுசெய்திட்டாலும் . (கு)

சரணம்.

வாதிகள் வழக்கத்தாலே பேதித்துமதிமயங்கி
நீதியிழந்தோமே யென்று போதநில்லகாணசுத்த (கு)
சுந்தப்பொய் யென்னுவாழ்க்கை சாரமலேறினாலும்
சந்தமிந்தானந்தமான சாமிகுருபிரமானந்த (கு)

ராமபக்வசோதியா-என்றமெட்டு.
இ-ம்-ஆபோகி-தா-ம்-ஆதி.

பல்லவி.

நாதனைப்பணிமனமே அத்வைதானந்த
நாதனைப்பணிமனமே.

அநுபல்லவி

பாதகங்களைப்போக்கும் பாசபந்தங்கள்நீக்கும்
பரத்தினிற்கொண்டுசேர்க்கும் பரப்பிரமானந்த (நா)

சரணம்.

முக்குணங்கள்நசிக்கும் மும்மலங்கள்தகிக்கும்
நிர்க்குணமே லபிக்கும் நித்தியானந்த (நா)
பொறிபுலன்களடங்கும் பேராம்விர்த்திபொடுக்கும்
திருவடிதன்னிலடங்கும் திவ்யானந்த (நா)
திருக்கூடல்பதிவாசன் திவ்யசூர்யப்ரகாசன்.
மருளகற்றிடும்விலாசன் மவுனவுல்லாசன் (நா)

சாமிவிவேகானந்தா-என்றமெட்டு
இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

சாமிஅத்வைத தானந்தா
சரசசம்பன்ன சற்குணநிற்குண (சா)

அநுபல்லவி.

காமிதங்கடந்த சிங்கம்
கருதும்ராஜயோக வங்கம்
கலந்த தங்கம்
கருவிகரண கவலை கடந்த (சா)

சரணம்

பந்தவினை யகலச் செய்யும்
பக்தர்களி னிடரைக் கொய்யும்
பாலனம் செய்யும்
பரமபுருஷ குருவே சரச (சா)

சாதுசங்கத் தலைவராகி
ஓதுமன்பர்க்கருளுந்தியாகி
பிரமானந்த யோகி
சாலோக சாருப சாமீப சாயுச்யாதீத (சா)

இ-ம்-அடாணா-தா-ம்-சாப்பு.

பல்லவி.

குரு—நாதன் பெருமை நவின்றிட எளிதோ
அத்வைதானந்த (நா)

அநுபல்லவி

சாதகர் காதலால் போற்றுமகிபாலன்
பாதகமலங்களிலிரு வாதனைவிலக்குங்குரு (நா)

சரணம்

வேதநான்மறை யாவுங் கற்றுணர்ந்த
வித்வகுண சீலன் நாளும்
வேண்டுமடியார்க்கு விவரித்தருள்புரி
யோகபரி பாலன்

நீசமுடன்டு நிலையிலுள்ள மேலோன்
நிர்மல நிச்சல நிற்குண நிர்வய
நிரதிசயானந்த (நா)

மங்களம்.

இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்கள ஆர்த்தி செய்வேன் பிரம
மானந்த தேசிகர்க்கு

அநுபல்லவி.

திங்களவி தேவனுகி ஜெகங்களெங்கு மேகனுகி
பவங்கள்போக்குஞ் ஞானுகி வேதங்களொருவடிவான (ம)

சரணம்.

நிர்மலமான தீர்த்தங்கொண்டு அபிஷேகத்து
வர்மஜக வஸ்திரங்கள் தரித்து
தர்மவாசனைகந்த புஷ்பங்களலங் கரித்து
பிர்மாமிருதரஸபான நைவேதனம் நேரா யளித்து (ம)

மனம்வாக்குக் காயம்யாவும் சேர்த்துஒன்று யிருந்து
நினைவாக தினபாவம் சேர்ந்து
கனமாயுள்ளமுருகிக் கம்பீரமாய்ப் பணிந்து
எனையாளுமையனேயென ஏற்கையா யுதிருந்து (ம)

மெய்யான மூர்த்தியிவனாகுமென்றே யறிந்து
கைகளஞ்சலிபந்தஞ் சேர்த்து
துய்யவன் குணமகிமை துல்லிய வடிவை நினைந்து
பொய்வினையாவுமொழிய போதமாய் மனமகிழ்ந்து (ம)

ஷ

மங்களம் பிரம்மானந்த தேசிகா மங்களம் மங்களம்
பவமய மோசனு மங்களம் மோசனு மங்களம்
மமதேசிகா மங்களம் பிரம்மானந்த தேசிகா மங்களம்
ஐயனெனதுளத்தில் அனவரதமு மிருப்போன்
மெய்யனீடேற்றவந்த மூர்த்தி மங்களம்
மூர்த்தி மங்களம் மமதேசிகா மங்களம் பிரமானந்தா (ம
ஸத்யக் ஞானனந்த ஸமரஸ பூர்ணன்
நித்ய நிரஞ்சனன் நிர்மல மங்களம் (ம)
ஸாதுஜனக்க ளனைவோர்க்கு மங்களம்
ஹேதுபூத சாந்திவாக்ய மங்களம் (ம)
பிரமஹஸக பரபிரமானந்தா மங்களம்
ஜனன மரணங்கள் தீரமங்களம் மமதேசிகா மங்களம் (ம)

முற்றிற்று.